வெளியீடு 22-2-99 Issued 22-2-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 1 1998 – தொகுதி 42– எண் 1

**Wednesday the 1st April, 1998 – Volume 42 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

[Price Rs. 3.00

D
Y211, 31'N 98
N98. 42.1
218459.

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 6. | வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி | |
| | திரு. மா. இராமச்சந்திரன் | 54-57 |
| | திரு. சி. ஞானசேகரன் | 57-71 |
| | திருமதி கோமதி சீனிவாசன் | 70-73 |
| | திரு. தங்கம் தென்னரசு | 73-82 |
| | திரு. வை. சிவபுண்ணியம் | 82-90 |
| | திரு. எ. தெய்வநாயகம் | 90-95 |
| | திரு. பி. வெங்கடசாமி | 95-99 |
| | திரு. கு. மனோகரன் | 99-106 |
| | திரு. அ. வெங்கடாசலம் | 106-112 |
| | திரு. மு.பெ. சாமிநாதன் | 112-117 |
| | திருமதி ஆன் டி' மான்டி | 117-119 |
| | திரு. மு. அப்பாவு | 119-126 |
| | திரு. இரா. பொன்னாரு | 126-130 |
| | திரு. ப. மோகன் கந்தசாமி | 130-135 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 135-136 |


218459.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாகக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works** | : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. | **Minister for Transport** | : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. | **Minister for Backward Classes** | : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Forest and Printing** | : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. | **Minister for Housing** | : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information and Publicity** | : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | |
|---|---|
| **21. Minister for Animal Husbandry** | : **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | : **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | : **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | : **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | : **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

17. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செய்லாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
35. திருமதி இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந. பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| 158. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 159. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 160 புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 161. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 162. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 163. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 164. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 165. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 166. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா) |
| 167. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 172. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 174. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 175. மணி, திரு. கோ. சி. | .. | கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி. கே. | .. | பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 179. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |



| | | |
|---|---|---|
| 180. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 181. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 182. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 183. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 184. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 185. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 186. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 188. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 189. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 190. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 191. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 192. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 193. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 194. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 195. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 196. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 197. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 198. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 199. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 200. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 201. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 202. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்

211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

212. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி

213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி

226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே. வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

1-4-1998

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i-iv |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | v-ix |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xi-xii |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xiii-xxiii |
| *1.* | **வினாக்கள்-விடைகள்--** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-44 |
| *2.* | **தகவல் கோரல்--** | |
| | அனுமதி மறுத்த பொருள் பற்றி அவையில் எழுப்புதல் | 45-47 |
| *3.* | **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)--** | |
| | இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, *1998.* | 47-48 |
| *4.* | **தாமிரபரணி பாசன அமைப்பில் சில கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடுதல் குறித்த பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை--** | 48 |
| *5.* | **அறிவிப்பு--** | |
| | உறுப்பினர்கள் அவையில் பேசுவதற்கு நேரம் அளித்தல் | 48-53 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 18, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 ஏப்ரல் 1, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி"*

*ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.*

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 101, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**101—**

**காகித ஆலை அமைத்தல்**

**9512*—**டாக்டர் மு. தேவராஜன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பலூர் மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகளின் கழிவுகளைக் கொண்டு ஒரு காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?*

[1998 ஏப்ரல் 1

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பெரம்பலூர் மாவட்டம் வறுமை நிறைந்த மாவட்டம், வறட்சி நிறைந்த மாவட்டம், வானத்தையே நம்பி வாழ்கின்ற விவசாயிகள் நிறைந்த மாவட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருணையினால் ஏற்கெனவே அங்கு இயங்கிக் கொண்டிருக்கும் சர்க்கரை ஆலையையே நம்பி இலட்சக்கணக்கான மக்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு காகித ஆலை நிறுவுவதன் மூலம் எங்களுடைய பகுதியில் வன வளம் பெருகும், வறட்சி நீங்கும், வறுமையின் கொடுமை நீங்கும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு காகித ஆலையை அமைத்துத்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமையை நீக்கி, வளத்தைப் பெருக்க நான் காகிதத் திட்டம் ஒன்றையும் நிறைவேற்ற விரும்பவில்லை. உள்ளபடியே ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமேயானால், ஆண்டுக்கு குறைந்தது ஒரு இலட்சம் டன் காகிதம் உற்பத்தி செய்கின்ற திறன் வாய்ந்ததாக அந்தத் தொழிற்சாலை இருக்க வேண்டும். அப்பொழுது தான் அரசின் சார்பில் ஒரு காகிதத் தொழிற்சாலையை நிறுவிட முயற்சிகளை மேற்கொள்ள முடியும். அதுமாத்திரமல்லாமல், அதற்குப் பெருமளவு மரம் தேவைப்படும். காகிதக் கூழைத் தயார் செய்வதற்குத் தற்போதைய சூழ்நிலையில் மரப் பற்றாக்குறை ஏற்படக்கூடும். கரும்புச் சக்கையைப் பயன்படுத்திக் காகித ஆலை உருவாக்கலாமென்றால்கூட நான்கு இலட்சம் டன் மூலப் பொருளான கரும்புச் சக்கையும், அத்தகைய தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த ஆயிரம் கோடி ரூபாய் முதலீடும் தேவைப்படுகிறது. இவையெல்லாவற்றையும் விட, மிக முக்கியமாக, காகிதத் தொழிற்சாலைக்குத் தண்ணீர் மிக மிக அவசியம். ஒரு நாளைக்கு 12 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படுகின்றது. எனவே, அத்தகைய பெரிய அளவிலான முதலீடுகள் செய்ய வாய்ப்புகளை உருவாக்கினாலும், தண்ணீர் தாராளமாகக் கிடைப்பதற்கு ஏதுவாக ஆற்றிலிருந்து ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இத்தகைய தண்ணீர் வசதி பெரம்பலூர் பகுதியிலே



1998 ஏப்ரல் 1]

இல்லை என்பதால், பெரம்பலூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே கூட்டுறவுத் துறையிலும், அரசுத் துறையிலும் இயங்கி வருகின்ற சர்க்கரை ஆலைகளுக்கெல்லாம் மத்திய அரசு விதித்திருக்கின்ற செஸ் வரி மிகவும் அதிகமாக இருக்கின்றது. அதனால், ஆலையினுடைய வரிப்பளு அதிகமான காரணத்தினால் அவை மிகுந்த நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, தமிழக அரசு மத்திய அரசுக்கு இதனை எடுத்துச் சொல்லி, செஸ் வரியைக் குறைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி மாத்திரம் அல்ல, இறக்குமதிக் கொள்கையின் காரணமாகக் கூட இந்தியாவிலே, அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலே இன்றைக்குக் காகிதத் தொழில் பெருமளவு இலாபத்திலே இயங்க முடியவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஜனநாயகத்தின் வாயிலாக இருப்பவை பத்திரிகைகள். வரவர பத்திரிகைகளின் விலை உயர்ந்துகொண்டே போகின்றது. பத்திரிகைகளைப் பாமர மக்களும் படிக்கின்ற காரணத்தால் அந்தப் பத்திரிகைகளுக்குக் கிடைக்கின்ற Newsprint quota வரைமுறைகளையெல்லாம் தளர்த்தி அவர்களுக்கு மலிவான விலையிலே காகிதம் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் சார்பாக எடுக்கப்பட வேண்டிய முடிவும், கொள்கையும் ஆகும்.

[1998 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பிரிக்கப்படாத நிலக்கோட்டை தாலுக்காவில், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை என்று ஒன்று இருக்கிறது. அதேபோன்று, அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய அளவுக்கு அங்கே கரும்புச் சக்கை அதிக அளவில் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல; 1989-90-இல், நிலக்கோட்டைத் தொகுதியில், 413 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குப் பணமும் கொடுக்கப்பட்டு. இப்போது அந்த நிலம் சும்மா கிடக்கிறது. ஆகவே, அந்த இடத்தைத் தேர்வு செய்து, அங்கே 'பேப்பர் மில்' ஆரம்பித்தால், அது அரசுக்கு இலாபகரமாக இருக்குமா என்பதையும், அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்குமா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, கரும்புச் சக்கை கிடைத்தாலுங்கூட, தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். அதற்கு, அக்காள் அவர்கள் வழிவகை செய்வார்களானால், அது பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சர்க்கரை ஆலைகளிலிருந்து கழிவாக வரக்கூடிய 'மொலாஸஸ்' நீண்டநாட்களாக, ஆலைகளிலேயே தேங்கியிருக்கிறது. அது வெளியிலே எடுத்து விற்கப்படாமல் உள்ளதால் ஆலைக்கும், அரசுக்கும் வரக்கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது அதேநேரத்தில், அந்தப் பகுதியில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படக்கூடிய வகையிலே, மிகுந்த துர்நாற்றம் ஏற்படுவதுடன், நிலத்தடி நீர் முழுவதும் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த 'மொலாஸஸை எடுத்து விற்பனை செய்வதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.



1998 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், காகித ஆலையைத் துவக்க வேண்டுமென்று சொன்னால், ஆயிரம் கோடி ரூபாய் வேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். ஏற்கெனவே, 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும், மின் உற்பத்தித் திட்டம் துவக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த ஆண்டு, அதாவது குறிப்பிட்ட அந்த நடப்பாண்டில், 5 என்று 1996-லே சொல்லப்பட்டது. ஆகவே, எல்லா சர்க்கரை ஆலைகளிலும், இப்போது மின் உற்பத்தித் திட்டத்தைத் துவக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதையும், அந்தத் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அறிவித்தவாறு அந்தத் திட்டம், இப்போது ஆங்காங்கே உருவாகி, படிப்படியாக நிறைவேறிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில், இராஜபாளையம். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரமாக இருக்கின்றன. மேற்குத்தொடர்ச்சி மலையில் நாணல் அதிகமாக இருக்கிறது: எனவே, அந்த நாணலைப் பயன்படுத்தியும், அந்தப் பகுதியில் தண்ணீர் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், பிளவக்கல் அணை பகுதியில், ஒரு காகித ஆலையைக் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கலாம் என்று அரசு அதிகாரிகள் ஆய்வு செய்தார்கள். ஏற்கெனவே, அங்கே தனியார் காகித ஆலை நல்லமுறையில் இலாபத்தில் செயல்படுகிறது. ஆகவே, அரசு அதிகாரிகள் ஆய்வு செய்ததைச் செயல்படுத்தும் வகையில், அங்கே கூட்டுறவு முறையில் காகித ஆலையை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல,

இப்போது காகிதத் தொழில் சற்று மந்தமான சூழ்நிலையிலே இருக்கிறது. அதனைக் கருத்திலே கொண்டு, கூட்டுறவு முறையிலே அங்கு ஒரு காகித ஆலையை நிறுவுவது பற்றி, பிறகுதான் பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது, இறக்குமதிக் கொள்கை, தொழில் வளர்ச்சியிலே ஒரு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எத்தகைய பாதிப்பை, எத்தகைய தொழில் துறைகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அறிவிக்க அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, நம்முடைய புகளூர் காகித ஆலையை மாத்திரம் எடுத்துக் கொண்டால், 1996-97-இல் மொத்த உற்பத்தி 135 கோடி ரூபாய். அதன் நிகர இலாபம் 17.38 கோடி ரூபாய்தான். இது எப்படி என்று பார்த்தால் 135 கோடி ரூபாய் அளவுக்கு, காகித உற்பத்தி ஆகியிருக்கிறது. ஆனால் அதை விற்கின்ற விலையைப் பொறுத்து 17.38 கோடி ரூபாய்தான் அவர்களுக்கு நிகர இலாபமாகக் கிடைக்கிறது. ஏராளமான காகிதம் வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி ஆகிறது என்ற காரணத்தினால், அதனுடைய விலை குறைவாக ஆகி, நாமும் போட்டிபோட்டுக் கொண்டு, விலையைக் குறைத்து விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தப் பாதிப்பைத்தான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.102, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**102—**

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

*1173—**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாசரேத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாசரேத்திலிருந்து 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இரு தீயணைப்பு நிலையங்கள், திருவைகுண்டத்தில் ஒன்றும், சாத்தான்குளத்திலே ஒன்றும் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், புதிதாக ஒன்று தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதியிலும், நாசரேத்திலும் சுமார் 50,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே கூட்டுறவு நூற்பாலை ஒன்று இருக்கிறது. 4000 பேர் படிக்கின்ற கல்லூரி ஒன்று இருக்கிறது. பெட்ரோல் பங்க் ஒன்று இருக்கிறது. சுமார் 5000 பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமைத்துத் தருவீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க, அந்த இடத்திலே மக்கள் தொகை 50,000-க்கு மேலே இருக்க வேண்டும். 25 கி.மீட்டருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற அளவிலே இருக்க வேண்டும் என்றுதான் விதியிலே இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் நாசரேத் பகுதியிலே வாழ்வதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் எனக்குக் கொடுத்துள்ள கணக்கின்படி திருச்செந்தூர் தொகுதியிலுள்ள நாசரேத் ஒரு தேர்வுநிலை பேரூராட்சியாகும். அந்தப் பேரூராட்சியின் மக்கள்தொகை 15,732 தான். ஒருவேளை 15 thousand என்பது 50 thousand என்று அவர் காதிலே விழுந்ததா அல்லது தன்னுடைய தேவைக்கேற்ப வசதியாக அதை மாற்றிக் கொண்டிருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. இதில் எது சரி என்பதைத் தெரிந்து கொண்டு, பிறகு அதுபற்றி கவனிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

[1998 ஏப்ரல் 1

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயில்களின் சரணாலயம் என்று அழைக்கப்படுகிற, மலைமீது பிரசித்திபெற்ற முருகர் கோயில் கொண்டு விளங்குகிற எனது தொகுதியான விராலிமலையில் தீயணைப்பு நிலையம் அமைக்க முருகரின் தந்தை சிவபெருமானின் பெயரை தன் பெயராகக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று பணிவோடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலையிலே மயில்கள் நிறைய உலவுகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்ததைப்போல எல்லோருக்கும் தெரியும். எனவே அங்கு செல்கின்றவர்களுக்கு தீயணைப்பு நிலையம் தேவைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில் தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சிறப்புச் செயலாளராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய திரு. இராமன் அவர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது, 75 சென்ட் இடத்தை வால்பாறையில் ஒதுக்கித் தந்தார்கள். ஆனால் இதுவரையில் அங்கே கட்டடம் கட்டப்படவில்லை. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து வால்பாறையில் தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது நினைவூட்டி இருப்பது உண்மையானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே பதிலளிக்கும்போது ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்றால் சுமார் 50,000 மக்கள் தொகையும், 25 கி.மீட்டருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற அளவிலும் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது என்று



1998 ஏப்ரல் 1]

கூறினார்கள். எனது தருமபுரி தொகுதியைப் பொறுத்தவரையில் தருமபுரி ஒன்றியம், நல்லம்பள்ளி ஒன்றியம், தருமபுரி நகரம் என்று சுமார் 3½ இலட்சம் மக்களுக்கு ஒரு தீயணைப்பு நிலையம்தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஒரு ஒன்றியத்திலே சுமார் 1½ இலட்சம் பேருக்கு மேலே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50,000 பேருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் வழங்கிட முடியாவிட்டாலும், தருமபுரி ஒன்றியத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையமும், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையமும், அதைப் போன்று மாநிலத்திலே இருக்கும் ஒன்றியங்களுக்கு எல்லாம் ஒரு தீயணைப்பு நிலையம் வீதமும் வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கூற்று சரியாக இருக்குமேயானால் அது பற்றி ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆட்சி வந்தவுடன், முதல் பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே சேரன்மகாதேவி ஊருக்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை நம்முடைய அரசு வழங்கியது. அந்தத் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே, அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், அவசரத் தேவைக்காகத் தீயணைப்பு நிலையங்கள் வழங்கப்படுகின்றன. எனவே, அவை வாடகைக் கட்டடங்களிலேதான் இருக்க நேரிடுகின்றன. படிப்படியாக புதிய கட்டடங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த முயற்சியிலே உறுப்பினருடைய கோரிக்கையும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியில், தியாகதுர்கம்

ஒன்றியத்தில், பல ஆண்டு காலமாக மக்களுடைய கோரிக்கையாக இருந்துவரும் தீயணைப்பு நிலையம் தொடங்கப்படாமல் உள்ளது. சமீபத்தில் சில மாதங்களுக்கு முன்னால் பெய்த பெரு மழையின்போது மின்னல் தாக்கி 3 சிறுவர்கள் இறந்தபோதும், பக்கத்தில் இருந்த மரங்கள் எல்லாம் தீப்பிடித்து எரிந்தபோதும், தீயணைப்பு நிலையத்தைத் தொடர்பு கொள்ள கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணத்தாலே உடனடியாக அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை. அங்கே மூன்று சிறுவர்கள் இறந்ததோடு, பக்கத்தில் இருந்த மரம், செடி, கொடிகள் எல்லாம் தீப்பிடித்து எரிந்த காட்சியை நாங்கள் கண்டோம். எனவே எங்களது நீண்டநாள் கோரிக்கையான தியாகதுர்கம் தீயணைப்பு நிலையம் நடப்பு ஆண்டில் தொடங்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய பகுதியிலே ஒரு காவல் நிலையம், ஒரு தீயணைப்பு நிலையம் அமைய வேண்டுமென்ற ஆர்வமும், ஆவலும் இருப்பதை நான் நன்றாக உணர்கிறேன். இவை பற்றி எல்லாம் தனி அக்கறை அவர்களுக்கு இல்லாத காரணத்தாலேதான் மற்றவர்களுடைய கேள்விகளிலே நுழைந்து கொள்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். எனவே, தனியாக அவர்கள் அதைப்பற்றி எனக்கு விண்ணப்பம் தந்தால் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தால்தான் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த முடியும் என்று சொன்னார்கள். நகரத்திலிருந்து அந்த 25 கிலோ மீட்டர் தூரம் வருவதற்கு முன்பாகவே பிடித்த தீ அணைந்து விடுகிறது. ஆகவே, அந்தத் தூர அளவை மாற்றி, 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்று ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு வண்டி வருவதற்குள் தீ அணைந்து





விடுகிறது என்கிற காரணத்தினால்தான் 25 கிலோ மீட்டர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 மற்றும் 1997-98 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட தீயணைப்பு நிலையங்களுக்கு தீயணைப்பு வண்டிகள் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தேவையான உபகரணங்கள், தீயணைப்பதற்கான உபகரணங்கள், வெள்ள மீட்புப் பணிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவற்றை உடனடியாக வழங்குவதற்கான முன் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது என்று இந்த யூகங்களை வைத்துக் கொண்டு நான் பதிலளிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு குறைபாட்டைப் பற்றி எடுத்துக் கூறினால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103. திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

## 103—

## முன்னாள் படை வீரர்கள் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

*8841—**திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பில் முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்னாள் படைவீரரைச் சார்ந்தோரின் குழந்தை ஒருவருக்கு அரசு ஆணை எண் 1161, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த

(பணி.ஆர்) துறை. நாள் 22-11-1984-இன்படி வேலை வாய்ப்பகம் மூலம் பரிந்துரை செய்யப்படும் பணிகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் படைவீரர்களுடைய குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்கப்படுவதுபோல், கலப்புத் திருமணம் செய்தோருடைய பிள்ளைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூல வினாவோடு தொடர்புடைய துணை வினாவா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி அனுப்ப வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**104—**

## பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்தல்

*10379—**திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியப் பகுதியில் பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-50

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மிகவும் பின்தங்கிய





விவசாய மக்கள் வானம் பார்த்து வாழும் ஒன்றியப் பகுதியாகும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதியிலே ஒரு தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க மறுபரிசீலனை செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பயிலகம் எனும், Polytechnic அமைக்க கல்லூரி அளவிற்கு அதற்கு முதலீடு தேவைப்படுகின்ற காரணத்தினால் பல ஆண்டுகளாக அரசு சார்பாகத் தொடங்குகிற முறை கைவிடப்பட்டிருக்கின்றது. தனியார் துறையில் அவர்களாக முன்வந்து, உரிய இடவசதியோடு, கட்டட வசதியோடு தொடங்க முன்வருவார்களேயானால், அது பரிசீலிக்கப்பட்டு மத்திய நிர்வாகத் துறையைச் சார்ந்த `AICTE` என்ற அமைப்புக்கு அனுப்பப்பட்டு அவர்களின் இசைவோடு தொடங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. அப்படி சேலம் மாவட்டத்தில் கரியாப்பட்டி என்ற இடத்தில் சுயநிதி அடிப்படையில் ஒரு தொழில் நுட்பப் பயிலகம் (Polytechnic) தொடங்குவதற்கு தடையின்மைச் சான்றிதழ் தமிழக அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. கே. சுப்பராயன், திரு. செங்கை சிவம், திரு. டி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**105—**

## பான்பராக் பாக்கு சாப்பிடுவதைத் தடுத்தல்

*5130—**திரு. கே. சுப்பராயன்:**

**திரு. செங்கை சிவம்:**

**திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பான்பராக் பாக்கு சாப்பிடும் பலரது உடல் நலம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பான்பராக் உண்ணுவதால் சப் மியூகஸ் பிப்ரோசிஸ் (Sub Mucous Fibrosis) என்ற வியாதி வருகிறது. இது புற்று நோய் வருவதற்கு முன் அறிகுறியாகும்.

(ஆ) அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் ஆராய்ச்சி மருத்துவமனை, காஞ்சிபுரம் மற்றும் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் இது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, சமுதாயப் பாதுகாப்புத் திட்டத்தின் வழியாக மக்களுக்கு பல் மருத்துவ முகாம்களில் அறிவுரை வழங்கப்படுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய உயிரின்மீது விளையாடுகிற உரிமை எந்தத் தனி நபருக்கும் இல்லை. பான்பராக் என்பது அவன் உயிரோடு வாழ்வதையே கேள்விக் குறியாக்குகின்றது என்பது அறிவியல் பூர்வமான உண்மையென்றால், சமூகத்தின் உயிரோடு விளையாடுகிற ஒரு தனி நபருக்கு அந்த உரிமையை வழங்குவது சட்ட ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் தவறானது ஆகும். எனவே, தமிழகத்திலே பான்பராக் விற்கிற உரிமையைத் தடை செய்ய மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கம் பான்பராக்கைத் தடை செய்வது என்பது இயலாது. உயிரோடு விளையாடுவது என்பது பான்பராக் மட்டுமல்ல, உயிரோடு விளையாடுவதுதான் சிகரெட் பிடிப்பது, உயிரோடு விளையாடுவதுதான் குடிப்பது. எனவே போதை தருகின்ற இப்படிப்பட்ட வஸ்துக்களை யார் தயார் செய்தாலும் அதைப் பயன்படுத்துகிறவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளிடத்திலே இந்த அறிவுரைகள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.



**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பான்மசாலாவை உபயோகப்படுத்துவதன் மூலம் வாயிலுள்ள தசைகள் சட்டைப் பொத்தான் அளவிற்குச் சுருங்கி விடுகின்றன. இதனாலே அமைச்சர் அவர்கள் கூறியது போல 'சப்மியூகஸ் பிப்ரோசிஸ்' என்ற வியாதியும் ஏற்பட்டு, அதனாலே பெரும் அளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள். அமெரிக்காவிலுள்ள 'ஜான் காபின்ஸ்' என்ற பல்கலைக்கழகம் ஆராய்ச்சி செய்து, 19 கம்பெனிகள் உற்பத்தி செய்கின்ற பான்மசாலாவினால் புற்று நோய் வருகிறது என்றும், அதாவது 400 சதவிகிதம் அளவிற்கு மிக அதிகமாக வருகிறது என்றும், குடிக்கிற மது பானங்களை விட இது மிக மோசமானது என்று கண்டுபிடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. மாணவ மணிகள், குறிப்பாக 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் இதைப் பெரும் அளவிற்கு உபயோகப்படுத்துகின்றார்கள். மனித உயிர் மிகவும் போற்றத்தக்கது. எனவே, இதைக் கருத்திலே கொண்டு தமிழகத்திலே பான்பராக் விற்பதைத் தடை செய்ய அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் தங்களுடைய பேச்சு ஆற்றலால்தான் மாணவர்களிடத்திலே இப்படிப்பட்ட விழிப்புணர்ச்சியை உருவாக்க முடியும். இந்த நோய் வந்தால் நிச்சயமாக Cancer வரும் என்பது உண்மை. இது ஏற்கெனவே ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, இந்த நோய் வருவதற்கு முன்னர் வாயைத் திறக்க முடியாமல் நோயாளிகள் துன்பப்படுவார்கள். உண்ணவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் துன்புறுவார்கள். காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் சென்னை பல் மருத்துவக் கல்லூரியிலே இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எனவே, முடிந்த வரையில் நம் நாட்டில் உள்ள பத்திரிகைகளும், தொலைக்காட்சி, வானொலி போன்ற பிரச்சார சாதனங்களும், பான்பராக்கைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்திலே மாணவர்களுக்கும், மக்களுக்கும் எப்படிப்பட்ட துன்பங்கள் எல்லாம் ஏற்படும் என்பதை வெளியிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பான் பராக் என்பது ஏற்கெனவே போதை ஊட்டிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு வஸ்து. இன்னொரு பாக்கையும் இப்போது அறிமுகம் செய்திருக்கிறார்கள். 'மாணிக்சந்த்' என்பது அதனுடைய பெயர். இது எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. அதுவும் குறிப்பாக, கல்லூரிகள் முன்னால் இருக்கக்கூடிய கடைகள், பள்ளிகளுக்கு முன்னால் இருக்கக்கூடிய கடைகள், இங்கே எல்லாம்தான் அதிகமாக வியாபாரம் செய்யப்படுகிறது. அடுத்தது, 'கணேஷ்' என்ற பெயர் கொண்டது. புகையிலை வகையைச் சேர்ந்தது. இதைச் சாதாரணமாகக் கையிலே வைத்து நசுக்கி, வாயிலே போட்டுச் சாப்பிடுகிறார்கள். இவையெல்லாம் போதையூட்டக் கூடிய வஸ்துக்கள், இதனால் மனித உயிருக்கு ஏற்படக் கூடிய அபாயம் பெரிதானது. எனவே, அரசாங்கத்தின் மூலம் தக்க விளம்பரத்தைச் செய்து, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினால்தான் இதைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, போதை தரக்கூடிய இந்த மூன்று வஸ்துக்களையும் தடை செய்வதற்கு என்ன வழி இருக்கிறது என்பதை அரசு மறுபரிசீலனை செய்து, இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய இந்தப் பழக்கத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் உலக வங்கியும், மத்திய அரசும், மாநில அரசாங்கத்திற்கு மானியத்தையும், விளம்பரம் செய்வதற்குத் தேவையான பணத்தையும் தருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில் உலக வங்கியோடு தொடர்பு கொண்டு, இப்படி உயிரைப் பறிக்கக்கூடிய பான்பராக், உறுப்பினர் சொன்ன 'மாணிக்சந்த்' போன்ற பாக்குகளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு அரசின் மூலம் விளம்பரம் செய்ய முடியுமா என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**106—**

**அரசு மருத்துவமனைக்கு அவசரக் கால ஊர்தி வழங்குதல்**

*10024—**திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, சுவாமிமலை, அரசு மருத்துவமனைக்கு அவசர கால ஊர்தி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் அவசர கால ஊர்திகள் வழங்க வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**107—**

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

*6013—**திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றம் வட்டம் புதிதாக 1-1-1997-ல் தொடங்கப்பட்ட வட்டமாகும். தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 108...

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** துணை வினா யாரும் கேட்கவில்லையா?

[1998 ஏப்ரல் 1

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கும் திருக்கழுக்குன்றத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

வினா எண் 108, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**108—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

*4719—**திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, திருமலைக்கேணியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருமலைக்கேணி கிராமத்தின் மக்கட் தொகை 1992ஆம் ஆண்டில் 200 ஆகும். தற்போதைய மக்கட் தொகை சுமார் 300 ஆகும். இங்கு மூன்று அடி குழாய்கள் அமைக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன. இக்கிராமத்திற்குக் குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 109, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**109—**

**ஊரக விரிவாக்க மையம் ஏற்படுத்துதல்**

*9788—**திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 1]

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ஊரக விரிவாக்க மையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ஊரக விரிவாக்க மையம் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கின்ற வகையில் குற்றாலத்தில் ஊரக விரிவாக்க மையம் ஏற்படுத்துவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழ்நாட்டில் பவானிசாகரில் ஒன்றும், கிருஷ்ணகிரியில் ஒன்றும், எஸ்.வி. நகரத்தில் ஒன்றும், பட்டுக்கோட்டையில் ஒன்றும், கல்லுப்பட்டியில் ஒன்றும், ஆக 5 பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ளவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள். கிருஷ்ணகிரியில் தருமபுரி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ளவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். எஸ்.வி. நகரில், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர்; அதுபோல பட்டுக்கோட்டையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை; கல்லுப்பட்டியில், மதுரை, தேனி, இராமநாதபுரம், திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ளவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். எனவே, இந்தப் பயிற்சி நிலையங்களில் எல்லாம் போதுமான அளவுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதில் ஒன்றும் சங்கடம் இல்லை. ஆகையினால் குற்றாலத்தில் உள்ளவர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்குப் போகலாம்.

முற்பகல் 10-00

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பதவியேற்று ஏறக்குறைய 1½ ஆண்டுக்காலம்

ஆகியும் இன்னும் ஊராட்சி ஒன்றிய நடைமுறை நூலும் ஊராட்சி மன்ற நடைமுறை நூலும் திருத்தியமைக்கப்படாமல் உள்ளன. ஆகவே, அந்த நூல்களையெல்லாம் திருத்தியமைத்து உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூட பதில் அளிக்கிறேன். ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் முடிவுகளின்படி, ஏதாவது அதிகாரங்கள் வழங்கப்படுமானால், அதையொட்டிய முடிவுகளைச் சேர்த்து நூல்களை வெளியிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 110, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**110—**

## சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் விற்பனை

*7788*—**திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் நேரடியாகப் பணம் செலுத்துவோருக்கு ஒரு விலையும், மானியம் பெறுவோருக்கு ஒரு விலையும் என விற்பதால் அனைவருக்கும் ஒரே விலையிட்டு விற்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளின்படி பி.வி.சி. பைப், லேட்டரல பைப், டிரிப்பர் மற்றும் வடிகட்டி ஆகியவற்றைத் தயாரிக்க ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெற்ற உற்பத்தியாளர்கள் மட்டுமே அரசு மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.





சொட்டு நீர்ப்பாசன அமைப்பின் பாகங்களின் விலையும் மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. இதை மாநில அரசு மாற்றியமைக்க வழியில்லை. விவசாயிகள் நேரிடையாக சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் வாங்கும்பொழுது அவை ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெறாத பொருட்களாக இருந்தால் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைவிடக் குறைவாக இருக்க வாய்ப்புள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அமைக்கப்படும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பில் உள்ள முக்கிய பாகங்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரை உள்ளதால் அவற்றை மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையில்தான் வழங்க இயலும். எனவே, துறை மூலம் வழங்கப்படும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புக்கும் விவசாயிகள் நேரிடையாக வாங்கும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புக்கும் ஒரே விலையாக அமைய இயலாது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் நாளுக்குநாள் கீழே போய்க் கொண்டிருக்கிறது. அந்த நிலையிலே, நாட்டின் உயிர்நாடியாக உள்ள விவசாயிகளுக்கு, சொட்டுநீர்ப் பாசனத்திற்கு இந்தச் சலுகை வழங்கப்படுவதால் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால், இந்தக் கருவிகளை வாங்குமிடத்தில் நேரடியாகப் பணம் கொடுத்தால் குறைவான விலையும், அதேநேரத்தில் 'சப்சிடி', அதாவது சலுகை விலையில் அரசாங்கம் பரிந்துரை செய்கிறது என்று சொன்னால் அதற்கு ஒரு விலையும் நிர்ணயித்து, இரண்டு விலைகளைப் போட்டு பொருள்களை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் ஐ.எஸ்.ஐ முத்திரை இருக்கின்ற சொட்டுநீர்ப் பாசனக் கருவிகளை வாங்குவதில் ஆட்சேபணையில்லை. ஆனால், விலையை, இரண்டுப் பகுதிகளாகப் பிரித்து நேரடியாகப் பணம் கொடுக்கிறவர்களுக்கு ஒரு விலை, மானியத்திலே வாங்குகிற விவசாயிகளுக்கு ஒரு விலை என்று நிர்ணயித்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி விற்கின்ற வியாபாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.எஸ்.ஐ. முத்திரையிடப்பட்ட கருவிகளை வாங்கும்போது, மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குத்தான் தருகிறார்கள். ஆனால், முத்திரையிடப்படாத தரம் குறைவாகத் தயாரிக்கக்கூடிய அந்தப் பொருள்களை வாங்கும்போது கொஞ்சம் விலை குறைவாக விற்கப்படுகின்றன. ஆகவே, தரம் குறைவான பைப்புகளை, பொருட்களை விவசாயிகள் வாங்க மாட்டோம் என்று

உறுதி எடுத்துக்கொண்டு, ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட பொருட்களை மட்டுமே, மத்திய அரசு அங்கீகரித்தப் பொருட்களை மட்டுமேதான் வாங்குவோம் என்று விவசாயிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால், இந்தப் பிரச்சினை எழாது என்று கருதுகிறேன். இருந்தாலும், இதுபோன்ற பிரச்சினைகள் குறித்த புகார் வந்தால் உடனடியாக ஏன் இப்படி விலை வித்தியாசமாக இருக்கிறது? அதன் தரம் என்ன என்பதை வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விசாரித்து நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

*முற்பகல் 10-05*

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker Sir, may I know from the Hon'ble Minister for Agriculture, the limit of the subsidy being given by the Government of Tamil Nadu and Central Government to those who instal drip irrigation system?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சப்சிடியைப் பொறுத்தவரை ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் வரை நாம் தருகின்றோம். அதைப் போல ஒரு விவசாயியிடம் 2 ஹெக்டேர் இருந்தாலும், 3 ஹெக்டேர் இருந்தாலும், 5 ஹெக்டேர் இருந்தாலும், எத்தனை ஹெக்டேர் இருந்தாலும், அவர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் வீதத்திலே சப்சிடி இப்போது நாங்கள் வழங்குகிறோம். சொட்டு நீர்ப் பாசன முறை அமைப்பதிலே இடைவெளி விட்டு, 4 அடிக்கு 4, 5 அடிக்கு 5, 6 அடிக்கு 6, 8 அடிக்கு 8, 10 அடிக்கு 10 என்று போடுவதற்கு, ஏற்ற வகையிலே இந்த மானியத்தைக் குறைத்துக் கொள்கின்றோம். ஆகவே, இதற்கு இவ்வளவுதான் என்று நிர்ணயம் இல்லை. எவ்வளவு வேண்டுமானாலும் இந்த சப்சிடி விவசாயிகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.எஸ்.ஐ. பதிவு செய்த கம்பெனிகள் மூலமாக சப்ளை செய்கின்ற பி.வி.சி. பைப்புகள் நாமக்கல் மாவட்டத்தில் தரம் குறைந்து இருக்கின்றன; வெடித்து இருக்கின்றன என்று விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்து, அதன் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் ஒரு மகஜர் கொடுத்து, அந்த பைப்புகளை மாற்றித்



தருவதாக அந்த கம்பெனி கூறியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நேரடியாக ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்; அந்த பைப்பு விஷயத்தில் மாவட்ட ஆட்சியருக்கு அமைச்சர் அவர்கள் அறிவுரை கூறி இருக்கிறார்கள். அந்த பைப்புகள் கூடியவிரைவிலே மாற்றிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அதுபோன்ற புகார் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. இப்போதும் அவர் அதைப்பற்றி விவரமாக எழுதிக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். கேள்வி நேரத்தில் இப்படி ஒரு குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மானியத்தில் பி.வி.சி. பைப்பு கொடுக்கும்போது, அதை 2" அல்லது 2 ½" பி.வி.சி பைப்பாகத்தான் தருகிறார்கள். மழைக் காலத்தில் கேணியில் தண்ணீர் மேலே வரும்போது, பிரஷர் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மண்ணுக்குள் பதிக்கின்ற பைப் அதைத் தாங்காமல் வெடித்து விடுகின்றது. ஆகவே, அதை மாற்றி 4" பைப்பாக, அமைத்து விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்னது சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்புப் பாசனம் முறை பற்றியது. ஆனால், உறுப்பினர் கேட்டது வேறு. அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 111, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**111—**

## தோட்டக்கலை அபிவிருத்தி அலுவலகம் அமைத்தல்

* 9456—**திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டியில் ஒருங்கிணைந்தத் தோட்டக்கலை அபிவிருத்தி அலுவலகம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒருங்கிணைந்தத் தோட்டக்கலை அபிவிருத்தி அலுவலகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 112, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**112—**

## மாம்பழத்து அணை கட்டும் திட்டம்

*10018—**திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, மாம்பழத்து அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அனுப்பிய திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாநில திட்டக் குழுவின் பரிந்துரையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அது வந்த பிறகு, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது இந்த மாமன்றத்தில் 1981 ஆம் ஆண்டில்—இன்றைய ஆளும் கட்சியினுடைய மாண்புமிகு அமைச்சர்களும், எம்.எல்.ஏ.-களும் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், நான் இந்தக் கோரிக்கையை இங்கே வைத்து இருந்தேன். ஆண்டுகள் இவ்வளவு தாண்டியும், இப்போதுதான் அது அமலாகக்கூடிய ஒரு நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எனவே, இந்த நிதி ஆண்டில் அது ஏற்றுக்கொள்ளப்படுமா, அமலாக்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, கல்குளம் வட்டத்தில் மாம்பழத்தாறு அணை கட்டப்படுவது என்பது நீண்டநாட்களாகக் கேட்கப்பட்டு வருகின்ற திட்டம். 1989-லே கலைஞர் அவர்களின் ஆட்சி நடைபெற்றபோது இந்த மாமன்றத்தில் திரு. நூர் முகம்மது என்ற உறுப்பினர், நூறு தடவையாவது இதைப் பற்றிக் கேட்டிருப்பார். இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றவேண்டும் என்றுதான் நினைக்கிறது. ஆனால் Benefit cost ratio சரியில்லை என்று நில நிர்வாக ஆணையாளர் மறுத்திருக்கிறார். எல்லா திட்டத்திற்கும் Benefit cost ratio வை எதிர்பார்க்கக் கூடாது, ஆனால் மக்கள் அடைகின்ற பலனைத்தான் எதிர்பார்க்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் ஆணையிட்ட காரணத்தால்தான் இதனை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாநிலத் திட்டக் குழுவிடமிருந்து பரிந்துரை வந்தபிறகு இத்திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி நிதிநிலைமைக்கேற்ப அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. சைதை கா. கிட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**113—**

## பேருந்து நிலையம் அமைத்தல்

*7742—**திரு. சைதை கா. கிட்டு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 1

சென்னை, சைதாப்பேட்டையில் பேருந்து நிலையம் அமைக்க துரித நடவடிக்கை எடுத்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, சைதாப்பேட்டையில் பேருந்து நிலையம் அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலம் சமன்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 24-3-1997-ல் கேட்கப்பட்டது. இடையிலே இந்தப் பணி வேகமாக நடைபெற்று முடியும் தருவாயில் இருக்கிறது. இந்தப் பணியை வேகமாகச் செய்து முடித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கக் கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், புறநகர் பேருந்துகளுக்காக, கோயம்பேடு வளாகத்தில் ஒரு புதிய பேருந்து வளாகம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல், பாரிமுனையிலும் அந்தப் பேருந்து நிலையத்தைச் சீரமைப்பதற்கான முயற்சிகளை மாநகராட்சியின் உதவியோடு போக்குவரத்துத் துறை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 114, திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 1]

**114—**

**சங்கரநாராயணசுவாமி திருக்கோவிலுக்கு யானை வழங்குதல்**

*4544—**திரு. சொ. கருப்பசாமி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரநயினார் கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவிலுக்கு ஒரு யானை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இத்திருக்கோவில் சுவாமி தேருக்கு இரும்புச் சக்கரம் பொருத்தப்பட்டதைப் போல அம்மன் தேருக்கும் இரும்புச் சக்கரம் பொருத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொள்ளாச்சி இந்திராகாந்தி வன உயிரியல் சரணாலயத்திலிருந்து இரண்டரை வயதுடைய பெண் யானை 27-7-1997 அன்று சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலுக்கு வாங்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) யானையின் பெயர் வடமொழியில் இருப்பதால் அதை விட்டுவிட்டுப் படித்தேன்.

(ஆ) அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலின் அம்பாள் திருத்தேருக்கும், இணைப்புக் கோயிலான கரிவலம்வந்தநல்லூர் அருள்மிகு பால்வண்ணநாதசுவாமி திருக்கோயிலின் திருத்தேருக்கும், ஆக இரண்டுக்கும் சேர்த்து புதிய தேர்ச் சக்கரங்கள் மற்றும் அச்சுகள் பொருத்திடும் பணிக்கென ஒன்பது இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 115, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**115—**

## நியாயவிலைக் கடைகளில் அரிசி வழங்குதல்

***5894—டாக்டர் ஆ. ஞானசேகரன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் இருபது கிலோ அரிசி ஒரே சமயத்தில் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், இதனைத் தவிர்க்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இவ்வாறான நிலை நடைமுறையில் எங்கும் இல்லை. அரசு ஆணை எண் 147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 23-5-1997-ன்படி ஒரு யூனிட்டுக்கு (பெரியவர்) 4 கிலோ வீதமும், அரை யூனிட்டுக்கு (சிறியவர்) 2 கிலோ வீதமும், மிகச் சிறியவர்களுக்கு அரை கிலோ வீதமும், இந்த அடிப்படையில், ஒரு குடும்ப அட்டைதாரருக்குக் குறைந்தபட்சமாக 12 கிலோவும், அதிகபட்சமாக 20 கிலோவும் ஒரேசமயத்தில் வழங்கப்படுகின்றன. குடும்ப அட்டைதாரர்களின் பொருளாதார நிலை காரணமாக, அவர்களே விரும்பினால் மட்டுமே, ஒரு தவணையிலோ இரண்டு தவணைகளிலோ அவரவர்களுக்குரிய அளவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சில நியாயவிலைக் கடைகளில் இதுமாதிரியான புகார்கள் என்னிடம் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் இந்த வினாவை எழுப்பினேன். அவ்வாறு தவறு செய்கின்ற பணியாளர்களின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உணவுத் துறையில் கிட்டத்தட்ட 100 கூட்டங்களுக்கு மேலாக நடத்தப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் நேரடியாக கலந்துபேசி முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 15-ஆம் தேதி வரையில் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது மாவட்ட வழங்கல் அதிகாரிகள் 3-ஆம் தேதியிலிருந்து 7-ஆம் தேதிக்குள்ளாக மாதாந்திர ஒதுக்கீட்டு அளவைத் தரவேண்டுமென்றும், அப்படித் தரப்படுகின்ற பொருட்களை, அவர்கள் குறியீடு நிர்ணயித்ததற்கு முன்பாகவே முன் மாத ஒதுக்கீட்டின் அடிப்படையில 65 சதவீதப் பொருட்களை 26-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதிக்குள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இப்படி நடைமுறைப்படுத்தப்பட்டு, கிட்டத்தட்ட 6, 7 மாத காலமாக 90 சதவீதம் பொருட்கள் பத்தாம் தேதிக்குள்ளாகவே ஒழுங்காக ஆங்காங்குள்ள கடைகளுக்குச் சென்றடைகின்றன.

ஏற்கெனவே 23,225 கடைகள் இருக்கின்றன. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பகுதி நேரக் கடைகளாகவும் முழுநேரக் கடைகளாகவும் 2,000 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் கிட்டத்தட்ட 25,000 கடைகளுக்குமேல் இருக்கின்றன. எங்காவது ஒருசில இடங்களிலே தவறுகள் நேருமானால், அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்விப்பட்டேன் என்று சொல்லாமல், குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் நிச்சயமாக ஓரிரு நாட்களில் அது சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள குடும்ப அட்டைகளில் மாதம் எத்தனை அட்டைகளுக்கு 12 கிலோ அரிசியும், எத்தனை அட்டைகளுக்கு 16 கிலோ அரிசியும், எத்தனை அட்டைகளுக்கு 20 கிலோ அரிசியும் வழங்கப்படுகின்றது என்பதை அறிவிக்க முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சரியான விடை என்னிடம் தற்போது இல்லை. ஆனால், இப்போது புதிதாகக் கணக்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒருவர் ஒரு குடும்பத்திலே இருந்தால்கூட அவருக்கு 12 கிலோ கொடுக்க வேண்டும் என்றும் ஒருவருக்கு மேல் ஒரு சிறியவர் இருந்தால்

2 கிலோ சேர்க்கவும், இன்னொருவர் இருந்தால் 4 கிலோ சேர்க்கவும், 3 பேர் இருந்தால் (அதாவது 2 பெரியவர், 1 சிறியவர்) 18 கிலோவும், 3 பேருக்கு மேலே இருந்தால் 20 கிலோ என்றும் இப்போது வழங்கிக்கொண்டு, வருகிறோம். குறிப்பிட்டு இதிலே எத்தனை இலட்சம் கார்டுகள் என்ற கணக்கு இல்லை. இதுபற்றித் தனியாகக் கேட்டால் விவரமாகத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளிலே விநியோகிக்கப்படுகிற அரிசிகள் அனைத்தும் தரம் வாய்ந்த அரிசிகளாக இருந்தன. ஆனால், கடந்த மாதத்திலிருந்து குறுவையிலே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசியாக்கி விநியோகம் செய்கின்றபோது பழுப்பு நிறத்திலேயும், கசப்புத் தன்மை உடையதாகவும் இருக்கிறது என்பதை இங்கே நினைவூட்டி, அந்த அரிசிகளையெல்லாம் நிறுத்திவிட்டு எப்போதும்போல தரமான அரிசியை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான சூழ்நிலைகளை அரசு ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை அதிகமாகப் பெய்கின்றபோது எவ்வளவு ஈர நெல்லாக இருந்தாலும் அதை வாங்கிக்கொள்ள வேண்டும், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததற்கிணங்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எப்போதும் இல்லாத அளவாக 20 சதவீதம் ஈரப்பதம் இருந்தாலும்கூட, விவசாயிகளிடம் நெல்லைப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப் பெறப்பட்ட நெல் ஒருசில இடங்களிலே சரியாக இல்லையென்றால்கூட அதை அரிசியாக மாற்றுகின்றபோது தரம் குறைவாக இருந்தால் அதை மாற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கின்றார்கள். கறுப்பாக இருக்கின்ற அரிசியை double polishing என்ற முறையிலே மீண்டும் ஒரு முறை அரைத்து, அதைச் சரி செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. பல கடைகளிலே நேராகச் சென்று சோதனையிட்டதிலே, அங்கிருந்த அரிசியை எடுத்துத் தேய்த்துப் பார்த்தால் அது நிறம் மாறுகிறது. ஒருமுறை கழுவினால் அது மிக நன்றாகவே இருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். நானும் நேரடியாகக் கண்டிருக்கிறேன். ஆனால், மிக மோசமாக இருக்கின்ற அரிசியை நிச்சயமாக மாற்றித் தருவோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 2 கிலோமீட்டர் தொலைவிலே 200 குடும்ப அட்டைகள் இருந்தால் ஒரு பகுதி நேரக் கடை ஆரம்பிக்கலாம் என்ற நிலையிலே ஆரம்பித்து இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான கடைகளைத் திறந்திருக்கின்றோம். அப்படி நடத்துவதற்கான இடமும் இலவசமாகத் தரவேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள். அதைக்கூடத் தந்திருக்கின்றார்கள். அதே நேரத்தில் முழு நேரக் கடைகளிலிருந்து அந்தப் பகுதி நேரக் கடைகளுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு ஆகின்ற அந்த வாடகையையும் அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பொருளை அதிக விலைக்கு விற்கவும் முடியாது. அப்படி விற்றாலும் அது தவறு என்ற காரணத்தினாலே அந்தச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, வாடகையை உயர்த்துகின்ற அந்தப் பணியை அதிகாரிகள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வழங்கப்படுகின்ற வாடகையெல்லாம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது ஆய்வு செய்யப்பட்டு, பகுதி நேரக் கடைகளுக்கும் பொருள்களைக் கொண்டு செல்கின்ற அந்தப் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையுயர்ந்த அரிசிகள் 10 கிலோ, 12 கிலோ என்று சிறிய மூட்டைகளாக வெளியிலே விற்கப்படுகின்றது. அதே போல நியாயவிலைக் கடைகளுக்கு அரிசியை சிறிய மூட்டைகளாக எடுத்து, அந்த மூட்டை கட்டுகின்ற செலவையும் அதன் விலையிலே சேர்த்து நிர்ணயித்து வழங்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரீட்சார்த்தமாகக் கூட அதைச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், ஒரு மாதத்திற்கு 2 இலட்சம் டன்

அரிசி வழங்கப்பட வேண்டியிருக்கிறது. தமிழ்நாடு தொகுப்பிலிருந்து கிட்டத்தட்ட 85,000 டன்களும் மத்திய தொகுப்பிலிருந்து ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் டன்களும் எடுத்து விநியோகிக்கப்படுகின்றது. சிறிய பகுதிகளாகப் பிரிக்கக்கூடிய அந்தப் பணி மிகப்பெரிய பணி. அது இப்போதிருக்கின்ற நடைமுறையிலே சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நியாயவிலைக் கடைகளில் வழங்கக்கூடிய மண்ணெண்ணெய் அளவு சரியில்லாத காரணத்தால், நம்முடைய ஒப்பற்றத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெட்ரோல் பங்க்குகளில் பெட்ரோல், டீசல் வழங்குவதைப்போல, மண்ணெண்ணெய் வழங்குவதற்காக, பல்வேறு இடங்களிலே அப்படிப்பட்ட பங்க்குகளைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தனியாக இடமில்லை. அப்படி தனியாக இடங்களை நகர்ப்புறங்களிலே வாங்குவதற்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. ஆகவே, நகராட்சி அல்லது மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை பல வருட குத்தகைக்கு விட்டு, அந்த இடங்களிலே அப்படிப்பட்ட பங்க்குகள் திறப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புதிய திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள், ஒரு மண்ணெண்ணெய் விநியோக நிலையம் அமைக்க வேண்டுமானால் 4,65,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்தபோது - 50 சதவிகிதம் அரசு மானியமாகவே தருகிறது என்று சொல்லி, கிட்டத்தட்ட 100 மண்ணெண்ணெய் விநியோக நிலையங்களுக்கு அனுமதி தந்து 54 இடங்களிலே பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன; 10 நாட்களுக்குள்ளாக அந்த நூறும் நிறைவு செய்யப்பட இருக்கின்றன. நம்முடைய வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களை நாங்கள் கேட்டபோது, 20-க்கும் மேற்பட்ட இடங்களை, பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களை, யாரும் உபயோகிக்காமல் அல்லது ஆக்கிரமிப்பு செய்த இடங்களைக் கூட்டுறவுத் துறைக்குத் தந்திருக்கிறார்கள். அனைத்து



மாநகராட்சி மேயர்களையும் நாங்கள் கேட்டிருக்கிறோம். ஆனால் மற்ற மாநகராட்சி மேயர்கள் அதிலே அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. கூட்டுறவுத் துறையே தனியாக விலைக்கு வாங்க முடியுமா என்று ஆய்ந்து, அதற்காக 125 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த 100 பங்க்குகள் முடிந்தால், அடுத்து 500 பங்க்குகளை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். உரிய முறையிலே முடியுமானால் விலைக்கே வாங்குகின்ற முயற்சியை கூட்டுறவுத் துறை ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நியாயவிலைக் கடைகளில் நேரடியாக நுகர்பொருள் வழங்குகின்ற துறையிலேயிருந்து அரிசி விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் அரிசியை விநியோகிக்காதக் காரணத்தால், கூட்டுறவிலே நடத்தக்கூடிய நியாய விலைக் கடைகளிலே இருந்து அரிசியை அவர்களே வாங்கி விற்பனை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படியிருந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நுகர்பொருள் வாணியக் கழகத்தினுடைய பணி மொத்த விற்பனை; கூட்டுறவுச் சங்கத்தினுடைய பணி சில்லறை விற்பனை என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கடைகளுக்கு அனுப்பப்படுகின்றவரை நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது பரீட்சார்த்தமாக, சென்னை மாநகரத்திலே, நேரடியாகக் கூட்டுறவுத் துறையே எடுத்துக்கொள்வதற்குரிய ஆய்வு நடத்தப்பட்டு, வரும் மாதத்திலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் இல்லாமல் நேரடியாக இவர்களே சென்று அந்தப் பொருள்களை எடுத்து, விநியோகிக்கின்ற பணியை தொடங்கலாம் என்றிருக்கிறோம்.

மற்ற பல பகுதிகளிலே கூட்டுறவுச் சங்கங்களில், பொது விநியோக முறையில் தரப்படுகின்ற அரிசியை விற்றுவிட்டு, சம்பளத்தை எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு வரவேண்டிய பாக்கிக்குச் சம்பளத்தை எடுத்துக்கொண்டு, மறுமாதம் கட்டுவதற்குப் பணம் இல்லாத காரணத்தால், ஒருசில இடங்களில் அரிசி விநியோகம் தாமதமாக இருக்கிறது. அதையும் சரி செய்வதற்காக, ஆங்காங்கு

[1998 ஏப்ரல் 1

இணைப் பதிவாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல சங்கடம் இல்லாமல் நிச்சயமாகப் பார்த்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களிலே 1½ ஏக்கர் நஞ்சை, 3 ஏக்கர் புஞ்சை என்று நிலம் வைத்திருக்கின்றவர்கள், பெரும்பாலும் அந்த அரிசியை வாங்கிச் சாப்பிடுவதில்லை. அதனால் சில நேரங்களிலே, அத்தகைய அரிசியை—விற்பனை ஆகாமல் இருக்கின்ற அரிசியை—அவர்கள் விற்கப் போக, அவர்கள் மக்களுடைய அரிசியைக் கடத்திச் சென்று விற்பதாகக் குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, மேல்மலையனூர் பகுதியிலே அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் வந்தன. எனவே கிராமப்புறங்களில் நிலம் உள்ள விவசாயிகளுக்கு, அரிசி வழங்குவதற்குப் பதிலாக தேவைப்படுகின்ற சர்க்கரையோ, வேறு கோதுமைப் போன்ற பொருட்களோ வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குத் தேவையின் அடிப்படையிலே, அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே கார்டுகள் வழங்கப்பட்டு, பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, வரும் 1 ஆம் தேதியிலிருந்து சென்னை மாநகரத்திலே புதிய கார்டுகள் வழங்குகின்ற திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற மேல்மலையனூர் பகுதியை ஆய்வு செய்து, கிட்டத்தட்ட 18 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள்மீது நடவடிக்கைகூட நாங்கள் எடுத்திருக்கிறோம். அவர்கள் தவறாக செயல்பட்டதைக் கண்டித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கடந்த காலத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நெல்லுக்கு 35 ரூபாய் கூடுதலாக இடைநிலைச் செலவாகத் தந்து இருக்கிறார்கள். 100 கிலோ நெல் என்றால், 1 கிலோ 4 ரூபாய் 85 காசு என்று வாங்குகின்ற காரணத்தால், ஒரு கிலோ நெல் விவசாயி விற்கின்றபோது 4 ரூபாய் 85 காசு. ஆனால் ஒரு கிலோ அரிசி 3 ¼ ரூபாய்க்கு நியாயவிலைக் கடைகளிலே கிடைக்கின்ற காரணத்தால், நிலம் இருக்கின்ற விவசாயிகள்கூட நெல்லை விற்றுவிட்டு,



1998 ஏப்ரல் 1]

இப்போது அரிசி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் கடந்த காலத்தில் 70 சதவீதம் அரிசி வழங்கிக் கொண்டிருந்த நிலை மாறி, இப்போது 90 சதவீதம் வரை கிராமப்புறக் கடைகளிலே அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும், இந்தத் தவறுகள் நிகழாவண்ணம் நிச்சயமாக கண்காணிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 116, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**116—**

**குடிசைகளைக் கட்டடங்களாக மாற்ற மானியம் வழங்குதல்**

*2698—**திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர்த் தொகுதியிலுள்ள சுந்தரபுரம், சிவராஜபுரம், குருசாமி நகர், ராஜா தோட்டம் போன்ற பகுதிகளில் பட்டா மனைகளில் கட்டியுள்ள குடிசைகளைக் கட்டடங்களாக மாற்ற மானியம் அல்லது கடனாகத் தொகை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**117—**

**தொழிலாளர் பிரச்சினைகளை ஆராயக் குழுக்கள் அமைத்தல்**

*10195—**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 1

(அ) கட்டடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினைகளை ஆராயக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர்நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கட்டடத் தொழிலாளர் நலனுக்கென ஏற்கெனவே 'தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆய்ந்து, அவற்றின் தீர்வுகளுக்கான வழிவகைகளை அரசுக்கு எடுத்துரைக்க நிலச் சீர்திருத்தத் துறை இயக்குநரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழ்வது விவசாயம். அந்த விவசாயக் கூலிகளுக்கு பல்வேறு இடங்களில் பல்வேறுவிதமான கூலிகள் கொடுக்கப்படுகின்றன. அந்தக் கூலிகளைச் சரிப்படுத்த, முறைப்படுத்த, விவசாயத் தொழிலாளர்களுடைய நலவாரியம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தத் துறை இயக்குநரின் தலைமையின் கீழே, ஒரு குழு அமைக்கப்பெற்று, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, விவசாயிகளை எல்லாம் சந்தித்து, குறிப்பாக வேளாண்மைத் தொழிலாளர்களுடையக் குறைந்தபட்சக் கூலி உட்பட எல்லா நலன்களையும் எப்படி அமல் நடத்துவது என்பது குறித்து ஆய்வு செய்து, அவர்கள் அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். பல்வேறு பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்:



1998 ஏப்ரல் 1]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கான பிரச்சினைகளை ஆராய்வதற்காக திரு. கோலப்பன் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு பரிந்துரை அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாகவே அந்தப் பரிந்துரைகளை ஏற்று, அவர்களுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, குழுவினுடைய அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கின்றது. விரைவில் உறுப்பினரின் கோரிக்கை கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 43 தொழில்களுக்கு, அமைப்பு ரீதியாக இல்லாத தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும், தொழிலாளர் நலச் சலுகைகள் அரசின் மூலமாக சுமார் 25 இலட்சம் பேர்களுக்கும் கிடைக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் தெள்ளத் தெளிவாகக் கூறி இருக்கிறீர்கள். இந்த நாட்டினுடைய அடிப்படையாக இருக்கக்கூடிய, முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயக் கூலித்தொழிலாளர்களுக்கும், கட்டடத் தொழிலாளர்களுக்கும், அவசியமாகக் குழு அமைத்து, விரைவாக, இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல அறிவிப்பினை விவசாயத் தொழிலாளர்களுக்கும், கட்டடத் தொழிலாளர்களுக்கும் அறிவிப்பார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என ஒரு நல வாரியம் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஒரு நல நிதியும் உருவாக்கப்பெற்று, அவர்களுக்கான நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் சுமார் 25 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலராக இருக்கக்கூடிய நம்முடைய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் அமைப்பு ரீதியற்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய நிலைமைகளைக்

கண்டறிவதற்காகக் குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களின் அறிக்கையைப் பெற்று, அவர்கள் நலத்திற்காக பல நல்ல திட்டங்களை அமலபடுத்துவதற்காக நல வாரியத்தையும் உருவாக்கி இருக்கிறார்கள். ஆகையினாலே, உறுப்பினருடைய கோரிக்கை நம்முடைய முதல்வர் அவர்களால், இந்த அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே, நெசவாளர்களுக்கும், பட்டுச் சேலை உற்பத்தியாளர்களுக்கும் கூலி உயர்வு சம்பந்தமாக பலமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, ஆர்.டி.ஓ., தாசில்தார், லேபர் ஆபீசர், பட்டுச் சேலை உற்பத்தியாளர் சங்கத் தலைவர்கள் எல்லாம் கூடி-ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி-கூலி உயர்வு கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் பட்டுச் சேலை உற்பத்தியாளர்கள் கூலி உயர்வு கொடுக்காமல் ஒப்பந்தத்தை நிராகரித்து இருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குக் கூலி உயர்வு தர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலியாக இருந்தாலும், போனசாக இருந்தாலும், சம்பளமாக இருந்தாலும் சட்டரீதியாக அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறைந்தபட்சக் கூலி வழங்கப்படவில்லை என்று சொன்னால், அதை ஒரு பிரச்சினையாக, வழக்காகத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட 'கன்சிலியேஷன்' அதிகாரிகளின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இயற்றப்படுகிற சட்டங்களின் பலனை தொழிலாளர்கள்



நடைமுறை வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டுமென்பதுதான் சட்டத்தினுடைய சாராம்சமாகும். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் போடப்படுகிற அந்தச் சட்டங்களை முதலாளிகள் நடைமுறையில் அமலாக்குவதில்லை. எனவே, போடப்பட்டிருக்கின்ற சட்டங்களை நடைமுறையில் அமலாக்குவதற்குரிய உத்திமுறைகளை உருவாக்குவதற்காக தொழிற்சங்கமும், அரசாங்கமும் இருதரப்பு கமிட்டி அமைத்து, அதற்குரிய ஆலோசனைகளைப் பெற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டங்களை தொழிலாளர் நலனில் அக்கறையுள்ள கழக அரசு சிறப்பாக அமல் நடத்தி வருகிறது. சட்டத்தில் சில குறைபாடுகள் தொழிலாளர்களுக்கு விரோதமாகக்கூட இருக்கிறது என்பது உண்மைதான். அவை பிரிட்டிஷார் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள். அவற்றில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, கோவையிலே துறையின் சார்பாக அது விவாதிக்கப்பட்டு என்னென்ன திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசுக்கும் அந்தத் திருத்தங்களை அனுப்பியிருக்கிறோம். நிச்சயமாக தொழிற்சங்கத் தலைவர்களின் கருத்தும் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**118—**

**கைத்தறிக் கிராமம் நிறுவுதல்**

*8306—**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், வேலம்பாளையம் ஊராட்சி, கருக்குப்பாளையத்தில் 'கைத்தறிக் கிராமம்' நிறுவும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவுபெறும்?

[*1998 ஏப்ரல் 1*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், வேலம்பாளையம் ஊராட்சி, கருக்குப்பாளையத்தில், 'கைத்தறிக் கிராமம்' நிறுவும் பணி மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவி முழுவதும் பெறப்பட்டதும் நிறைவுபெறும். மத்திய அரசின் பங்கின் முதல் தவணையான ரூ.9,275 இலட்சத்தை விடுவித்து அண்மையில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருக்குப்பாளையம், ஒருங்கிணைந்த கைத்தறிக் கிராமத் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிலே தேர்வு செய்யப்பட்டது. கடந்த காலத்திலே அது கிடப்பில் போடப்பட்டு நம்முடைய கழக அரசு வந்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்தினை எடுத்து நிறைவேற்றுகிற காரியத்தைச் செய்ததற்காக நெசவாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 7 ஆண்டுகளுக்கு முன்பாக தேர்வு செய்யப்பட்ட இந்தத் திட்டத்திற்கான தொகை மிகவும் குறைவான அளவிலே இருப்பதைக் கருத்திலே கொண்டு, தற்போதைய நடைமுறைக்கு தக்கபடி அதனுடைய நிதி ஒதுக்கத்தை அதிகப்படுத்தித் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94-திட்டத்திலே இது அறிவிக்கப்பட்டிருந்தாலும், தற்போது 1996-97-ஆம் ஆண்டு இதைப் பயன்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது கொட்டவளவு காமாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடம் மற்றும் சாயச்சாலை அமைக்க 17 சென்ட் நிலம் இதன்மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை, கருக்குப்பாளையத்திற்கு மட்டும் ரூ.18.55 இலட்சம். இதிலே தற்போது ரூ.9.27 இலட்சம் விடுவிக்கப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற தொகையையும், வரிசையாக செலவு செய்ய அனுமதிக்கின்ற நேரத்திலே விடுவிக்க எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*1998 ஏப்ரல் 1*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 119, திரு. ச. அழகிரி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**119—**

## சுப்பிரமணிய சிவாவிற்கு நினைவுச் சின்னம்

**14043*—**திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவிற்கு இந்தப் பொன்விழா ஆண்டில் தருமபுரியில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவிற்கு தருமபுரியில் நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

*முற்பகல் 10-35*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னிந்தியாவிலேயே வாழ்ந்த மிகச் சிறந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளிலே ஒருவர். தன்னுடைய வாழ்வை இந்தத் தேசத்திற்காக அர்ப்பணித்தவர். எனவே, அவருக்கு இந்த அரசாங்கம் அவருடைய சொந்த மாவட்டமான தர்மபுரியில் ஒரு நினைவுச் சின்னம் அமைத்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். இந்தப் பொன்விழா ஆண்டிலேயே-, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, தலைநகரத்திற்குச் சென்ற சுதந்திரப் போராட்ட வீரர்களையெல்லாம் வாழ்த்தி அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். - இதை உணர்ச்சிபூர்வமாக எடுத்துக்கொண்டு சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு இந்தப் பொன்விழா ஆண்டிலேயே

ஒரு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா என்று மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு பாப்பாரப்பட்டியில் 1½ ஏக்கர் நிலப்பரப்பில் நினைவு இல்லம் இருக்கிறது. அங்கே சமாதியும், பூந்தோட்டமும் அமைக்கப்பட்டு, ஐ.ஆர்.டி.டி என்ற தனி தொண்டார்வ நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்கிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை ஏற்று, இதை மேலும் செம்மைப்படுத்துவற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டில் பிறந்தவர்கள். அங்கே பிறந்து வளர்ந்த அவருடைய வீடு இன்றைக்கும் நன்றாக இருந்து கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே ஒரு கேள்விகூட மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கேட்டு இருக்கிறேன். சுப்பிரமணிய சிவா வாழ்ந்த அந்த இடத்தை நினைவுச் சின்னமாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) ஆமாம். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அந்தப் பெயரை வைத்திருக்கின்றீர்கள். அதற்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினால், அந்த வீட்டை, அவர் வாழ்ந்த வீட்டை - அழகான திருவுருவம் கொண்ட அவர் ஜெயிலுக்குப் போய்விட்டு வெளியே வரும்போது குஷ்டரோகம் பெற்று வெளியே வந்திருக்கின்றார் - ஆகையினால் அதை நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் சொல்கின்ற அந்த வீட்டைவிடப் பெரிய அளவிலே கட்டப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு சுப்பிரமணிய சிவா பெயரை நானே சூட்டியிருக்கின்றேன். அந்த விழாவிற்கு அம்மையார் அவர்களும் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்





வாழ்ந்த அந்த வீடு இருக்குமேயானால், அதுபற்றிய விவரங்களை அம்மையார் தெரிவித்தால், பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய சுப்பிரமணிய சிவா அவர்கள் வத்தலகுண்டிலே பிறந்து, தன்னுடைய இறுதிகால வாழ்க்கையில் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலுள்ள பாப்பாரப்பட்டியிலே தங்கி வாழ்ந்தார்கள். தங்க வந்த இடத்திலே பல நல்ல அரிய சாதனைகளையெல்லாம் செய்து, அந்த மக்கள் மத்தியிலே நல்மதிப்பைப் பெற்றவர். ஆகவே, அவர்கள் சமாதியான அந்த இடத்திலே தொண்டார்வ நிறுவனம் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளையெல்லாம் செய்து, அதைப் பராமரித்து வருகின்றது. அந்த இடத்திலே நினைவாலயம் அமைத்தால், பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் எல்லாம் வந்து கண்டு களிக்கக்கூடியதாக இருக்கும். அந்த வகையிலே அங்கே ஒரு நல்ல பணியை செய்வதாகக் கடந்த ஆண்டிலேயே அமைச்சர் அவர்கள் தொகையை எல்லாம் அறிவித்து திட்டப் பணிகளை செய்யப்போவதாகச் சொன்னார்கள். இன்னும், இதுவரையிலே எந்தக் காரியமும் அங்கே நடைபெறவில்லை. ஆகவே, நடப்பாண்டிலாவது அந்தத் திட்டப் பணி தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்த அறிவிப்பையும் இந்தத் துறையின் சார்பாகச் செய்யவில்லை. சுப்பிரமணிய சிவா அவர்கள் இறுதியாக வாழ்ந்த இடம் என்கிற காரணத்தினாலே பாப்பாரப்பட்டியிலே, சமாதியும், பூந்தோட்டமும். ஏற்கனவே நான் சொன்னதுபோல 1½ ஏக்கர் பரப்பளவில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதைச் செம்மைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மாத்திரம் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 120, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 1

**120—**

### ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்குத் தங்கும் விடுதி

*2810—**திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளியில் ஆதிதிராவிட மாணவர், மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டு கருதப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. சண்முகம். பெயரைக் கூப்பிட்டு எவ்வளவு நேரம் ஆகிறது? (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது.

வினாக்கள்- விடைகள் முடிவுற்றன.

**(குறிப்பு:** - ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



## 2. தகவல் கோரல்

### அனுமதி மறுத்த பொருள் பற்றி அவையில் எழுப்புதல்

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும். இங்கே கேட்கக் கூடாது, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் அறையிலே வந்து அனுமதி உண்டா, இல்லையா என்று கேட்க வேண்டும், இங்கே கேட்கக் கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** ஆமாம், அப்படித்தான். நீங்கள் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

முற்பகல் 10-40

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என் அறையில்தான் வந்து கொடுக்க வேண்டும், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் இன்றைக்குக் கிடையாது என்று சொன்னேன். அதை நாளைக்கு எடுப்பேன். உட்காருங்கள். இங்கு தேவையில்லாமல் பேசக்கூடாது. இப்படிச் செய்தீர்கள் என்றால் நிச்சயமாக நான் நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** நீங்கள் அறையில்தான் கேட்க வேண்டும். இங்கே கேட்கக்கூடாது. நீங்கள் உட்காருங்கள். திரு. இரா. தாமரைக்கனி பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** நான் பதில் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9-00 மணிக்கு நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லியாயிற்று, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா ?

(திரு. இரா. தாமரைக்கனி நின்று கொண்டிருந்தார்)

நீங்கள் உட்காருகிறீர்களா. இல்லையா ?

(திரு. இரா. தாமரைக்கனி தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்)

திரு. இரா. தாமரைக்கனியை இந்த அவையைவிட்டு வெளியேற்றுகிறேன்.

(திரு. இரா. தாமரைக்கனி இருக்கையில் உட்கார்ந்தார்)

வெளியேற்றுகிறேன் என்று சொன்னபிறகு உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் எது வேண்டுமானாலும் பேசலாமா ?

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். ** பேசுகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெறாது. இன்னும் பேசிக்கொண்டிருந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பேன். காவலர்கள் அவரை வெளியேற்ற வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

(பேரவைக் காவலர்கள் பேரவையினுள் நுழைந்தபோது திரு. இரா. தாமரைக்கனி வெளியேறினார்)

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1998.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) 1998-ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. தாமிரபரணி பாசன அமைப்பில் சில கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடுதல் குறித்த பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி பாசன அமைப்பின் கடைமடையில் அமைந்துள்ள திருவைகுண்டம் அணைக்கட்டின்கீழ் உள்ள தெற்கு பிரதானக் கால்வாய் மற்றும் வடக்குப் பிரதானக் கால்வாய், அதே போன்று மருதூர் அணைக்கட்டின் மேலக்கால், கீழக்கால் ஆகிய வாய்க்கால்கள் மூலம் 32,122 ஏக்கரில் பழந்தொழில் சாகுபடி செய்வதற்கு 4.4.1998 முதல் தண்ணீர் திறந்துவிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அறிவிப்பு

### உறுப்பினர்கள் அவையில் பேசுவதற்கு நேரம் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். இதுபற்றி பேரவைக்கு ஓர் அறிவிப்பு செய்ய விரும்புகின்றேன். இதுவரை நான் கடைப்பிடிக்காத முறை, நாடாளுமன்றத்திலே கடைப்பிடிக்கக்கூடிய முறை, அது என்னவென்றால்—இனிமேல் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அறிவிப்பை முடிக்கவில்லை. அதிலேகூட எல்லா உறுப்பினர்களையும் ஒரே நிலையில்தான் பேரவைத் தலைவர் பார்க்க முடியும். சில பேருக்கு அதிக நேரம், மற்றவர்களுக்குக் குறைந்த நேரம் என்று ஒதுக்க முடியாது. ஆகவே எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடம்தான் கொடுக்க முடியும். ஏனென்றால் ஏராளமான உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே பங்குகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இதை குறிப்பாக ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டும் என்றால் நேற்று நம்முடைய உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் 35 நிமிடம் பேசினார்கள். இது த.மா.கா.வின் சார்பிலே 3 பேர் பேசக்கூடிய நேரம். ஆகவே பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மாற்றுத் தலைவர்களுக்கும் ஒரு கருத்தைச் சொல்கின்றேன். எந்த உறுப்பினராக இருந்தாலும் 10 நிமிடத்திலே பேசி முடிக்க வேண்டும். அதற்கு மேல் நேரம் எடுத்தால் அவர்கள் கட்சியிலே ஓர் உறுப்பினருக்குப் பதிலாக அவர்கள் பேசுவதாகக் கருதி, அந்தக் கட்சியில் உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்படும். அடுத்தபடியாக இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கருணையின் அடிப்படையிலே இல்லை. எதிர்க்கட்சிகள் எந்த அளவுக்கு ஆளும் கட்சிமீது தங்களுடைய கருத்துகளை வலுவாகச் சொல்கிறார்களோ அந்த முறையில்தான் செய்ய வேண்டும் ஆளும் கட்சிக்கு நிறைய வாய்ப்புகள் இல்லை என்பது உண்மைதான். ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அதேநேரத்தில் எதிர்க்கட்சிகள் சொல்வதன் மூலம்தான் நாட்டில் நடக்கிற பல்வேறு சம்பவங்களை, சில குறைபாடுகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர முடியும். ஆகவே பொதுவாக நாங்கள் அரசினுடைய நலத்திட்டங்களை, நல்ல விஷயங்களைப் பற்றி, தொகுதியைப் பற்றி பேசுகின்றபோது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையிலே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று என்னால் பார்க்க முடியாது.

எல்லா உறுப்பினர்களும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால் 166 பேர் இருக்கிறவர்கள்.....

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிவிட்டு அறிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே நான் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசவேண்டியது எதுவும் கிடையாது. இது என்னுடைய உரிமை. பேரவைத் தலைவருடைய உரிமையை நீங்கள் பறிக்கக்கூடாது. இது என்னுடைய உரிமை.

*முற்பகல் 10-45*

**திரு. ஜி. பழனிசாமி:** உங்களுடைய உரிமையைப் பறிக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எங்களுடைய தார்மீகமான கடமையைச் செய்ய வேண்டும் அல்லவா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பிரச்சினைக்குக் கூட நான் வரவில்லை. ஆளுங்கட்சிக்காரர்கள் சொல்லக்கூடியதைக் கூட எதிர்க்கட்சிக்காரர்கள்தான் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் --ஏன் என்றால் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்த்துப் பேசிக்கொள்ளலாம். ஆனால் நாட்டில் நடைபெறுகின்ற பிரச்சினைகளை, மக்களுடைய பிரச்சினைகளை எல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள்தான் அழுத்தமாக நாட்டு மக்களுக்கும் நம்முடைய ஆளுங்கட்சிக்காரர்களுக்கு சாதகமாகவும்கூட நாங்கள் பேசக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுகிற காரணத்தால்--தயவுசெய்து எங்களுக்கு அதிக நேரம் ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள்தான் உண்மைகளைப் பேச முடியும், ஆளுங்கட்சியினர் பேச முடியாது என்று சொல்லுவதை நான் பேரவைத் தலைவர் என்ற முறையில் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் நாட்டில் இருக்கிற





நிலைமைகளைப் பேசலாம். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்லி முடிக்கிறேன். உதாரணமாக இப்போதே சொல்லுகிறேன், ஆளுநர் உரையில் ஆளுங்கட்சியின் சார்பில் பேசியது 6 பேர். பிரதான எதிர்க்கட்சியான த.மா.கா. சார்பில் பேசியது 7 பேர். இதில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குக்கூட பெரிய மனக் குறை இருக்கிறது. 166 பேர் நாங்கள் வந்து இருக்கிறோம், எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இது நியாயமான குறை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாடாளுமன்றத்தில் இந்த முறையைத்தான் கையாளுகிறார்கள். ஆகவே, இந்த முறையை நான் இனிமேல் பின்பற்றப் போகிறேன். அதிலே எந்த மாறுதலும் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இதிலேயே ஒரு உறுப்பினர் பேசுகிற நேரம் போய் விடுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தைத் தீர்மானிப்பதிலே நாம் காலத்தை அவ்வளவு குறைவாகத்தான் செலவிடுகிறோம் என்பதைக் கவனத்தில் கொண்டு ஒரே ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சாராம்சமே ஆளுகிற கட்சி காதுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். எதிர்க்கட்சி நாக்கைப் பயன்படுத்த வேண்டும். ஆளுகிற கட்சிக்கு என்ன சொல்ல வேண்டும் என்பதை எதிர்க்கட்சிகள் சொல்லுகின்றன. அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமுரிய பலம் ஆளுங்கட்சிக்கு இருக்கிறது. எனவே, ஆளுகிற கட்சியிடம் பலம் இருக்கிற காரணத்தால் எதிர்க்கட்சிகள் வாயைத் திறந்து பேச அனுமதிப்பதுதான் சட்டமன்ற ஜனநாயகத்தின் சாராம்சமாக அமையும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஊமையாக இருக்க வேண்டும் என்ற நிலையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நீங்கள் வரிசையாக ஒவ்வொருவரும் எழுந்து கொண்டு இருப்பதில் பிரயோசனம் இல்லை. என் தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். என் தீர்ப்புக்கு மேலே நீங்கள் விமர்சனம் செய்யக்கூடாது. இதுதான் ஜனநாயகம்.

**திரு. ஆர். சொக்கர்:** இது விமர்சனம் இல்லை.

(எதிர்க்கட்சி வரிசையிலிருந்த ஓர் உறுப்பினர் தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டே 'இது [illegible] நாயகம்' என்று குரல் கொடுத்தார்)

218459. D 1211, 2/ [illegible] [illegible]-421

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். யார் சொல்வது? இதுதான் ஜனநாயகம். யார் என்று பார்க்க மாட்டேன். உட்கார்ந்து கொண்டே பேசினால் அடுத்தபடியாக வெளியேற்றுவேன். தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு என்று தனி மரபு இருக்கிறது. அந்த மரபை யார் மீறினாலும் எந்தப் பக்கமாக இருந்தாலும் நான் விடமாட்டேன். இல்லாவிட்டால் இந்த நாற்காலியில் நான் உட்காரமாட்டேன். எல்லோரும் உட்காருங்கள். திரு. சொக்கர், சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் இந்த அரசு அமைந்த காலத்திலிருந்து, தாங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்த காலத்திலிருந்து மிகப் பெருமையோடு இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். உங்களுடைய முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை. மிகச் சிறந்த பேரவைத் தலைவராகத் தாங்கள் இங்கே அமர்ந்து இருக்கிறீர்கள் என்ற ஓர் உணர்வோடு நாங்கள் எல்லாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். இப்போது ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள்கூட சில சமயங்களில் அரசினுடைய கருத்துக்களை விமர்சனம் செய்து பேசுகிறார்கள். இதையெல்லாம் பார்த்து எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது. அதே சமயத்தில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் விமர்சனம் செய்வதை விமர்சனம் செய்தும், வரவேற்பதை வரவேற்றும், எதிர்ப்பதை எதிர்த்தும் ஒரு முறையோடு செய்கிறார்கள். நீங்கள் சிறப்பாக நடத்தி வருகிறீர்கள். இதுபோன்ற முக்கியமான பிரச்சினையில் அருள்கூர்ந்து இப்போது கொடுத்ததைத் தீர்ப்பாகக் கருதாமல் Business Advisory Committee-இல் மறுபடியும் இதைப்பற்றிப் பேச ஒரு வாய்ப்பு ஏற்படுத்தி, எங்களுக்கு அதிகமான வாய்ப்பை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

•

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உணர்வு மதிக்கத்தக்கது. நாடாளுமன்ற முறையை இங்கே கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். இதை எப்படிக் கடைப்பிடிப்பது, எந்த அளவிலே நேரத்தைப் பகிர்ந்து கொள்வது என்பன போன்ற இந்த விவரங்களை அவையிலேயே நீண்ட நேரம் விவாதிக்காமல், அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதிப்பதற்கேற்ற வகையில் அலுவல் ஆய்வுக் குழுவிலே அதைப்பற்றி எங்களிடம் தாங்கள் கருத்துத் தெரிவித்து, எங்களுடைய கருத்துக்களையும் - எங்களுடைய கருத்துக்கள் என்று சொல்லுகிற



நேரத்தில், எதிர்க்கட்சியிலே உள்ள அத்தனை பேரையும் சேர்த்துத்தான் நானும் சொல்லுகின்றேன் - அந்தக் கருத்துக்களையும் ஆராய்ந்து ஒரு முடிவெடுப்பது சிலாக்கியமாக இருக்குமென்று கருதுகிறேன். இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்: ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், முதலமைச்சரவர்கள் கவனத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆளுங்கட்சி சார்பிலே 166 பேர் இருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே 39 பேர் இருக்கின்றார்கள். நான் இப்பொழுது கொடுத்திருக்கின்ற முறை, ஆளுங்கட்சி 4 பேர் என்றால் த.மா.கா. 3 பேர். இது எண்ணிக்கையின் அடிப்படையிலே இல்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 8 பேருக்கு 3 பேர் இந்த விவாதத்திலே பங்கு கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். இந்திய தேசிய லீக் 2 பேர் பேசலாம் என்று சொல்லியிருக்கிறேன். அ.இ.அ.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவர்தான் என்று சொன்னேன். அதை மாற்றி இப்பொழுது ஒவ்வொன்றிலும் 2 பேர் பேச அனுமதித்திருக்கிறேன்.

அதனாலே, கட்டாயமாக எண்ணிக்கை அடிப்படையிலே கொடுத்தால் இவர்களுக்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்காது. 4 மடங்கு இருக்கிற தி.மு.க.வுக்கு 4 பேர்; அதிலே 4-லே ஒரு மடங்கு இருக்கிற த.மா.கா.வில் 3 பேருக்குக் கொடுக்கிறேன். அதனாலே, எண்ணிக்கையெல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்ள முடியாது.

நான் சொல்ல வருவதெல்லாம், ஆளுங்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களுக்கு வாய்ப்பே கிடைப்பதில்லை என்று வருத்தப்படுகின்றார்கள். நான் பேரவைத் தலைவராக—எல்லோருக்கும் பேரவைத் தலைவர்—அவர்களுடைய நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்க்க வேண்டுமென்பது என்னுடைய கடமை. அடுத்து, திரு. மா. இராமச்சந்திரன்.

[1998 ஏப்ரல் 1

# 6. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்றையதினம் பேசி முடித்ததிலிருந்து இன்றைக்குத் தொடர்ந்து பேசி முடிக்கலாம் என்ற ஆசையிலே இருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நேற்றுப் பேசியபொழுது, மணப் பெண்களுக்கெல்லாம் பத்தாயிரம் ரூபாய் வீதம் அறுபதாயிரம் மணப் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்ற விகிதத்தைச் சொன்னேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், உதவி செய்வது என்ற ஒரு கருத்தோடு மட்டும் நம்முடைய முதலமைச்சரவர்கள் இதைச் செயல்படுத்தவில்லை. அதிலே, மகளிர்க்குக் கல்வியிருக்க வேண்டும்: அந்தக் கல்வி எட்டாவது வரையிலே பெண்களுக்கு மிக அவசியம் என்ற கருத்தைத்தான், அந்த எண்ணம் வர வேண்டுமென்பதிலேதான் கவனமாகயிருந்து செயல்படுத்தினாரே தவிர, வேறு காரணங்கள் அல்ல.

ஆனால், இந்த ஆட்சியினுடைய முக்கியமான குறிக்கோள் என்னவென்று சொன்னால், முதன்முதலாக மனிதனுக்குத் தேவையானவை, இருக்க இடம், பார்க்க வெளிச்சம், நடக்கப் பாதை, குடிக்க நீர், இவைதான். இந்த இரண்டாண்டு காலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களெல்லாம் போய் அவரவர்கள் இடத்திலே உட்காருங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** எத்தனையோ கிராமங்கள் இன்றைக்கு குடிக்கக் குடிநீரைப் பெற்றிருக்கின்றன. ஒரு தனி மனிதன் 40 லிட்டர் வரை தண்ணீர் குடிக்கலாம்; 10 லிட்டர் என்று இருந்ததை 40 லிட்டராக மாற்றியது இந்த அரசுதான். இன்றைக்குக் குடிநீரே இல்லாத எல்லா மக்களுக்கும் குடிநீர் வழங்குகிற ஒரு நல்லெண்ணத்தைக் கொண்டு செயல்படுத்தி இந்த ஆண்டு மட்டும் 350 கோடி ரூபாயை அதற்காகத் தந்திருக்கிறார்கள். எங்களுடைய அமைச்சரவர்கள் இதற்காக மிகவும் சிரமப்பட்டு, 150 மக்கள் இருந்தாலே போதும், அதற்கு மேல்நிலைத் தொட்டி என்று இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 1] [திரு. மா. இராமச்சந்திரன்]

அதுமட்டுமல்ல, 1976-க்குப் பின்னாலே, கிராமங்களிலே இருக்கிற மாணவர்களெல்லாம் மருத்துவம், பொறியியல் கல்லூரிகளிலே சேர்வது என்பது நடைமுறை குறைவான ஒரு பழக்கம் ஆகிவிட்டது. ஆனால் இந்த ஆட்சிக்குப் பின்னாலே மறுபடியும் வந்த ஆட்சியாளர்கள் என்ன நடைமுறையைப் பின்பற்றினார்களோ, அதனால் கிராமத்து மாணவர்கள் படிக்க முடியவில்லை. ஆனால், முதல்வரவர்கள், சென்ற ஆண்டு பொறியியல் கல்லூரிக்கு மட்டும் 15 சதவீதத்தை ஒதுக்கியிருந்தார்கள். இன்றைக்கு மருத்துவக் கல்லூரிக்கும் 15 சதவீதம் வருகிறபொழுது கிராமத்து மாணவர்களும் படித்து முன்னேறுவதற்கு, கிராமத்திலே மருத்துவர்கள் உருவாகலாம் என்கிற சூழ்நிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-55

நாடாளுமன்றத்திலேகூட ஒருவர் பேசினார். வடக்கிலிருந்து சாமியார்களெல்லாம் வந்தால் தென்னகத்திலே விடமாட்டோம் என்று சொன்னார் என்று சொன்னார்கள், தன்னுடைய பெயரிலேகூட சாமியைக் குறைத்துக்கொண்டு இன்றைக்குப் பசு மாடாகப் போனவர்கள். நாட்டிலே வடக்கில் இருப்பவர்கள் எல்லாம் இங்கு வர முடியாது என்கிற சூழ்நிலையை உருவாக்கி ஒரு தவறான கருத்தை நாடாளுமன்றத்திலே பரப்பி விட்டார்கள். ஆனால், இன்றைக்குக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னால், இரண்டு ஆண்டு காலம் ஆட்சி செய்த பின்னால் அறநிலையத் துறையிலே யார் யாரோ எடுத்துக் கொண்டிருந்தவற்றை, யார் யாரோ உபயோகப்படுத்திக் கொண்டிருந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்து 125 கோடி ரூபாய் பெருமானமுள்ள சொத்துக்கள் தமிழக அரசுக்கு, அறநிலையத் துறைக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது இந்த அரசின் சாதனையில்லையா? அதை வரவேற்காமல் இருக்க முடியுமா? (மணியடிக்கப்பெற்றது) என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றே பேசிவிட்டீர்கள். இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** தொகுதியைப் பற்றி பேசிவிடுகிறேன். 10 நிமிடத்தில் 3 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையைப்

[திரு. மா. இராமச்சந்திரன்] [1998 ஏப்ரல் 1

பாராட்டுவது என்பது எல்லோரும் பாராட்டுகிற ஒன்றுதான். நடைமுறையிலே 'இருக்கின்ற அத்தனை சாரங்களையும் படித்து வகுப்பது என்பது ஒரு பெரிய சரித்திரம். அதை சாமான்னியமாக எல்லோராலும் சொல்ல முடியாது. எங்களுடைய தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் 20 கோடி ரூபாய், 6 குளங்கள், மடுக்களையும் ஆழப்படுத்துவதற்கு வசதி செய்து இருக்கின்றீர்கள். அந்த வசதிகளுக்கு எவ்வளவு சிறப்பாகச் சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் தந்து எங்களுடைய வாழ்வை முதலமைச்சர் அவர்கள் வளமாக்கியிருக்கிறார்.

அதே நேரத்திலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு கஷ்டம். குறுவை விளைந்தால், சம்பா விளைவதில்லை. விவசாயிகளால் கடன்களைக் கட்ட முடியவில்லை. பொதுவாக வருமானமே இல்லை என்கிறபோது கடன்களைக் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தினுடைய மக்கள் உங்களை நினைத்துப் பார்க்கின்றார்கள். நீங்கள் பிறந்த மண். அந்த மண்ணில் பிறந்த மைந்தன் நீங்கள். ஆகையினால் எங்களுக்கு அந்தக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, விவசாய வரி வாய்தாவை வஜா செய்து கொடுத்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குக் கருணையோடு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதிப் பிரச்சினை இன்னொன்றைச் சொல்லிவிடுகிறேன். முதலமுத்து வாரியம், நான் அடிக்கடி இந்த அவையிலே கேட்டு, பலமுறை நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். தயவு செய்து, அதை எங்களுக்குத் தருமாறு கேட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் - நம்முடைய திரு. வேலாயுதன் முறையிலே சொன்னால் எங்களுடைய முதலமைச்சர் - நீண்ட நெடுங்காலம், நூறாண்டுகளுக்கு மேல் வாழ வேண்டும். மகாபாரதத்திலே சொல்வது போல், யயாதி என்ற மன்னன் சுக்ராச்சாரியார் மகள் தேவயானியைத் திருமணம் செய்தான். அந்தக் காலத்திலேயே கலப்புத் திருமணம் செய்த நேரம் அந்தக் காலத்திலே சொல்பவர்கள், இதிகாச காலத்திலே சுக்ராச்சாரியாரின் மகள் தேவயானியை யயாதி திருமணம் செய்தான் என்று சொல்கிறார்கள். எங்களுடைய முதலமைச்சர் கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பவர்கள். ஆகவே, எங்களுடைய முதலமைச்சர் யயாதி போல் பல நூற்றாண்டு காலம் வாழ்ந்து இந்த நாட்டை ஆள



1998 ஏப்ரல் 1] [திரு. மா. இராமச்சந்திரன்]

வேண்டும். ராஜா ஜனகன்போல் இந்த நாட்டை ஆள வேண்டும். பலன் பாராமல் பணியாற்றுகின்ற எங்களுடைய முதலமைச்சர், கீதையிலே சொல்வதுபோல், பலன் கருதாமல் காரியங்களைச் செய்கிற முதலமைச்சர் பல ஆண்டு காலம் வாழ வேண்டும். அவர் வாழ்ந்தால் இந்த மண் வாழும் என்று சொல்லி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு ஏப்ரல் 1 என்பது எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாக்கியங்கள் அவையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலே நிச்சயமாக ஏறும். எதிர்காலத்திலே படிக்கின்றவர்கள் குழப்பம் அடைவார்கள். திரு. ஞானசேகரன் பேச ஆரம்பிக்கும்போதே குழப்ப வேண்டாம். எனவே, அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நலம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். எங்களுடைய வேலூர் தொகுதிக்காக 15 அம்சக் கோரிக்கையை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராளமாக சென்ற நிதிநிலை அறிக்கையிலே எங்களுடைய வேலூர் குடிநீர்த் திட்டத்திற்காக 9½ கோடி ரூபாய் வழங்கினார்கள். அரசாணை பிறப்பித்தார்கள்.

ஆனால் இன்றுவரை அங்கே வேலையே நடக்கவில்லை. நீர் ஆதாரத்தை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே, உடனடியாக போர்க்கால அடிப்படையில், சென்ற ஆண்டு ஒதுக்கிய அந்த 9½ கோடி ரூபாயைப் பயன்படுத்தி இந்தக் குடிநீர்த் திட்டத்தை வேலூர் நகருக்காகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** உறுப்பினரே திரும்பப்பெற்றுக் கொண்டதால் அகற்றப்பெற்றது.

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 1

முற்பகல் 11-00

வேலூரிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்காக ஏற்கெனவே Kirloskar Company, investigation எல்லாம் முடித்து, அதற்கு இரண்டு கோடி ரூபாய் ஆகும் என்று அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். நான் இந்த ஆண்டே, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூர் நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். நடப்பு ஆண்டில் அவர்கள் மனதை மாற்றிக்கொண்டு நிச்சயமாக, ஏற்கெனவே Kirloskar Company, investigation-ஐ முடித்திருக்கிற காரணத்தாலே, பாதி மானியத்தை அதாவது 50 சதவீதம் மானியத்தைக் கொடுத்து மீதி-தொகையை வேண்டுமானால் நாங்கள் கட்டி விடுகிறோம்-50 சதவீதம் மானியத்தைக் கொடுத்து எங்களுடைய வேலூரில் இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலூரில் புதிய பஸ் ஸ்டாண்டு 15 ஏக்கரிலே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே ஏற்கெனவே கோரிக்கை வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த இடத்தைப் பார்த்து விட்டு ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஓரிரு மாதங்களிலே எங்களுக்கு புதிய பஸ் ஸ்டாண்டு அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திற்குப் பல்கலைக்கழகத்தை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய வேலூருக்கும் பல்கலைக்கழகத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 18 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே அமைக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய Extension Centre வேலூரிலே இயங்கி வருகிறது. சேலத்திற்கு எப்படி வழங்கினீர்களோ அதேபோல் நடப்பாண்டில் எங்களுக்கும், வேலூரிலே ஒரு பல்கலைக்கழகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராளமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேலூரை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று பல காலமாகக் கூறி வந்திருக்கின்றேன். இந்த ஆண்டிலேயே நீங்கள் எங்களுடைய வேலூர் மாநகரத்தை மாநகராட்சியாக மாற்றித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. சி. ஞானசேகரன்]

அடுத்து இந்த நடப்பாண்டிலே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நான்கு மருத்துவக் கல்லூரிகள் அரசு சார்பிலே துவக்கப்படும் என்று சொன்னார்கள். எங்களுடைய வேலூருக்கும் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, உடனடியாக யாராவது ஒரு எஸ்.ஓ. போன்றவர்களைப் போட்டு - ஏனென்றால் இரண்டு மூன்று மாதத்திலே மாணவர்கள் பரீட்சை எழுதிவிட்டு அட்மிஷனுக்காக வந்தாக வேண்டும் - அதை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த ஆண்டு அரசு மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்குப் பூர்வாங்க வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரிலே ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஊராட்சி ஒன்றியத்திலே அலமேலுமங்காபுரத்தில் இருக்கக்கூடிய துணைச் சுகாதார நிலையத்தை பி.எச்.சி.யாக மாற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரில் சுற்றுலாத் துறையின் ஆபீஸ் ஒன்றை அமைத்து அங்கே மோட்டல் ஒன்றைக் கட்டி, வேலூர் கோட்டை அகழியையெல்லாம் அழுப்படுத்தி, அந்தக் கோட்டை அகழியிலேயும், அதேபோல் ஓட்டேரி, சதுப்பேரி போன்ற இடங்களிலேயும் படகுகளை விட்டு எங்களுடைய வேலூரைச் சுற்றுலா மையமாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்திலே 'பி' பிளாக்கைக் கட்டி விட்டார்கள். ஆனால் 'ஏ' பிளாக்கைக் கட்டவில்லை. ஆகவே 'ஏ' பிளாக்கைக் கட்டுவதற்கு நீங்கள் ஒதுக்கீடு செய்ததைக் கொடுத்து உடனடியாகக் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று நேரிடையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறப்பு விழாவிற்கு வந்தபோது கோரிக்கையை வைத்திருந்தேன். ஆகவே, உடனடியாக அங்கே 'ஏ' பிளாக்கைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Consumer Court-ஐ அதே வளாகத்திலேயே அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வேலூர், காட்பாடியிலே இருக்கக்கூடிய ஒரு பாலம் ஏற்கெனவே இடிந்து விழுந்துபோயிருக்கிறது. இரண்டு கோடி ரூபாயில்

பழைய பாலத்தைப் புதுப்பித்துக் கட்டவும், இன்னொரு புதிய பாலத்தை 19 கோடி ரூபாயில் - ஏற்கெனவே இன்வெஸ்டிகேஷன் முடிந்திருக்கிறது- உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரிலிருந்து சென்னைக்கு நான்கு வழிப்பாதையை உடனடியாக அமைத்துக் கொடுக்கவும், வேலூர் கிருஷ்ணா தியேட்டர் அருகே ஒரு மேம்பாலத்தைக் கட்டவும், சி.எம்.சி அருகே ஒரு சுரங்கப்பாதையைக் கட்டித்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சதுப்பேரியில் 600 ஏக்கர் பரப்பளவிலே 1 கோடி ரூபாய் தூர் எடுப்பதற்குத் தேவைப்படுகிறது. ஆகவே 1 கோடி ரூபாயை வழங்கி தூர் எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். வேலூரிலே இருக்கக்கூடிய கானாற்றைத் தூர் வாருவதற்கு 3½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி தொகுதியிலே எனக்கு 450 ஓட்டுகள் Railway Quarters பக்கத்திலே இருக்கின்றன. ஆகவே, காட்பாடியைத் தனித் தாலுக்காவாக மாற்றினால்தான் நான் அங்கே போகமுடியும். மேலும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே மூக்கை நீட்ட வேண்டியிருக்காது. ஆகவே உடனடியாக காட்பாடியைத் தனித் தாலுக்காவாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 15 அம்சக் கோரிக்கையை முடித்துக் கொடுத்தால், பிறகு நான் வேலூருக்கு என்று எதையுமே மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்கவே மாட்டேன். வருகிற மூன்று ஆண்டுகளில் கேட்காமல் இருக்க வேண்டுமென்றால் இவற்றை நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொது விவாதத்திற்கு வந்து விடுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலிலே நமக்கு ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதாக ஒரு உணர்வு இருந்தாலும்கூட, மக்களுக்கும் நமக்கும் இருக்கக்கூடிய ஒரு இடைவெளி கொஞ்சம் அதிகரித்துவிட்டதோ என்ற ஒரு அச்சம் இருக்கிற காரணத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சீரிய திட்டத்தை வகுத்து, ஒரு மாதத்திற்கு மூன்று மாவட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்து, அங்கே மக்கள் குறைகளைக் கேட்கும் நிகழ்ச்சியாக வைத்து ஆங்காங்கே அந்தப் பெட்டிஷன்களைப் பெற்று அப்போதே கிளியர் செய்வதற்கு நடவடிக்கை



எடுப்பார்கள் என்று சொன்னால், நான் சொன்ன பல திட்டங்கள் அங்கே நிறைவேறும். ஆகவே, ஒரு மாதத்திற்கு மூன்று மாவட்டங்கள் என்று வைத்துக் கொண்டால் கிட்டத்தட்ட ஒரு வருடத்திலே நீங்கள் தமிழகத்தையே சுற்றி வந்துவிடலாம். ஆகவே அப்படியொரு திட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் மாண்புமிகு அமைச்சர்கள் ஏதோ, அந்தந்தத் தொகுதி அமைச்சர்கள் அந்தந்தத் தொகுதியோடு நின்றுவிடுகிறார்கள். அப்படியொரு நிலைமை வரக்கூடாது. மாண்புமிகு அமைச்சர்கள் தமிழகம் முழுமைக்கும் சொந்தமானவர்கள். ஆகவே, அவர்கள் ஒரு ஆண்டிற்குள் எல்லா தொகுதிகளுக்கும் வந்ததாக நிகழ்ச்சிகள் வைத்து, மக்களுக்கும் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் ஒரு தொடர்பை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். மக்களுக்கும் அரசுக்கும் நல்லதொரு சீரிய பாலமாக நீங்கள் அமைத்துக் கொண்டால், இடைவெளி போய் நிச்சயமாக யாராலும் நம்மை அசைக்க முடியாது. அந்த அளவிற்கு நாம் மக்களோடு தொடர்பு கொள்கிறபோது நம்மீது எந்தவொரு ஏளனப் பேச்சுக்கும் இடமில்லாமல் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

முற்பகல் 11-05

பிளஸ் 2 தேர்விலே Physics பாடத்தில் எல்லா கேள்விகளும் மிகவும் கஷ்டமாகக் கொடுப்பதாக எல்லா மாணவர்களும் அழுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிராமப்புற மாணவர்களுக்கு அதில் ஒரு சலுகையைக் கொடுத்து, 15 மார்க் அவர்களுக்குச் சேர்க்கப்படும் என்று சொன்னால், நன்றாக இருக்கும். ஏனென்றால், இப்பொழுது இருக்கின்ற Physics பாடத்தில் கேள்விகளைப் பார்த்தீர்களானால், கிராமப்புறங்களிலிருந்து ஒரு மாணவன்கூட எம்.பி.பி.எஸ். தேர்வுக்கு வருவானா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு grace mark 10 அல்லது 15 போட்டு, அவர்கள் பாஸ் செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்வெட்டு, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் என்னவென்றால், ஒரு மணி நேரம் காலையிலும் ஒரு மணி நேரம் மாலையிலும் மின்வெட்டு என்று சொன்னால், அங்கே கிட்டத்தட்ட 20 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் கரண்ட் கட்

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 1

செய்யக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. சில நேரங்களில் எந்த ஆட்சியிலும் மின்வெட்டு இருந்தது என்று சொல்லியிருந்தாலும்கூட, நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டு காலம் ஆகிவிட்டது. கர்ம வீரர் காமராஜர் காலத்திலே எத்தனையோ திட்டங்களை நாம் கொண்டு வந்தோம். நெய்வேலி அனல் மின் திட்டம் வந்தது, கல்பாக்கம் திட்டம் வந்தது, பிறகு குந்தா திட்டம் வந்தது. இப்படிப்பட்ட பெரிய பெரிய திட்டங்களையெல்லாம் நீங்கள் வகுக்க வேண்டும். தனியார் துறையைக்கூட நீங்கள் முழுமையாக நம்பிவிடாதீர்கள். காரணம் அவர்கள் Purchase Agreement போடுகிறார்கள். பிறகு இல்லையென்று சொல்கிறார்கள். அதுபோன்ற நிலைமைகள் வரக்கூடாது. ஆகவே, அரசே கொஞ்சம் அதிகமாக அக்கறை எடுத்து ஒரு பெரிய திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சம்சாரம் இல்லாமல்கூட இருந்துவிடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது. ஒரு கடுமையான நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், நீங்கள் ஒரு திட்டத்தை வகுத்து மின்வெட்டைச் சரிசெய்ய வேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பார்த்தால், ஏற்கனவே சொன்னதைப் போன்று, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதை அதிகாரிகள் தவறுதலாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். காலையில் ஒரு மணி நேரம் மின்வெட்டு, மாலையில் ஒரு மணி நேரம் மின்வெட்டு என்றால், அங்கே 20 தரம் கரண்ட் கட் செய்யப்படுகிறது. சில நேரங்களில் 2 மணி நேரம்தான் கரண்ட்டே விடுகிறார்கள். இராணிப்பேட்டையில் அதற்காக கதவடைப்புக்கூடச் செய்தார்கள். அதுபோல, வாணியம்பாடியில் ஒரு போராட்டம் நடந்தது. ஆகவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவு போட்டு, ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக கரண்ட் கட் செய்தால் அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்று உத்தரவு போட வேண்டும். விவசாயிகளுக்கு இப்போது மின்வெட்டு இருக்கின்ற காரணத்தால், தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. அவர்களெல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து உங்கள் காலத்தில் தமிழகத்தில் மின்வெட்டே இல்லாத நிலைமைகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத்தான் மக்கள் நமக்கு அதிகமாக வாக்குகளை அளித்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பட்ஜெட்டைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1996-97-ல் நிறைய திட்டங்கள் வருவதாகச் சொன்னார்கள். காலையிலேகூட நான் கேட்டேன். சர்க்கரை ஆலைகளில் உள்ள மின்வெட்டு பற்றிச் சொன்னேன். படிப்படியாகக் கொடுப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு முழுவதுமாக மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.



1998 ஏப்ரல் 1] [திரு. சி. ஞானசேகரன்]

நேற்றையதினம்கூட கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என்று சொல்லப்பட்டது. அதுபோல மனிதன் எச்சத்திலிருந்துகூட மின்சாரம் தயாரிக்கத் திட்டம் வகுக்க வேண்டும். அதிலே பஞ்சம் இருக்காது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நீங்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஸ் கட்டணம்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிலோ மீட்டருக்கு 2 பைசா குறைத்ததை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் 14 பைசாவாகவும் இப்போது 18 பைசாவாகவும் குறைந்தது. ஒரு லிட்டர் டீசல் விலை 15 பைசா குறைந்திருக்கிறது. அதைக் கணக்கில் கொண்டு, உங்களுக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம், இடையில் 16 பைசாவாகக் குறைத்தால், மக்கள் இன்னும் அதை வரவேற்பார்கள் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ரேஷன் கார்டுகளில் சில குழப்பங்கள். நாம் ஏற்கெனவே 3 கலர் கார்டுகள் என்று சொன்னோம். இப்பொழுது 2 கலர் கார்டுகள் என்று சொல்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ரேஷன் கார்டுகள் வழங்குவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டாலும், இருக்கக் கூடியவர்களுக்கு temporary கார்டு கொடுக்க ஏற்பாடு செய்யலாம். அப்படிக் கொடுத்து அவர்களுக்கு இருக்கக்கூடிய குறையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, shortage of goods. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைவே இல்லையென்று சொன்னார்கள். ஒவ்வொரு ரேஷன் கடைகளிலும் குறைந்த அளவில்தான் பொருட்கள் கொடுக்கிறார்கள். அதனால் பெரிய பூகம்பமே வெடிக்கிறது. அதைப்போல அதிகாரிகள் பொருட்களை ரேஷன் கடைகளில் சென்று இறக்குவதில் குறைவு இருக்கிறது. Short supply இருக்கிறது. இதையெல்லாம் தவிர்த்து, நீங்கள் ரேஷன் கடைகளில் முழுவதுமாகப் பொருட்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரேஷன் கடைகளில் வேலை செய்பவர்களின் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குக்

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 1

குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று சொன்னால், ரேஷன் பொருட்களைத் திருடுவதைத் தவிர்க்க முடியும். அப்படியும் மீறித் திருடுவார்களேயானால், அவர்கள்மீது குண்டர்கள் சட்டம் பாயும், அவர்கள் வேலையை இழப்பார்கள் என்று அரசு உத்தரவு போட்டால் இதுபோன்ற குறைகளைத் தவிர்க்கலாம்.

அடுத்து, சமையல் எண்ணெய்க்கு இருந்த வரியை எடுத்து இருக்கிறீர்கள். அந்தப் பட்டியலில் வனஸ்பதியையும் சேர்த்துக் கொள்ளுங்கள். எங்கள் வாணியம்பாடி பகுதியில் அதிகமாக விளையக்கூடிய காசினி கீரையைக் கொண்டு டாக்டர் அக்பர் கவுசர் அவர்கள் கிட்னி வியாதிக்கு மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தக் காசினிக் கீரைக்கு நீங்கள் வரி விலக்குக் கொடுத்ததற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர், பெங்களூரில் சுந்தரமூர்த்தி என்பவர் எய்ட்ஸ் நோய்க்கு மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார். வேலூரிலிருந்து டாக்டர் அர்ச்சுனன் என்பவரும் கண்டுபிடித்து இருக்கிறார். அவர்களுக்கெல்லாம் ஒரு விருதுகூடக் கொடுக்கலாம். எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவர்களையும், கிட்னி நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவர்களையும் நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிட்டா நூலுக்குக் கொடுக்கக்கூடிய 2 சதவிகித வரியை நீங்கள் நீக்க வேண்டும். அதைப்போல மசாலாப்பொடிக்கு உள்ளதையும் நீக்க வேண்டும். அதைப்போல 50 சிசி வண்டிக்கு நீங்கள் வரி விலக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபோல 75 சிசி உள்ள ஹீரோ போன்ற வண்டிகளுக்கும் வரி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று கேளிக்கைப் பூங்கா மீதான வரி 20 சதவிகிதம் இருக்கிறது. அதையும் நீங்கள் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். அதற்கென ஒரு தனி அமைச்சரையே போடலாம். அல்லது ஒரு தனித் துறையை ஏற்படுத்தலாம். விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. மட்டன் விலை கிலோ 120 ரூபாய். மட்டன் வாங்க முடியவில்லை. ஆடுகள் நிறைய வளர்க்கலாம், ஜப்பான்காரன் நிறையப் பணம் தருவான் என்கிறார்கள். ஆனால் இங்கே மட்டன் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. காய்கறி விலை ஏறிக்கொண்டு இருக்கிறது. இதற்கென ஒரு தனித் துறையை, தனி



1998 ஏப்ரல் 1] [திரு. சி. ஞானசேகரன்]

வாரியத்தை ஏற்படுத்தி, விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளத்திலே இதற்கென ஒரு அமைப்பினை வைத்திருக்கிறார்கள். பொருள்களை அவர்களே கொள்முதல் செய்து குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். அப்படியாவது நீங்கள் செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்று வள்ளுவர் சொன்னார். வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். நிதிநிலை அறிக்கையின் முதல் பாராவிலேயே அவர்கள் அப்படித்தான் ஆரம்பிக்கிறார்கள். தன்னுடைய சொந்தத் தொழிலுக்குச் செய்தால் ஏதாவது நினைத்து விடுவார்கள் என்று நினைத்தாரோ, என்னவோ, தெரியவில்லை. வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டுள்ள உழவர்களைக் கொஞ்சம் புறக்கணித்து விட்டிருக்கிறார்கள். கரும்புக்கு 1 டன்னுக்கு ரூ.1,000/- ஆவது கொடுங்கள். கணக்குப் போட்டுப் பார்த்தால் அந்த 1,000 ரூபாயும் கட்டாது. ஆகவே ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும்.

விவசாயம் பொய்த்த கிணற்றுக் கடன், கூட்டுறவுக் கடன் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும். மானிய விலையிலே உரங்கள் கொடுக்க வேண்டும். மின்வெட்டைக் கொஞ்சம் தளர்த்தினால் அனைத்து விவசாயிகளும் மகிழ்ச்சி அடைவார்கள். இதையெல்லாம் செய்து விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

Land Improvement Board-ல் நான், பொய்யாமொழி, அருண்குமார் போன்றவர்களெல்லாம் உறுப்பினர்கள். இந்த போர்டு எங்கேயிருக்கிறது? இதன் பணி என்ன? நானும் தேடித்தேடி பார்த்தேன். எங்களிடம் வேலை வாங்குவதற்கும் இன்னும் அந்தத் துறைக்குத் தெரியவில்லை. Land Improvement Board உறுப்பினர்களாக எங்களையெல்லாம் நியமித்துவிட்டு, அது எங்கேயிருக்கிறது, அதன் பணி என்ன என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. அதையெல்லாம் கண்டுபிடித்து, அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Unemployment நிறைய இருக்கிறது. சுருங்கச் சொன்னால், நம்முடைய பொதுப் பணித் துறையானாலும் சரி, போக்குவரத்துத் துறையானாலும் சரி, எஸ்.எஸ்.ஐ. யூனிட்டில் கடன்

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 1

பெற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. ஏராளமானவர்கள் அரசு வேலைக்குப் போக முடியாததால், பி.ஈ., படித்துவிட்டு, மற்ற படிப்புகளைப் படித்துவிட்டு, சொந்தத் தொழில் துவக்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து கடனை வாங்கித் தொழில் செய்கிறார்கள். Tyre retread பண்ணுகிறார்கள். பொறியாளர்களாக இருப்பவர்கள் பொதுப் பணித் துறையில் கான்டிராக்ட் எடுக்கிறார்கள். பொதுப் பணித்துறை, இன்னும் சில துறைகளில் இதற்கு வரையறை வைத்திருக்கிறார்கள். பெரிய புல்டோசர், ஜே.சி.வி. இருக்கிறவர்கள்தான் இந்த வேலைகளுக்கு வர வேண்டுமென்று சொன்னால், ஆந்திராவில் இருக்கக்கூடியவர்கள்தான் வருகிறார்கள். அதேபோல Tyre retread என்று சொன்னாலும் உத்தரப்பிரதேசத்திலிருந்து, ஹைதராபாத்திலிருந்து வருகிறார்கள். வெளி மாநிலங்களில் இருந்து இங்கு வருகிறார்கள். நம்முடைய தமிழகத்தில் அந்த வேலைகளைச் செய்து, பலனை அனுபவித்து வருகிறார்கள். தமிழகத்தில் தமிழர்கள் நசுக்கப்படுகிறார்கள். எஸ்.எஸ்.ஐ.யில் கடனை வாங்கிவிட்டு கடனில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். நாமெல்லாம் ஆந்திரா, கேரளா மற்ற வெளி மாநிலங்களுக்குச் சென்று டெண்டர் எல்லாம் போட முடியாது. அங்கெல்லாம். Sons of the soil என்று சொல்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே வாழ்கிற தமிழர்களுக்கு முன்னுரிமை அளித்து, எஸ்.எஸ்.ஐ. யூனிட்டில் இருக்கிறவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற வகையில் Tyre retread ஆனாலும் சரி spare parts ஆனாலும் சரி, இதையெல்லாம் செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மருத்துவக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் துவக்க அனுமதி கொடுக்க வேண்டும். நம்முடைய ஆட்கள் கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களுக்குச் சென்று பணத்தைக் கொடுத்து, எம்.பி.பி.எஸ்.க்கு 20 இலட்ச ரூபாய், 10 இலட்ச ரூபாய் என்று பணத்தைக் கொடுத்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியார் எம்.பி.பி.எஸ்., பி.எஸ்.ஸி. (நர்சிங்) Physiotherapy, Pharmacy போன்ற படிப்புகளையெல்லாம் இங்கே தொடங்குவதற்கு—கிராக்கியுள்ள படிப்புகளாக இவைகள் இருப்பதால்—அனுமதி தர வேண்டும். மற்ற மாநிலங்களுக்குச் சென்று பணத்தைக் கொடுத்து இத்தகைய படிப்புகளைப் படிப்பதைவிட, தமிழகத்தில் தமிழ் மக்கள் படிக்கிற வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி கோமதி சீனிவாசன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உங்களுடைய தீர்ப்பை ஏற்று மிக வேகமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

சத்துணவுப் பணியாளர்கள் பல காலமாகப் போராடிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கி, குறைந்தபட்சம் ரூ.1,000/- அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட பல்கலைக் கழகத்திற்கு 50 இலட்ச ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். வரவேற்கிறேன். தஞ்சைப் பல்கலைக் கழகத்திற்கும் கொஞ்சம் பணத்தைக் கொடுங்கள். அதற்கு நிகரானதுதான் இந்தப் பல்கலைக்கழகமும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர் பயிற்சி மாணவர்கள். இந்த ஆண்டாவது அவர்களுக்கு விடிவுகாலம் பிறக்க வேண்டும். கடந்த கால ஆட்சியிலே அவர்கள் பல அவலங்களைச் சந்தித்து, பணத்தைக் கொடுத்து ஏமாந்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர் பயிற்சி படித்த மாணவர்களுக்குத் தயவுசெய்து எப்படியாவது மீண்டும் தேர்வு வைத்து, அஞ்சல் வழியிலாவது, மூன்று மாத புத்தாக்கப் பயிற்சியை நடத்தி, பரிட்சை எழுத வைத்து, அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கு குறித்து காவல் துறைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு கடுமையான உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். காரணம், பட்ஜெட்டிலே பாதியை நமது அதிகாரிகளுக்குக் கொடுக்கிறோம். எனவே, அந்த அதிகாரிகள் கொஞ்சம் கடுமையாக உழைத்து இந்த அரசுக்கு ஒரு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாதி

வருவாயைச் சாப்பிட்டுவிடக்கூடிய அந்த அதிகாரிகள் - அவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று நான் தப்பாகச் சொல்லவில்லை - அவ்வளவு செலவு பண்ணக்கூடிய நேரத்தில், சம்பளத்தோடு சரி, அவர்களுக்குக் கிம்பளம் என்ற ஒரு நிலைமை வரக்கூடாது. நாட்டிலே இலஞ்ச இலாவண்யம் மேல்தளத்திலே இல்லாவிட்டாலும்கூட, கீழ்த்தளத்திலே R.D.O Office, Registrar Office, Police Station என்றெல்லாம் இருக்கக்கூடிய இடங்களில் இலஞ்சம் இருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது, கள்ளச்சாராயத்தை விட்டுவிட்டு வேறு எந்தச் சாராயத்தையாவது கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள். கவர்மெண்ட் சாராயத்தைக் கொண்டு வாருங்கள் என்று அவர் சொல்லாமல் சொன்னாலும்கூட, அப்படிப்பட்ட ஒரு நிலைமை வேண்டாம். அந்தக் கள்ளச்சாராயம் அல்லது சாராயம்தான் எல்லாக் குற்றங்களுக்கும் காரணகர்த்தாவாக இருக்கின்ற காரணத்தினாலே, கர்மவீரர் காமராஜர் வழியிலே, அதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியிலே நம்முடைய முதல்வர் அவர்களும் இந்தச் சாராயத்தை மட்டும் தயவு செய்து தமிழகத்திற்குள்ளே விட்டுவிடாதீர்கள். இருக்கக்கூடிய ஐ.எம்.எஃப்.எல். கடைகளைக்கூட எடுத்துவிட்டு, அதனால் நமக்கு நஷ்டம் வந்தாலும்கூட, தமிழகத்திலே மது என்ற அரக்கன் நுழைய மாட்டான் என்ற உறுதியை நீங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் மாநில அரசுக்கு ஏதாவது ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைச் சொல்வார் என்று எதிர்பார்த்தால், மாநில அரசாங்கத்தினுடைய ரெவின்யூவைக் குறைப்பதற்குரிய ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியும் வாழலாம்; இப்படித்தான் வாழவேண்டும்





என்று இரண்டு வாய்ப்புக்கள் இருக்கின்றன. அது திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும். வருமானம் வருகிறது என்பதற்காக நாம் Red light area-வைத் திறந்துவிட முடியுமா? அல்லது, இங்கே இருக்கக்கூடிய மதுபானக் கடைகளையெல்லாம் திறந்துவிட முடியுமா? நாட்டிலே சட்டம் ஒழுங்கு, இங்கு இருக்கக்கூடிய மனிதனுக்குப் பாதுகாப்பு, அவனுக்கு உண்ண உணவு ஆகியவற்றிலேதான் கலைஞர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்; இருக்க வேண்டும்; மது என்ற அரக்கன் உள்ளே நுழையக் கூடாது என்பதிலே தமிழ் மாநில காங்கிரஸ் உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கை வலியுறுத்திய மகாத்மா காந்தி அடிகள் பிறந்த மண்ணிலேயே மது விலக்கு இல்லை என்பது வேதனைக்குரிய ஒரு விஷயம் என்பதோடு, எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், இன்றைக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் எல்லோருமே குற்றம் சாட்டுவது கள்ளச் சாராயம் ஓடுகிறது என்பதுதான். சாராயம் நடைமுறையில் ஒழிக்கப்படவேயில்லை. ஆகவே, ஒழிக்கப்படாத ஒன்றை ஒழித்துவிட்டது போல் பாவனை செய்வது நல்லதல்ல. எனவே, உண்மையிலேயே மாநில அரசு ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல் செய்ய வேண்டுமானால், அதற்குரிய ரெவின்யூவை உருவாக்குவதற்குரிய வழிவகைகளில் அதுவும் ஒன்று என்பதை அடையாளம் காட்டுகிறேன், அவ்வளவுதான்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான செய்தியைச் சொல்கிறார்கள். மகாத்மா காந்தி பிறந்த மண்ணில் இதுவரை தொடர்ந்து மதுவிலக்கு அமலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மகாத்மா காந்தி பிறந்த மண்ணிலும் கள்ளச்சாராயம் இருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் சொன்னேன். மதுவிலக்கு இருக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அங்கே கள்ளச்சாராயம் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. (குறுக்கீடு)

[1998 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். திருமதி கோமதி சீனிவாசன் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குஜராத் மாநிலத்தில் ஒருவேளை கள்ளச்சாராயம் இருந்தாலும்கூட, அதற்காக மகாத்மா காந்தியினுடைய பெயரை இழுப்பது தவறு. அங்கே அமல்படுத்தக்கூடிய அதிகாரிகள் சரியாக, செம்மையாகச் செயல்படவில்லையேயொழிய மகாத்மா காந்தி பிறந்த மண்ணிலேயே கள்ளச்சாராயம் இருக்கிறது. கள்ளச்சாராயம் இருக்கிறது என்று மகாத்மா காந்தியை தயவுசெய்து கள்ளச்சாராயத்திற்குத் துணைக்குக் கூப்பிடாதீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறாக அர்த்தப்பட்டு விடக்கூடாது. தமிழ் மாநில காங்கிரசார் மகாத்மா காந்தியடிகளை நேசிப்பதைக்காட்டிலும் மிக அதிகம் நேசிக்கிற இயக்கத்தைச் சேர்ந்தவன் நான். எனவே, மகாத்மாகாந்தியடிகளுடைய உள்ளுணர்வு முழுவதும் நிறைவேறவில்லை என்கிற ஆதங்கத்தோடு குறிப்பிட்டேனே தவிர வேறொன்றும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன்.

**திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாற்றாரும் போற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்கள்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு காந்தியடிகள்மீது இருக்கக்கூடிய பற்று எனக்கு நன்றாகவே தெரியும். அதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். இருந்தாலும்கூட, காந்தி பிறந்த மண்ணில் சாராயம் அவர் வாழ்ந்த காலத்திலே இல்லை. அதற்குப் பின்னாலே வந்தவர்கள் காலத்திலேதான் வந்தது. இதுகூட அண்ணா அவர்கள் வாழ்ந்த பூமி. அண்ணா அவர்கள் வாழ்ந்த பூமியில் நடக்கிறது என்று சொன்னால், அவருடைய காலத்திற்குப் பின்னால் நடக்கின்ற நிகழ்வுகள். அவர்கள் காலத்திலே அங்கே மதுவிலக்கு உண்மையிலேயே இருந்தது. இப்போது இருக்கக்கூடிய



1998 ஏப்ரல் 1] [திரு. சி. ஞானசேகரன்]

ஆட்சியாளர்கள் - நீங்கள் சொன்னதைப்போல- தளர்த்திவிட்டு வருவாய்க்கு வழி செய்ய வேண்டுமென்று, பின்னாலே வந்தவர்கள் செய்திருக்கலாமேயொழிய, காந்தி இருந்த காலத்தில் அந்த மண் உண்மையிலேயே புனித பூமியாக புண்ணிய பூமியாக இருந்தது. அதேபோலத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், நாமெல்லாமும் இருக்கின்றபோது, இது ஒரு நல்ல பூமியாக இருக்க வேண்டும் என்கிற ஒரு நல்லுணர்வோடு நான் கூறுகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன்.

**திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மாற்றாரும் போற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த அவையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற ஒரு வாய்ப்பை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தலைமையாகக் கொண்டிருக்கிற இந்த அரசின் தலையாயக் கொள்கையே, 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்பதுதான். அந்தவகையில், இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதை அறிந்து, பலரும் பாராட்டுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையினை நாம் உன்னிப்பாகக் கவனித்தால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எந்த அளவுக்கு உற்றுநோக்கி வந்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெளிவாகப் புலனாகிறது. மக்கள் அன்றாடம் வாழ்க்கை நடத்துவதற்கு, வாழ்வதற்கு மிகமிகத் தேவையான அவசியமான பொருள்கள் ஒருபுறம்; தேவைக்கு அதிகமான பொருள்கள் ஒருபுறம் என்ற இந்த ஆய்வின் முடிவே இந்த நிதிநிலை அறிக்கையாகும். ஆகவேதான், மக்களுக்கு மிகமிகத் தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், குடிக்கத் தண்ணீர், கிராமங்களுக்கு மின்னொளி, நல்ல தார்ச்சாலைகள்

[திருமதி. கோமதி சீனிவாசன்] [1998 ஏப்ரல் 1

போன்றவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏழையெளிய மக்கள் முதல், பணக்காரர்கள் வரை அன்றாடம் கட்டாயம் பயன்படுத்தும் எண்ணெய் பொருள்களுக்கு வரிவிலக்கு அளித்திருப்பதையும் மசாலாப் பொடிகளுக்கும், தேங்காய்க் கொப்பரைப் பொருள்களுக்கும் வரியைக் குறைத்து இருப்பதையும் கண்டு தமிழகத்திலுள்ள தாய்மார்கள் மனந்திறந்து பாராட்டுகிறார்கள். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், நமக்கு நாமே திட்டமும், ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், ஏழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பும், கிராமங்களில் பல்வேறு நலத் திட்டங்கள் கிடைக்கின்ற அளவுக்கு முன்னேற்றமான திட்டங்களும் இன்றைக்கு நிறைவேற்றப்படுகின்றன.

நாகை, திருவாரூர், தஞ்சை போன்ற 3 மாவட்டங்களை உள்ளடக்கிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளின்பால் அன்பும், அக்கறையும் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம், காவிரி நீர்ப்பாசன வாய்க்கால்களில் நீண்டகாலமாக மண்டிக்கிடந்த செடிகொடிகளை, மணல் மேடுகளை அகற்ற ஆணை பிறப்பித்த நம் முதலமைச்சர் அவர்களிடம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலனை எண்ணி, கூட்டுறவுச் சங்கக் கடன்களையும், கடன்களுக்கான வட்டியையும், நிலவரியையும் இரத்து செய்யுமாறு மாவட்ட விவசாயிகளின் சார்பாக, மிகவும் அன்போடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பெண்கள் இந்நாட்டின் கண்கள்' என்பதை எண்ணி, மகளிர் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 55 கோடி ரூபாயை 91.20 கோடி ரூபாயாக உயர்த்தியிருப்பது, நமது முதலமைச்சர் அவர்கள் தமிழக மகளிரின்மேல் வைத்துள்ள கருணையைக் காட்டுகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமணத் திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் பெண்கள் நிதியுதவி பெறும் வகையில் 60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, ஏழையெளிய பெண்கள்மீது நம் முதல்வர் அவர்கள் வைத்துள்ள பரிவைக் காட்டுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர் கல்வி மற்றும் பல்வேறு நலத்



1998 ஏப்ரல் 1] [திருமதி. கோமதி சீனிவாசன்]

திட்டங்களின் மூலமாகப் பயன்பெறும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வயதுவரம்பின் அடிப்படையில் வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.100-லிருந்து ரூ. 150-ஆக உயர்த்தியிருப்பது நம் முதலமைச்சர் அவர்களின் மனிதாபிமானத்தைக் காட்டுகிறது.

சாதிப் பிரிவினை அற்ற சமுதாயத்தை உருவாக்கும் எண்ணத்தில் 'சமத்துவபுரம்' கண்ட நம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நல்ல காரியங்களுக்காக இன்னுயிரையே தந்த தியாகிகளுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவனுக்கும், விடுதலை வீரர் சுந்தரலிங்கத்திற்கும், அரசியல் மேதை டாக்டர் அம்பேத்கருக்கும், நேதாஜிக்கும், பொதுவுடைமை வீரர் ஜீவாவுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்புச் சேர்க்க மறந்துவிடவில்லை.

நாட்டு மக்களுக்கு நல்ல நிதிநிலை அறிக்கையினைத் தந்த நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் எனது தொகுதியின் சார்பாக சில வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான களக்குடி பிராந்தைக்கருகில் வெண்ணாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டப்படவும், பாசன வசதியைக் கருத்தில் கொண்டு வெண்ணாற்றில் கடலூருக்கு அருகில் ரெகுலேட்டர் ஒன்று அமைக்கவும், ஆவூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவும், மெலட்டூர், அரித்துவாரமங்கலம் காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டு, இந்த உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான எனது கன்னிப்

பேச்சைத் துவக்குகிற இந்த வேளையில் இந்த அவையில் உறுப்பினராக, அமைச்சராக வீற்றிருந்து அரும் பணியாற்றி கடந்த வருடம் மறைந்த என்னுடைய தந்தையார் அமரர் தங்கபாண்டியன் அவர்களுடைய மறைவிற்குப் பின்னால் நாங்களெல்லாம் துயருற்றிருந்த வேளையில் என்னை அழைத்து, தேற்றி, அரவணைத்து ஆறுதல் சொல்லி எனக்குத் தங்கம் தென்னரசு என்ற ஒரு பெயரைச் சூட்டி, என்னைப் பொதுவாழ்வில் ஈடுபடுத்தி, அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக என்னை நிறுத்தி, அதற்குப் பின்னால் இன்றைக்கு இந்தத் தொகுதியினுடைய உறுப்பினராக என்னை ஆக்கி, இந்த மாமன்றத்திலே கூடியிருக்கக்கூடிய பெருமக்கள் முன்னிலையிலே உரை நிகழ்த்தக்கூடிய ஒரு வாய்ப்பினை எனக்கு வழங்கி இருக்கக்கூடிய எங்களுடைய நெஞ்சம் நிறைந்த தலைவர், எங்களுடைய குடும்பத் தலைவர், தன்மானத் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்களுடைய சீரிய தலைமையில், நேரிய வழியில் இந்தக் கழக ஆட்சி என்றென்றும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பளித்து, நல்ல ஓட்டுக்களை மாத்திரம் எங்களுக்கு அளித்து, என்னை வெற்றி பெறச் செய்திருக்கக்கூடிய அருப்புக்கோட்டைத் தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, பசி நோக்காது, கண் துஞ்சாது, மெய்வருத்தம் பாராது, கருமமே கண்ணாயினராகயிருந்து தொடர்ந்து பாடுபட்டு உழைத்து என்னை வெற்றி பெறச் செய்த அஞ்சா நெஞ்சர் ஆற்றலரசருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அது மாத்திரம் அல்ல. காடு, மேடு எல்லாம் சுற்றி அலைந்து சுட்டெரிக்கின்ற வெயிலையும், சுடுமணலையும் பொருட்படுத்தாமல் நாளெல்லாம் சுற்றிச்சுழன்று என்னை வெற்றி பெறச் செய்த நம்முடைய தமிழகத்து தளபதி வணக்கத்திற்குரிய அண்ணன் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் உரித்தாக்குகின்றேன்.

அதேபோல, கழகத்தினுடைய வேட்பாளராகப் போட்டியிட்ட என்னுடைய வெற்றிக்கு அயராது பாடுபட்ட கழகத்தினுடைய முன்னணியினருக்கும், தோழமைக் கட்சியினுடைய தலைவர்களுக்கும்





இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்திலே இந்த அவையிலே, அமைச்சராகப் பணியாற்றி உங்களிடையே ஒருவராக இருந்து, மறைந்த என்னுடைய தந்தையார் அமரர் திரு. தங்கபாண்டியன் அவர்களுடைய நினைவுகள் என்னுடைய நெஞ்சிலே இன்றைக்கு நினைவலைகளாக மோதிக் கொண்டிருப்பதை நான் உணர்கின்றேன். அவருடைய உயிர் இருக்கின்றவரை அவர் தலைவரை நேசித்தார். அவருடைய உடல் இருக்கிறவரை அவர் இந்தக் கழகத்தையே சுவாசித்தார். அவருடைய உள்ளம் அடங்குகின்ற வரை இந்த மக்களுக்காகவே யோசித்தார். இறுதியாக இராஜபாளையத்திலே சமுதாய ஒற்றுமைக்காகத் தன்னுடைய இன்னுயிரையும் அவர் சமர்ப்பித்தார். இன்றைக்கு அவர் இல்லையென்றாலும்கூட அவருடைய நினைவுகளை என்னுடைய நெஞ்சிலே சுமந்து, தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியிலே தொடர்ந்து நாங்கள் நடைபோடுவோம் என்று சூளுரைத்து, இன்றைக்கு அவர் அமைதியாகக் கண்மூடி உறங்குகின்ற மல்லாங்கிணறு மண்ணை நோக்கி என்னுடைய அஞ்சலியை நான் செலுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சை இங்கே நான் ஆரம்பிக்கிறபோது முதலிரவு அறைக்குள்ளே நுழைகின்ற புதுமணப் பெண்ணிற்கு இருக்கக்கூடிய உணர்வோடுதான், அதே படபடப்போடுதான் இங்கே நான் நின்று கொண்டிருக்கிறேன். புதுமணப் பெண்ணாக நான் இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக என்னுடைய தொகுதிக்காக நான் கோரிக்கைகளை விடுக்கின்றபோது அது நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்தையும், அதேபோல அமைச்சர் பெருமக்களுடைய கவனத்தையும் ஈர்க்கும் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வழங்குகிற நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள், "திருக்குவளை என்னும் கிராமத்தில் வேளாண் தொழிலில் ஈடுபாடும், இசைத்திறனும் கொண்ட மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து, அரிய வளம்கொழிப்பதும், அறிவாற்றலில் சிறந்ததுமான தமிழ்ச் சமுதாயம் காண வேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் கொண்டு தயாரிக்கப்பட்டது இந்த நிதிநிலை அறிக்கை" என்று குறிப்பிட்டிருந்தார்கள். திராவிட மரபிலே, மிகப்பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து, அளித்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையை, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையை

[திரு. தங்கம் தென்னரசு] [1998 ஏப்ரல் 1

தலைவர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது 1962-ஆம் ஆண்டு மாநிலங்களவையில் அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய கன்னிப் பேச்சிலே சுட்டிக் காட்டியதுதான் என்னுடைய நினைவுக்கு வருகிறது.

முற்பகல் 11-30

"I am proud to call myself a Dravidian, I say that I belong to the Dravidian stock and that is only because I consider that Dravidans have got something concrete, something distinct, something different to offer to the nation at large" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்குப் பிறகு 36 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே திராவிட மரபிலே பிறந்து, இன்றைக்கு திராவிட இயக்கத்தினுடைய ஒரே தலைவராக, தமிழகத்தினுடைய முதல்வராக, தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைத்தான் "something concrete, something distinct, something different" என்று அன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு சொல்லியிருக்கிறார்கள், என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஒரு வேளாண் குடியிலே பிறந்த பெருமகனுடைய நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிற காரணத்தால், இந்நிதிநிலை அறிக்கை ஒரு தென்னை மரமாக இருக்கிறது. தரையிலிருந்து தலை வரை அத்தனை பாகங்களும் பயன்படக்கூடிய ஒரு தென்னை மரமாக இந்த நிதிநிலை அறிக்கையை நான் காண்கிறேன். அதுபோல, அடியிலிருந்து நுனிவரை இனிக்கும் கரும்பாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வெல்லப் பிள்ளையாராக இருக்கிறது. எந்தப் பகுதியைப் பிட்டுப் பார்த்தாலும் சுவையாக இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் பார்த்தால் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளிப்பதிலிருந்து, இணைப்புச் சாலைகள், தகவல் தொழில் நுட்ப மையம், விரிவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தொடக்கப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை, இப்படி பக்கத்திற்குப் பக்கம் திருவிழாவாக அது இருந்தாலும்கூட, குறிப்பாகத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் குறித்து நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. தங்கம் தென்னரசு]

இந்த நிதிநிலை அறிக்கையில் தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்காக 4 முக்கிய தொழில் பூங்காக்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எண்ணூரிலே பெட்ரோலிய-இரசாயனத் தொழில் பூங்கா, திருநெல்வேலி மாவட்டத்தில் 700 கோடி ரூபாய் செலவில் உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா, தரமணியில் எல்காட் நிறுவனத்தோடு இணைந்து 7.5 ஏக்கர் பரப்பளவில் மென் பொருள் தொழில் பூங்கா, ("Software Park") கேளம்பாக்கத்திலே மென்பொருள் தொழில் முனைவோருக்கு என்று உயரிய தொழில் பூங்கா என்று 4 தொழில் பூங்காக்களை அமைத்திருக்கிறார்கள். இந்தியாவின் எந்த மாநிலத்தின் நிதிநிலை அறிக்கையிலும், ஒரே நிதிநிலை அறிக்கையில் 4 தொழில் பூங்காக்கள் அறிவிக்கப்பட்டது கிடையாது. எனவே, மாண்புமிகு முதல்வர் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை சாதனைக்குரியது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் பூங்கா என்று சொல்லுகிறபோது, அது சாதாரண தொழில் பேட்டையைவிட முன்னேறிய ஒன்றாக அமைகிறது. தொழில் பூங்காவைப் பொறுத்தமட்டில் அது காமதேனுவாக, கற்பகத்தருவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. நான் இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், மேம்படுத்தப்பட்ட மனைகள், ஏற்கெனவே தயாராக உருவாக்கப்பட்ட தொழில் கூடங்கள், மின்சார வசதி, தண்ணீர்வசதி, வடிகால் வசதி என்று எல்லாவற்றையும் ஒரு தங்கத் தாம்பாளத்திலே வைத்து தொழில் முனைவோர்களுக்கு அளிக்கும் இந்தத் தொழில் பூங்காக்கள்தான் தொழில் வளர்ச்சியை நாடுகின்ற ஒவ்வொரு வளரும் நாடுகளுக்கும் அடிப்படையான, இன்றியமையாத தேவையாக அமைந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய முன்னாள் பொருளாதார ஆலோசகரும், Director-General of National Council for Applied Economic Research தலைவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய ராகேஷ்மோகன் அவர்களும், அன்றைய நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களுக்கு அளித்த Indian Infrastructure Report-ல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். Industrial parks have been used as engines of growth by many South East Asian Countries like Malaysia and Singapore என்று அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. தங்கம் தென்னரசு] [1998 ஏப்ரல் 1

இன்றைக்குத் தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே, அந்த நாடுகளுடைய வளர்ச்சி வேகத்தைப் பார்க்கும்போது, ஏசியன் கன்ட்ரீஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த நாடுகளோடு இணைந்துகொள்ள வேண்டுமென்று போட்டி போடக்கூடிய நாடுகளினுடைய வளர்ச்சியின் அடிப்படைத் திட்டமாக இந்தத் தொழில் பூங்காக்கள் இன்றைக்கு அமைந்து இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு கருத்தையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிங்கப்பூரிலே Jurang Town Corporation என்ற தனியான அட்டானமஸ் அமைப்பு, தன்னாட்சி அமைப்பு இத்தகைய தொழில் பூங்காக்களை எல்லாம் நிர்வகிப்பதுபோல, தமிழ்நாட்டில் State Industrial Parks Promotional Authority — என்ற அமைப்பை ஏற்படுத்தி தொழில் பூங்காக்களை நிர்வகிக்கச் செய்யலாம். அதுபோல, தொழில் நிறுவனங்களிடமிருந்து, அவர்களுடைய விற்பனைத் தொகையிலிருந்து கூடுதலாக நமக்குக் கிடைக்கக்கூடிய 100 கோடி ரூபாயை இதுபோன்ற தொழில் பூங்காக்களின் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நாம் தனியாகச் செலவிடலாம் என்ற ஒரு கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறாக அமையக்கூடிய தொழில் பூங்காக்களில் முக்கியமாக Petro-Chemical Area-வில் நாம் பிளாஸ்டிக் தொழிலுக்கு ஒரு முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

கி.பி. 2000-ல் பிளாஸ்டிக் தொழிலைப் பொறுத்தமட்டில் அதனுடைய ஏற்றுமதி சுமார் 5000 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே குறிப்பாகத் தென் பகுதிகளிலே பிளாஸ்டிக் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இரண்டே இரண்டு தொழிற்சாலைகள் தான் இருக்கின்றன. எனவே, ஒரு நல்ல வாளியை வாங்க வேண்டுமானால் கூட அது டெல்லியிலிருந்தோ அல்லது பம்பாயிலிருந்தோ வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றி நம்முடைய தமிழ்நாட்டிலேயே தயாரிக்கக்கூடிய வகையில் தொழில் பூங்காக்களில் பிளாஸ்டிக் தொழிலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. தங்கம் தென்னரசு]

அதைப் போல இந்த பட்ஜெட்டிலே கணினி மென் பொருளுக்கு இருந்த வரிக்கு முழுமையாக விலக்களிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். இந்தியா இந்தத் துறையிலே இன்றைக்கு மிகச் சிறந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற நாடாக இருக்கின்றது. அமெரிக்காவிலிருந்து வரக்கூடிய மிகப் புகழ்பெற்ற Business Week கடந்த இதழ்களிலே ஒன்றைச் சுட்டிக் காட்டியுள்ளது. "Global search for brain power" என்ற தலைப்பிலே எழுதுகின்றபோது சௌதி அரேபியாவிலே எப்படித் தோண்டத் தோண்ட எண்ணெய் வளம் வருகின்றதோ, அதைப்போல இந்தியாவிலே இந்த மென் பொருளை அளிக்கக்கூடிய மனித வளம் மலிந்து கிடக்கின்றது என்று சுட்டிக்காட்டிச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் 1999-ஆம் ஆண்டு வாக்கில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுடைய தேவை 55000 ஆக இருக்கிறது. இதிலே தமிழ்நாட்டின் பங்கு 10 சதவிகிதம் என்று வைத்துக்கொண்டால், அதிலே நாம் இன்றைக்கு 5500 தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க வேண்டும். அதைப்போல அவர்களுக்கான இடவசதியைப் பொறுத்தவரையில் ஒருவருக்கு 100 சதுர அடி என்று பார்ப்போமேயானால் சுமார் 5 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி வரும் ஆண்டிலே நமக்குத் தேவைப்படுகிறது. இதை எல்லாம் கருத்திலே கொண்டுதான் இந்த அரசு இன்றைக்கு தரமணியிலே 'எல்காட்'-உடன் சேர்ந்த ஒரு மென்பொருள் பூங்காவை உருவாக்கி இருப்பதை நினைக்கும்போது நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல இந்த மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தமட்டில் அது இந்த ஆண்டிலே 1.75 மில்லியன் டாலர் ஏறத்தாழ 7000 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை வரும். 2000-இலே 26000 கோடியாக, அதாவது சுமார் 6.5 பில்லியன் டாலராக அது உயரக்கூடிய சூழ்நிலையில் இந்தத் தொழிலுக்கு முழுமையான வரிவிலக்கு அளித்திருப்பதற்கு இந்த அரசினை நான் உள்ளபடியே மெத்தப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். "INFOSYS" போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம் குறிப்பிடும்படி இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற வரிச் சலுகையைப் பார்க்கின்றபோது மெத்தவும் நன்றாக இருக்கின்றது. இன்றைக்கு 'எக்கனாமிக் டைம்ஸ்' பத்திரிகையிலே அதனுடைய துணை மேலாண்மை இயக்குநர் Nandan Nilekarni அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு தங்கம் தென்னரசு] [1998 ஏப்ரல் 1

"There is tremendous pool of talent in Chennai that is very suitable for the work we do. The infrastructure is good. The Government is supportive. INFOSYS is extremely satisfied with the growth in Chennai, the facility and calibre of the people" என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிலவக்கூடிய தொழில் வளர்ச்சிக்கான ஒரு இணக்கமான சூழ்நிலையை எடுத்துக்காட்டியிருப்பதைப் பார்க்கின்றபோது, "The best State to invest in" என்று 'பிசினஸ் டுடே'ல் கடந்த ஜனவரி மாதம் வந்திருக்கின்ற செய்தியைப் பார்க்கும்போது, தமிழ்நாடு இதிலே மூன்றாவது இடத்திலே இருக்கின்றது. இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்ற திட்டத்தை நிறைவேற்றியபின் பார்ப்போமானால் இந்தியாவிலே தொழில் துவக்கக் கூடிய மாநிலங்களில் முதல் இடம் தமிழகத்திற்கு நிச்சயமாகக் கிடைக்கும். அத்தகைய பெருமைக்குக் கலைஞர் அவர்கள் இட்டுச் செல்வார்கள் என்று தெரிந்துகொள்ளும் இந்த நேரத்தில் நான் தமிழ் மொழியிலே மென்பொருள் எழுதுவதற்கான முயற்சியை ஊக்குவித்திட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இத்தாலிக்குச் செல்வோமேயானால், முழுக்க, முழுக்க கணினி மென்பொருள் இத்தாலிய மொழியிலேயே இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் அமெரிக்காவில் உற்பத்தி செய்யக்கூடிய அந்த மென்பொருள் கூட இத்தாலி மொழியில் எழுதப்பட்டுத்தான் அது இத்தாலிக்கு வருகிறது. அந்த அளவிற்கு அவர்கள் தாய்மொழிக்கு அங்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். இங்கே தமிழ்நாட்டிலே கூடத் தமிழிலே மென்பொருள் எழுதக்கூடிய வல்லுநர்கள் இன்றைக்கு இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தக்கூடிய அளவிற்கு தமிழிலே மென்பொருள் எழுதக்கூடிய வல்லுநர்களுக்கு அரசு கடன் உதவியையும், மானியங்களையும் வழங்கிட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக என்னுடைய தொகுதியைப் பற்றி நான் சொல்ல வேண்டும். காரியாப்பட்டியை தனித் தாலுக்காவாக அமைக்க வேண்டுமென்பது என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கின்றது.

முற்பகல் 11-40

முதல்வர் அவர்கள், இந்த நிதி நிலை அறிக்கையிலே 9 புதிய வட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான்



1998 ஏப்ரல் 1] [திரு. தங்கம் தென்னரசு]

மகிழ்ச்சியடைகிறேன். கூடுதலாக இன்னொரு வட்டத்தையும் சேர்த்து, பத்தாவது வட்டமாக காரியாப்பட்டியையும் சேர்த்து அறிவிப்பார்களே யானால் நான் மெத்த மகிழ்ச்சி அடைவேன்.

நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். முதல்வர் அவர்கள், இந்த நிதி நிலை அறிக்கையை பத்தாவது நிதி நிலை அறிக்கையாக அளித்திருக்கின்றார்கள். இங்கே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் சொல்லும்போது, பத்து மாதங்கள் சுமந்து இந்த நிதி நிலை அறிக்கையினை அளித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால், சட்டமன்றப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட, தலைவர் அவர்களைப் பாராட்டிப் பேசுகின்றபோது, 'ஒன்றானவன், இரண்டானவன்,' என்று இப்படிச் சொல்லிக்கொண்டே 'பத்தானவன்' வரை அவர் சொல்லி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் பிடித்த சங்க இலக்கியம் கூட 'பத்துப் பாட்டு' என்றுதான் இருக்கிறது. எனவே, இவ்வளவு 'பத்துகள்' இருக்கும்போது, காரியாப்பட்டி வட்டத்தையும் சேர்த்து, பத்து தாலுக்காக்களாகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆக்கித்தர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, 'ஒன்பது' என்ற எண் நமக்கு வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அது வேறு யாருக்கோ வேண்டிய நம்பராக இருக்கலாம். எனவே, 'ஒன்பது' என்ற அந்த நம்பரைத் தவிர்த்து, பத்தாவது தாலுக்காவாக எங்களுடைய காரியாப்பட்டியை முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திட வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, காரியாப்பட்டியிலே பஸ் டெப்போ ஏற்படுத்தப்பட வேண்டும். தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும். என்னுடைய சொந்த ஊரான மல்லாங்கிணற்றில் இருக்கக்கூடிய காவல் நிலையத்திற்கு ஒரு கட்டடம் கட்டித்தரப்பட வேண்டும். காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித்தரப்பட வேண்டும். கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும்.

அதேபோல, காரியாப்பட்டி ஒன்றியம், முருகையாபுரத்தில் ஒரு தொடக்கப்பள்ளி வேண்டும். திருச்சுழி தாலுக்காவிலே, திருச்சுழியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல் துறை துணை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.

[திரு. தங்கம் தென்னரசு] [1998 ஏப்ரல் 1

அதேபோல, திருச்சுழியிலே இருக்கக்கூடிய ஐ.டி.ஐ.–அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டும். திருச்சுழி மருத்துவமனைக்கு புதிய கட்டடம், ஒரு ஆம்புலன்ஸ் ஆகியவை அளிக்கப்பட வேண்டும்.

நரிக்குடி பகுதியிலே கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தப்பட வேண்டும். வீரசோழம், முடுக்கன்குளம் பகுதிகளில் அரசினர் மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும்.

கல்லூரணி, இலுப்பையூரிலே ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டகாலப் பாசனத் திட்டங்களாக இருக்கக்கூடிய நிலையூர், கம்பிக்குடி கண்மாய்த் திட்டத்தையும், நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிச்சயமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னைவிட, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியைப் பற்றி நன்றாகத் தெரியும். கிழக்கே வீரசோழத்திலிருந்து மேற்கே வில்லிபத்திரிவரை பரந்து இருக்கக்கூடிய அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமமும் அவருக்கு அத்துப்படி, எங்களுடைய நிலையை நன்றாக உணர்ந்தவர். நிலையூர், கம்பிக்குடி திட்டம் எங்களுடைய நீண்டகாலக் கனவு. அதை நனவாக்கத் தேவை, அமைச்சர் அவர்களுடைய கனிவு. எனவே, இதை நிச்சயமாகத் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டத்தையும், கிருதமால் நதித் திட்டத்தையும், தெற்காறு, குண்டாறு திட்டத்தையும் எங்களுக்கு மாண்புமிகு கலைஞர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் இந்த அவைக்கும் நன்றியினைத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்தாவது நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பத்தாவது நிதி நிலை அறிக்கையானது எல்லாப் பகுதி மக்களும் பல்வேறு சலுகைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ள



1998 ஏப்ரல் 1] [திரு. வை. சிவபுண்ணியம்]

ஒரு நிதி நிலை அறிக்கையாக இருக்கிறது. அதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே, குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது, 'செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னுரிமை தருவதைத் தவிர்த்து, உடனடியாக மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது' என்று இருக்கிறது. அதற்கான திட்ட அறிவிப்புகளும் வெளியிடப்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று.

இந்த நிதி நிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் பேரவைக்கு அளிக்கின்றபோது, தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. சென்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது என்னவென்றால், பட்ஜெட் கூட்டத் தொடர் முழுவதும் தொலைக்காட்சியிலே காட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த முறை என்னவாயிற்று என்று தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தால், இந்த நல்ல அறிக்கையின் மீது நாங்கள் கருத்துக்களைச் சொல்லுகின்றபோது, அதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே பல்வேறு காரியங்கள் செய்யப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தகவல் பெறும் உரிமைச் சட்டம் நமது மாநிலத்தில்தான் முதன் முதலாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இது மிகவும் பாராட்டுதற்குரியது. இதன்மூலம் நிருவாகம் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் எளிதில் பெற இயலும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்று. பல்வேறு சலுகைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகம், வரியில்லாமல் நோட்டுப் புத்தகங்கள், சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரிப்பாசன வாய்க்கால் பகுதிகளில் தூர் வாருகிற பணி சென்ற ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுபோல இந்த ஆண்டும் 20 கோடி ரூபாய்ச் செலவிலே மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக

[திரு. வை. சிவபுண்ணியம்] [1998 ஏப்ரல் 1

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மக்கள் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

மருத்துவத் துறையில் சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1408 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மருந்துகளுக்காக 106 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பல்வேறு திட்டங்கள் இதிலே சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியின் சார்பிலே சில கோரிக்கைகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆண்டுதோறும் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. புயல் வருகிறது, வெள்ளம் வருகிறது, வறட்சி வருகிறது, இப்படி மாறிமாறி இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை வருகிறது. இதைக் கருத்தில்கொண்டு, மாநிலத்திலே தனியாக நிரந்தரமாக ஒரு நிதி அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இயற்கைச் சீற்றங்களைக் கருத்தில் கொண்டு, நிரந்தரமான நிதி அமைப்பை உருவாக்கி, நிதி ஒதுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். அதைப்போல நிலச்சீர்திருத்தம் குறித்து முன்னுரிமை தரவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, பகுத்தறிவுக் கருத்துக்களை, நமது தமிழகத்திலே வேகமாகக் கொண்டு செல்வதற்குரிய முயற்சிகளைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனாலும்கூட, மேலும் இந்தக் கருத்துக்களைச் செம்மையாக எல்லாப் பகுதி மக்களுக்கும் எடுத்துச் சொல்வதற்கென, ஒரு தனித் துறையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தமிழ்ப் பண்பாட்டுத்துறை இருக்கிறது; அதுபோல மத்தியிலே மனிதவள மேம்பாட்டுத் துறை இருக்கிறது. அதைப்போன்று, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதற்காக ஒரு தனித் துறையை உருவாக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. வை. சிவபுண்ணியம்]

மேலும் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மத்திய அரசுக்கு இணையான ஊதியம் தமிழகத்திலே மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 9,000 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய திட்டங்களிலே இதற்கு 50 சதவிகிதம் வகை செய்யப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுடைய பிரச்சினைகளைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் தஞ்சை மாவட்ட விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கூற விரும்புகிறேன். ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகள் மிக ஆவலோடு இந்த பட்ஜெட்டில் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆகவே அந்த விவசாயிகளுக்காக இன்னும் திட்டங்கள் சேர்க்கப்பட வேண்டும்; அறிவிப்புகள் அறிவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். விவசாயிகள் பெற்று இருக்கின்ற கூட்டுறவுக் கடன்கள், குத்தகை பாக்கிகள், குறிப்பாகக் கோவில், மடம், தர்ம ஸ்தாபனம், அறக்கட்டளைகள் போன்றவற்றின் உதவியோடு சாகுபடி செய்யக்கூடிய குத்தகைதாரர்களுக்கு குத்தகைத் தள்ளுபடி, வரி வாய்தா தள்ளுபடி போன்றவைகள் குறித்து இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய முதல்வர் அவர்கள் கனிவு உள்ளத்தோடு விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்கள், குத்தகைப் பாக்கிகள், வரித் தள்ளுபடி போன்றவை குறித்து ஆழமாகப் பரிசீலித்து, வருகின்ற 6-ம் தேதியே இந்த மன்றத்தில் அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்கூட பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இடையிடையே கூட்டத்திற்கு வந்து ஊர் திரும்பும்போது, விவசாயப் பெருமக்கள் இந்த பட்ஜெட்டிலே அறிவிக்கப்படவில்லையே என்று ஆதங்கத்தோடு, தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிந்து செல்கிறபோது, நல்ல செய்தியோடு செல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அன்போடு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் தொழிலாளர்களுக்காக, திரு. கோலப்பன் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை அரசினிடத்திலே கொடுத்திருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத்

துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பரிசீலித்து, விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் பல சலுகைகளை இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் அறிவிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக, மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கியதைப்போல, ஏற்றத்தாழ்வைப் போக்கக்கூடிய வகையிலே ஏழை எளிய மக்களுடைய வருமானத்தையும் உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் காரியத்தைச் செய்வதன் மூலமாகத்தான், விலைவாசி உயர்வுகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். அதேநேரத்தில் சம்பள உயர்வே விலைவாசி உயர்வுக்கான காரணமாக ஆகிவிடக் கூடாத வகையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, மானாவாரிச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கும், கடன் தள்ளுபடி, வரித் தள்ளுபடி போன்றவைகள் கொடுப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மூத்த பெரியவர்களுக்கு, இந்த நாட்டிற்காக நல்ல காரியம் செய்தவர்களுக்கெல்லாம் நினைவிடங்கள், மணிமண்டபங்கள் கட்டுவதற்கான அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-50*

எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, நான் சென்ற கூட்டத் தொடரிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த வேண்டுகோளை வைத்து இருந்தேன். திரு. பி. சீனிவாசராவ் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கான வாய்ப்பினை மன்னார்குடியிலே ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைத்திருந்தேன். குறிப்பாக ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே அவருடைய கருத்துக்கள், குறிப்பாக சமூகநீதிக் கருத்துக்களை வலுவாகத் தாங்கி நின்று, அதற்காகப் போராடி,



பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்தவர் அவர். குறிப்பாக, சமூகநீதிக் கருத்துக்களுக்காக நம்முடைய கலைஞர் அவர்கள் சிறப்பான கருத்துக்களை மேற்கொண்டு அதற்குரிய ஆழமான உணர்வுகளோடு செயல்படக்கூடிய அவர்கள் அவர்களுடைய கருத்துக்களையே அந்த மாவட்டத்திலே மிகச் சிறப்பாக அந்தக் காலக்கட்டத்திலே போராடி பல்வேறு தியாகங்களைச் செய்து இருக்கிற அமரர் திரு. பி. சீனிவாசராவ் அவர்களுக்கு மன்னார்குடியிலே நினைவுச் சின்னம் — குறிப்பாக அவருக்கு சிலை வைக்கவேண்டும் என்ற அந்தக் கோரிக்கை சென்ற ஆண்டு வைக்கப்பட்டு இருக்கிறது. அதை நீங்கள் நிறைவேற்றிக் கொடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட மக்களிடையே தோன்றியவராக நந்தன் கதை வரலாறு இருக்கிறது. குறிப்பாக நந்தன் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் வகையில், அவருடைய பிறந்த பூமியாக இருக்கிற சீர்காழி தாலுக்காவிலே உள்ள ஆதனூரிலே ஒரு நினைவிடம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம், மகாத்மா காந்தி அவர்கள்கூட இந்த நந்தன் வரலாற்றைப் படித்துவிட்டு, புகழ் சார்ந்த சத்தியாகிரஹி என்று அந்தக் காலக் கட்டத்திலேயே பாராட்டி இருக்கிறார். அப்படிப்பட்ட நந்தனுக்கு ஒரு நினைவிடம் அமைப்பது என்பது பொருத்தமாக இருக்கும். அதற்குரிய முயற்சிகளை மரியாதைக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதோடு, அதிலேகூட ஒரு செய்தி இருக்கிறது; டாட்டா அவர்கள்கூட ஒரு கோடி ரூபாய் செலவிலே நந்தனுக்கு கோவில் கட்டித் தருவதாக.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நந்தனார் என்று சொல்லுங்கள்; நன்றாக இருக்கும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நந்தனார் அவர்களுக்கு, டாட்டா அவர்கள் ஒரு கோடி ரூபாய் செலவிலே கோவில் கட்டித் தருவதாக ஒரு செய்தி இருக்கிறது. அவர்கள் சொன்னதாக ஒரு செய்தி இருக்கிறது. ஆனால், இடையில் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, அதை நம்முடைய அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [1998 ஏப்ரல் 1

குறிப்பாகக் காவல் துறை பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்தத் துறையிலே சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. குறிப்பாகக் காவலர்களுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். காவல் துறையிலே Risk Allowance என்ற ஒரு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. அதாவது இன்னல்படி என்று வழங்கப்படுகிறது. இந்த இன்னல்படி என்பது குறைந்தபட்சம் 20 ரூபாய்தான் வழங்கப்படுவதாக ஒரு தகவல் இருக்கிறது. காவலர்களுக்குச் செய்யவேண்டிய உதவிகளிலே இந்த இன்னல்படியை ரூ. 100-லிருந்து ரூ. 200 என்ற அடிப்படையில் உயர்த்திக் கொடுத்தால், அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பெண் காவலர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவிலே இணைக்கப்பட்டு, அவர்கள் இப்போது பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் முகாம்களில் தங்கி மற்ற காரியங்களில் ஈடுபடுகிறபோது அவர்களுக்குச் சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, பொதுவாக இருக்கிற ரெகுலர் சர்வீஸிலேயே அவர்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பு இருக்குமானால் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும், கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலும், நான் நீண்டகாலமாக கவன ஈர்ப்பாகக்கூட கேட்டு இருக்கிறேன். வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை மீண்டும் அந்த இடத்திலே உருவாவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, அதற்குரிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மன்னார்குடித் தொகுதிக்கு உட்பட்ட செந்தாமரை மண்ணுகொண்டான் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடையும் வகையிலே கோரை ஆற்றிலே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கை இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டும்.



1998 ஏப்ரல் 1] [திரு. வை. சிவபுண்ணியம்]

மன்னார்குடி மருத்துவமனையை 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்தப் பணிகள் தொடக்கப்படவில்லை. அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பாமணி உர ஆலை முன்னாள் அமைச்சர் மன்னை அவர்களுடைய முயற்சியாலே மேற்கொள்ளப்பட்டது. அதில் சரியான செயல்பாடுகள் இல்லை. அதைப் புனரமைத்து விரிவுபடுத்தி, அது மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடி காட்டேரி வாய்க்கால் ஸ்கீம் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல களப்பால் பகுதியிலே எரிவாயு மூலமாக மின்நிலையம் தொடங்கப்படும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூத்தாநல்லூர்-பரவாக்கோட்டை-பைங்காநாடு பகுதியில் 2 துணை மின்நிலையங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கை சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கு வேண்டிய இடத்தைத் தரத் தயாராக இருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடியில் நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இதைக் கொண்டு வந்து இருக்கின்றேன். (மணி அடிக்கப்பெற்றது) குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிடும் பணிகளில் பல லட்சம் ரூபாய் ஊழல் நடைபெற்று இருப்பதாகத் தகவல் வந்து இருக்கிறது. அதை உரிய முறையிலே பரிசீலித்து, அதற்குக் காரணமான மன்னார்குடி ஏ.டி.ஈ., ஏ.ஈ., ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அந்தப் பகுதியிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துத் தக்க

[திரு. வை. சிவபுண்ணியம்] [1998 ஏப்ரல் 1

[illegible]டுக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களை நான் சொல்வதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு முதற்கண் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலும், கலைஞர் அவர்களுடைய பெருமையையும் அவருடைய சாதுரியத்தையும் அவருடைய துணிச்சலையும் எப்படி வரையறுப்பது என்பதை நிர்ணயிக்கக்கூடிய ஒரு சாசனமாக இந்த நிதிநிலை அறிக்கை இருந்து கொண்டிருக்கிறது.

பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய இந்த நிதிநிலை அறிக்கையை எல்லாத் தரப்பு மக்களும் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். உள்ளபடியே அடித்தளத்து மக்கள், தங்களுக்குக் கிடைத்திருக்கின்ற நன்மைகள் என்னென்ன என்பதை ஒவ்வொரு கட்டமாக அலசி ஆராய்ந்து இந்த நிதிநிலை அறிக்கையிலே எவ்வளவு சலுகைகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, உள்ளம் புளகாங்கிதம் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட அறிக்கை இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு வந்திருக்கலாமே, காலம் கடந்து வந்திருக்கிறதே என்று சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால் சிலர், இந்த அறிக்கையை வேண்டுமென்றே கொச்சைப் படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். அதைப்பற்றி கவலைப்படாமல், டாக்டர் கலைஞர் அவர்கள் வீறுநடை போட்டு இந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, நம் தமிழக மக்களைத் தலை நிமிரச் செய்யக்கூடிய ஒரு பெருமையைப் படைத்திருக்கிறார்கள். அதில் நமக்கும் பங்கு இருக்கிறது என்பதை எண்ணி நாங்களும் மகிழ்ச்சியடைகிறோம்.

கிராமப் பகுதி மக்களுக்கு சாலை வசதிகளையும், அடிப்படைத் தேவையான குடிநீர் வசதிகளையும், பாதாள சாக்கடைத் திட்டங்களையும் உள்ளடக்கிய இந்த் பட்ஜெட், போற்றுதலுக்குரிய ஒன்றாக இருக்கிறது. வியாபாரப் பெருங்குடி மக்களுக்கு வரிச் சலுகை என்று சொல்லி, இந்தத் தமிழக அரசு தோன்றிய நாளில் இருந்து மூன்றாவது நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது வியாபாரிகள்



1998 ஏப்ரல் 1] [திரு. எ. தெய்வநாயகம்]

எல்லாரும் மகிழ்கிறார்கள். ஒன்பது அத்தியாவசியப் பண்டங்களுக்கு வரி நீக்கம், எல்லா வகை எண்ணெய் வகைகளுக்கும் வரி நீக்கம் என்று சொல்லி, புரட்சிகரமான ஒரு அறிவிப்பைக் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். 536 கோடி ரூபாய் பற்றாக்குறை உள்ள பட்ஜெட்டாக இருந்தாலும் கூட, அதைத் துணிச்சலோடு சந்தித்து தேவையான திட்டங்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். இதை வியாபாரப் பெருங்குடி மக்கள் அறிந்து வரவேற்கிறார்கள். ஆகவே இது உள்ளபடியே மகிழ்ச்சிகரமான ஒரு முயற்சியாக வியாபாரிகள் மத்தியில் செய்தியாகப் புழங்கிக் கொண்டிருக்கிறது.

நான் இந்தச் சட்டமன்றத்தில் மூன்று முறை உறுப்பினராக இருந்த போதும், விற்பனை வரி பற்றிப் பேசி, போராடியிருக்கிறேன். ஒரு காரியமும் நடந்தது கிடையாது. இந்தத் தடவைதான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வியாபாரிகள் என்னிடம் இதைப் பேசுங்கள் அதைப் பேசுங்கள் என்று எதுவும் சொல்லமுடியாத அளவுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைய சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதை நான் எண்ணிப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அந்த வகையில் இந்தமாதிரி ஒரு நிதிநிலை அறிக்கையை நமக்களித்து, 'சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொன்ன குறிப்புகளை நிலை நிறுத்திக் காண்பித்திருக்கிறார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆனால் நாட்டில் இன்றைக்கு இருக்கிற சங்கதிகளை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சந்து பொந்துகளில் எல்லாம் பறைசாற்றிக் கொண்டு, சிலபேர் இந்தத் தமிழக அரசைக் கலைப்போம் என்று சொல்லிக் கொண்டு பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் இந்த பயமுறுத்தலைச் செய்வது கிடையாது. காழ்ப்புணர்ச்சியின் காரணமாகத்தான் சிலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எடுத்துக்கொண்டால், பாராளுமன்றத்தில் பாரதப் பிரதமராக இருக்கிற திரு. வாஜ்பாய் அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்து கொண்டு அந்த நிகழ்ச்சியில் பேசவேண்டிய எங்களுடைய மதுரை பாராளுமன்ற உறுப்பினர், அங்கே இல்லாமல் ஏதேதோ காரணம் காட்டிவிட்டு இங்கே மதுரையில் வந்து உட்கார்ந்துகொண்டு தமிழக அரசைக் கலைப்போம் என்று சொல்கிறார். ஒரு காரணமும் இல்லை.

மதுரையிலே தினமலர் பத்திரிகை அலுவலகம் இருக்கிறது. என்னுடைய நண்பர் ரமேஷ்தான் அதன் ஆசிரியர். நானும் சென்று அங்கே நடந்த சம்பவங்களைப் பார்த்தேன். அவர் வாயிலிருந்து

[திரு. எ. தெய்வநாயகம்] [1998 ஏப்ரல் 1

வந்தது என்னவென்றால், ஏதோ நடந்து விட்டது. 17,000 ரூபாய்தான் நஷ்டம். உள்ளே எந்தவித நாசமும் கிடையாது. காவலாளிக்குத்தான் சிறிது காயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவருக்கு அதாவது, திரு. ரமேஷுக்குக் காயம் ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லியோ அல்லது அவர் யாரையும் குறிப்பிட்டோ போலீசிலே புகார் எதையும் கொடுக்கவில்லை. நானும் சென்றிருந்தேன். மதுரை மாவட்டச் செயலாளர் அண்ணன் காவேரி மணியமும் சென்றிருந்தார்கள். சி.பி.ஐ.யைச் சேர்ந்த திரு. மோகன் அவர்கள் வந்திருந்தார்கள். அத்தனை பேரும் போய்ப் பார்த்தும் அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வருத்தமும் படவில்லை. நாங்களாகத் தான் விசாரிக்கச் சென்றோம்.

நண்பகல் 12-00

ஆனால் பாராளுமன்றத்திலே சொல்கின்றார்கள் அண்ணன் மு.க. அழகிரி அவர்களின் தூண்டுதலின் பேரில்தான் இது நடைபெற்றுள்ளது; அதனால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க வேண்டும் என்று. இது எவ்வளவு சிறுபிள்ளைத் தனமான பேச்சு என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அண்ணன் மு.க. அழகிரி அவர்கள் இன்றைக்கு மதுரை மாநகரிலே ஒரு வெண்புறாவாக, ஒரு சமாதானப் புறாவாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருக்குமாரன் என்ற ஒரு சங்கதியை வைத்துக்கொண்டு அவரைச் சாடி, அதைப் பாராளுமன்றத்திலே பேசி அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கின்றார்கள். ஆனால், அப்படிப் பேசியவர் வாஜ்பாய் அவர்களின் நம்பிக்கைத் தீர்மானத்திற்கு வாக்களிப்பதற்கு அவருக்கு உரிமையில்லாததுபோல ஓடோடி வந்துவிட்டார். கணக்குக் காட்ட வந்தேன் என்று காரணம் சொல்கின்றார். அதுவும் ராத்திரியிலே கணக்குக் காண்பிக்க வந்தேன் என்கின்றார். ஏன் காலையிலே டில்லியிலே வந்து கணக்குக் காண்பித்திருக்கலாமே? இதெல்லாம் அவர் சொல்கின்ற சாக்கு. 'நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதுதான் சாக்கு' என்று சொல்வார்கள். அதேபோல மக்களைத் திசை திருப்ப அவர் என்னென்னமோ அங்கே மதுரையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார். யாருக்கும் பொறுப்பில்லாததுபோல் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்துக்கொண்டு தம்பட்டம் அடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 1] [திரு. எ. தெய்வநாயகம்]

நிதிநிலை அறிக்கையிலே இவ்வளவு குறைகள் இருக்கின்றன. அதனால் கலைக்க வேண்டும் என்று யாரும் பேசக் காணோம். எந்த அரசியல் கட்சிக்காரர்களும் பேசக் காணோம். நிதிநிலை அறிக்கை அவ்வளவு சிறப்பாக இருக்கின்றது. அதைப் பாராட்டிப் பேசாத, பெருமைப் படாதவர்களே கிடையாது. அந்த ரமேஷ் எனக்கு நண்பர்தான். அவர் ஒரு வார்த்தைகூட அண்ணனைப் பற்றிச் சொல்லவில்லை. நானும் சென்று அவரைப் பார்த்து வந்தேன். அண்ணன் திரு. அழகிரி அவர்களும் போய்ப் பார்த்தார்கள். நான் அவர்களை அடிக்கடி சென்று பார்க்கக் கூடியவன். ஆனால் வேண்டுமென்றே இந்தமாதிரியான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் இதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த இடர்பாடுகளைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டுகின்றேன். வேறொன்றும் இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் அறிவுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அவர் அப்பேர்ப்பட்ட உயர்ந்த ஸ்தானத்திலிருந்து பல நிர்வாகங்களைக் கண்டு களித்தவர். அந்த வகையிலே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், மக்களுடைய நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற அளவுக்கு நமது டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

மேலும், மதுரையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே உச்சநீதிமன்றம் அமைப்பதற்காக நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மீண்டும் அதைச் செயல்படுத்துவதற்கு நிதியொதுக்கவில்லை என்ற குறையை வழக்கறிஞர்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, அறிவிப்பிலே இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க வேண்டுமென்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மொத்தமாக ரூ. 269 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரையைப் பொறுத்தமட்டிலும் 42 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், எனது தொகுதியிலே எந்தெந்தப் பகுதி இந்தத் திட்டத்திலே வருகிறது என்று நான் அதிகாரிகளிடத்தில் கேட்டால், அதிகாரிகள் மத்தியிலேயிருந்து சரியான பதில் வரவில்லை. ஆகவே, எனது தொகுதியான எம்.ஆர்.புரம், சுப்பிரமணியபுரம், ஆண்டாள்புரம், வசந்தா நகர், வைத்தியநாதபுரம், மெஹ்பூப் நகர் வழியாக அந்தப் பாதாளச்

[திரு. எ. தெய்வநாயகம்] [1998 ஏப்ரல் 1

சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைக்குப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்களுக்கு ஒரு கோரிக்கையை வைககின்றேன். எங்கள் பகுதியிலே பெரியார் பஸ் ஸ்டாண்டையொட்டி டி.பி. ரோடிலே ஒரு ரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டும். ஏற்கெனவே நான் இதை அறிவிப்பாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். பல மட்டங்களிலே சொல்லியும்கூட அந்தத் திட்டம் இன்னும் நிறைவேறி செயல்படுகின்ற வகையிலே வரவில்லை. அதைக் கவனத்தில்கொண்டு எல்லிஸ் நகர் பக்கத்திலிருந்து செல்வதற்கு வசதியாக டி.பி. ரோடிலே ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து, பட்டா வழங்குவதைப் பற்றிச் சொல்லும்போது, நிறையப் பேருக்கு பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நகர்ப்புறத்திலே பட்டா வழங்குவது கிடையாது என்று அதிகாரிகள் தடுத்து வருகின்றார்கள். அதை நாம் சரி செய்ய வேண்டும். எனது பகுதியில் நகர்ப்புறங்களான, சீறா நகர், திடீர் நகர், மெஹ்பூப் நகர் ஆகிய பகுதிகளில் ரொம்ப காலமாகப் பெரிய பெரிய வீடுகளை யெல்லாம் கட்டிவிட்டுள்ளார்கள். ஆனால் பட்டா கிடைக்கவில்லை. அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு உகந்த யுக்திகளை உருவாக்கி அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, பெரியாறு நீர்ப்பாசனத்திலே, அணையை உயர்த்தி 152 அடி தண்ணீர் தேக்குவதற்குண்டான தேவையான நடவடிக்கைகளை உடனடியாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று நினைக்கின்றேன். அவர்கள் பலமுறை கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-05*

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இடுக்கியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தேர்ந்து எடுக்கப்பட்டவுடன் பெரியாறு பாசனத்திலே 152 அடி தண்ணீரைத் தேக்குவதற்கு உண்டான உத்திகளை நான் கையாளுவேன் என்று அறிக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கவனத்திலே கொண்டு அந்த 152 அடி



1998 ஏப்ரல் 1] [திரு. எ. தெய்வநாயகம்]

தண்ணீரைத் தேக்குவதற்கு உண்டான காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நமது வியாபாரிகள், கீழமாசி வீதி வியாபாரிகள். அவர்களுக்குச் சொந்தமான 28 ஏக்கரை கூடல் மாநகரத்துப் பக்கத்திலே பாசிங்காபுரத்திலே வாங்கி ஒரு 'காம்ப்ளெக்ஸ்' கட்டுவதற்காக திட்டம் தீட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. பலமுறை நமது தமிழக முதல்வர் அவர்கள்கூட தலையிட்டு, அந்தப் புறம்போக்கு வாய்க்கால் ஓரத்திலே பட்டா செய்து கொடுப்பதற்கு உத்தரவும் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் 'லே-அவுட்' பாஸ் ஆகாமல் இருக்கிறது. அந்த 'லே-அவுட்'-ஐ பாஸ் செய்து கொடுக்கும்படி தமிழக முதல்வரை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த நல்வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, I welcome the Budget presented by our Hon. Chief Minister for the year, 1998-99. He has clearly stated in his Budget Speech,—"welcome the comments, rectify the defects and strive for perfection".

He has also rightly mentioned a Kural in a practical way. Any Chief Minister will normally say that the Budget presented by him is one of the best Budgets. But our Chief Minister has not said that this is a perfect Budget. He has said—"If there are any difficulties, you tell us and we will rectify it". That shows his greatness as a Statesman. (Applause). It is really commendable. Our Chief Minister is a man who was born in an agriculturist family and who knows the difficulties of agriculturists and rural people. Because of this, he has done a lot of improvements and developments for the rural poor people. The basic facilities needed by the public are—food, clothing, shelter, drinking water, roads, education, public health and storm water drainage. All these things are mainly important for the development of a State. He has given a lot of importance for all these things in the Budget. I want to suggest few more things to add more strength to it and also for good administration. I would like to welcome the good deeds and suggest some ideas for better administration in Tamil Nadu.

[Thiru B. Venkatasamy] [1998 ஏப்ரல் 1

The Budget has welcomed the Centre-State *relationship*. Though we wanted to have one-third of gross tax receipts, the United Front Government agreed to give 29% of the gross tax receipts to the States. That has to be implemented by the Central Government quickly.

He has also stated that the local bodies have to be given more powers. Then only local bodies can meet the requirements of people at the grass-roots level. This is also a welcome feature.

Hon. Chief Minister has also made a mention about Administrative Reforms and the Right to Information Act. It is also a welcome feature.

Regarding 'Member of Legislative Assembly Constituency Development Scheme,' I had requested to allocate 50 lakhs of rupees. However, Hon. Chief Minister was kind enough to increase at least five lakhs of rupees, i.e. from Rs. 25 lakhs to Rs. 30 lakhs.

The reduction of 2 paise per k.m. in bus fares for the travelling public, announced by the Hon. Chief Minister is really commendable and people are really very happy about this.

Regarding rural water supply, it has been announced that you are going to raise the quantum of water supplied to 4500 rural habitations, from 10 lpcd to 40 lpcd. That is also commendable. Distribution of urban water supply is also commendable.

*பிற்பகல் 12-10*

The Law and Order situtation in Tamil Nadu has to be improved. After the bomb blasts at Coimbatore, the Hon Chief Minister said that stern action has been taken to prevent such recurrence. It is really commendable. We must see that it is continued. Whoever they may be, those who are indulging in communal riots should be handled very carefully *with an iron hand*. They should be punished. At the same time, it takes a lot of time for enquiry, 3 months, 6 months, 1 year or even 2 years. By that time people may forget it. I want to suggest that if a man is involved in terrorist activity, we must see that atleast within 15 days or 1 month he is punished. Then only morality will



1998 ஏப்ரல் 1] [Thiru B. Venkatasamy]

be maintained. These persons will also have fear. Otherwise, after 3 or 4 years, everybody will forget the incidents. So, I request the Hon. Chief Minister to see that special attention is given to this. Otherwise, common man will have fear to go out. People will have the fear of bomb being planted in the train or bus. So it should be handled with iron hand. I am very happy that it is being handled very efficiently now.

Regarding prohibition, to be frank with you Sir, I saw in a newspaper that a man who was doing arrack business in Dindigul was killed. We must see that such activities are dealt with very severely. It was announced in the paper that one Panchayat President at Dindigul—it seems that he belonged to D.M.K. party— has been murdered by a rowdy. I came to know that there are already 8 to 10 cases against that rowdy. Police has not taken any action against him. I request the Hon. Chief Minister to see that such rowdy elements are caught. They are getting money easily. They are able to do anything to any man. Such things should be avoided. I request the Hon. Chief Minister to take stern action against such people. I can say that prohibition is a failure in our State. I must be frank. Everywhere arrack is available. It is available in every street. I do not understand as to how it is possible. Last year also I spoke about this. I know that the Hon. Chief Minister knows this by his own intelligence. I do not know how you are going to stop this. Police is collecting money and people are allowed to do this business. That is actually what is going on. You must see that something is done to prevent it without relaxing the rules and let the revenue come to the Government.

I was the first man who filed a writ against the Government an appeal by Shri Rajaji when prohibition was lifted. I was asked not to reside in Salem District because Salem was the birth place of Rajaji. Prohibition is the area where evils are developing. All anti-social elements are involved in that. They are getting money. They are prepared to do anything. This should be handled very efficiently.

Regarding corruption, Sir, definitely I can say that it is not in the higher level. In the lower level every officer is getting it. Last time also I spoke in the Assembly about this. I was very happy that the Government has raided some RTO offices and some people were caught. That happend during last year. You must see that atleast a Minister is posted for anti-corruption. If it is

done, definitely you are going to get a very good name. I do not know how you are going to do. Corruption in the lower level is rampant. You must see that it is eradicated. You must plan in such a way as to eradicate it at the lower level. 'கொடுத்தால்தான் செய்வோம். இல்லையென்றால் முடியாது' என்கிற மாதிரிச் சொல்கிறார்கள். They are not listening to our advice.

I request the Hon. Chief Minister to deal with this strictly. I request that a Special Branch should be set up to raid the residences of the officers and put an efficient officer to look into this. There are no two opinions about this.

I want to talk something about my Constituency. The Hon. Dr. Karunanidhi has started an Industrial Complex at Hosur. The second complex was also started when he was the Chief Minister. The third is going to come and for the last a location has to be selected.

*பிற்பகல் 12-15*

Regarding infrastructural facilities, if drinking water is not supplied properly in Hosur, people will definitely go back to Bangalore, because they are giving Cauvery water. They have come here, i.e., to Housr in the hope that there is good administration and electricity and other facilities are available. (Gong was sounded) Two minutes, Sir. I will finish in two minutes. Drinking water should be provided.

Regarding law and order situation in Hosur, I have already expressed my feelings. Good officers must be posted because it is an area bordering two other States, i.e. Andhra Pradesh and Karnataka. Lot of Criminals enter there. Last time also I have spoken about this. Some battalions must be posted there to look after the welfare of the workers and others.

Regarding closure of factories, ELCOT had to be closed because of misappropriation by one gentleman there. EL-FORGE has also been closed. One more factory, i.e. SAHAHIL has also been closed. I would like to bring to the notice of the Hon. Chief Minister that good factories have been closed only due to maladministration and request him to see that they are re-opened.

Regarding land assignment in Hosur, I have put a question to the Hon. Revenue Minister last time and he said that assignment of lands to poor people would be looked into. Poramboke lands should be assigned to the





poor people. Actually, lot of houses have been constructed on poramboke lands. Nearly 15,000 houses have been constructed like that in Hosur. This is the situation not only in Hosur but also in many places in Tamil Nadu. Why don't you give pattas to them? You can regularise them and give pattas. According to an announcement by the Government of India, they would like to ensure that every man has one house by 2000 A.D. So, you can give pattas to them. (Gong was sounded) I request you to see that houses are assigned to them.

Regarding Teachers Training School for Adi-Dravidas, I would like to point out that since there is no Adi-Dravida Telugu teacher available and 50 posts are vacant, I request that Adi-Dravida Telugu Training School should be started separately for them.

We need one E.S.I. hospital for Bagalur, because it is an industrial area. I request you to see that all these things are done. I thank you very much for giving me an opportunity to speak on the Budget. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை விவாதத்தில் என்னையும் பேச அனுமதித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தருமபுரி தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற ஏக்கத்தைத் தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அந்தக் கனவை நனவாக்கும் விதமாக, 'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற எண்ணத்தோடு, தலைவர் கலைஞர் அவர்களால் தீட்டப்பட்டு, ஒட்டிய வயிறுடனும், குழி விழுந்த கண்களோடும், எண்ணெய் காணாத பரட்டைத் தலையுடனும் தமிழகத்தின் கடைக் கோடியில் உள்ள தமிழர்களின் வாழ்வில் விளக்கு ஏற்றிடவும், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் நலன் ஒன்றையே கருத்தாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுதான் இந்த முத்தான நிதிநிலை அறிக்கை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. படித்தவன் முதல் பாமரன் வரை, பட்டி தொட்டி முதல் பட்டினக்கரை

[திரு. கு. மனோகரன்] [1998 ஏப்ரல் 1

வரை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருப்பதை நாடு நன்கு அறியும். பகட்டான திட்டங்களுக்கு இங்கே இடமில்லை. மனிதனின் அவசியத் தேவைகளான உணவு, உடை, இருக்க இருப்பிடம், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் என்ற அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதைப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

*பிற்பகல் 12-20*

ஆனால், கடந்த காலங்களிலே ஜிகினாத் திட்டங்களாக, கண் மைக்கு லிப்ஸ்டிக்குக்கு வரியில்லை. அதேபோல குங்குமம், நகச்சாயத்திற்கு வரி விலக்கு என்று பகட்டுத் திட்டங்களாக அறிவித்து, அந்தத் திட்டங்களிலே கலர் கனவுகளைக் காட்டிக் கொண்டிருந்த சிலர் இன்று இந்த பட்ஜெட்டைப் பார்த்துக் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சிலர் ஜால்ரா அடிக்கின்றார்கள். பாவம், அவர்கள். யானையைப் பார்த்த குருடர்கள். ஒன்றை மட்டும் மறந்துவிடுவதற்கில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீட்டிய இந்த பட்ஜெட், அவருடைய பொற்கால ஆட்சியாய் எதிர்கால வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

20 சதவிகிதம் இட ஒதுக்கீடு கோரிப் போராடி மடிந்தார்களே, அவர்கள் ஆட்சியிலே அந்த ஒதுக்கீடு கிடைத்ததா? அதற்குப் பின்னால் நம் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அல்லவா அந்த 20 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்தார்கள்? அதற்குப் பின்னாலே, இறந்தவர்களுக்கு அவர்கள் நஷ்ட ஈடு ஏதாவது வழங்கினார்களா என்றால் இல்லை. இன்றைக்கு, தாயுள்ளம் படைத்த இந்த முதல்வர் அல்லவா அவர்களுக்கு 1 லட்சம் ரூபாயை இழப்பீடாக, அந்தச் சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு கிடைக்கப் போராடிய அந்த உத்தமர்களுக்கு வழங்கினார். அந்தப் பெருமை இந்த முதல்வரைச் சாரும் என்பதை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கி, தென் மாநிலங்களிலேயே இன்றைக்கு அரசு ஊழியர்களுக்குச் சலுகைகளை வழங்கி, ஒரு மகோன்னத முதல்வராக நம் முதல்வர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.



24459.

1998 ஏப்ரல் 1] [திரு. கு. மனோகரன்]

அது மட்டுமா? இங்கே பாரதி கனவு கண்டார், "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைதன்னைக் கொளுத்துவோம்" என்று. அந்த மாதரைப் பாராட்டிப் போற்றும் வகையில் பல காலங்களிலே பல அடிப்படைத் திட்டங்களை அந்த மகளிருக்காக அவர் அறிவித்திருக்கிறார். குறிப்பாக, விதவை மறுமணத் திட்டம், மகப்பேறு உதவித் திட்டம், விதவை மகள் திருமணத் திட்டம், மகளிருக்குச் சொத்தில் சமவுரிமைத் திட்டம், அதேபோல மகளிருக்கு இட ஒதுக்கீட்டுத் திட்டம், கலப்புத் திருமண உதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்று பல திட்டங்களைத் தீட்டிப் பெண்கள் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு பெண்களுடைய பாராட்டும், பெருமையும் சேர்க்கப்படும் விதத்தில் சமையல் எண்ணெய்க்கு முழுமையாக வரி விலக்கை அளித்து, தாய்மார்கள் எல்லாம் பாராட்டும் நிலையை இந்த பட்ஜெட் மூலமாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேபோல, கண்ணொளி வழங்கும் திட்டம். தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ஒரு மனிதனுக்கு முக்கியமான கண் பார்வை கிடைக்கும் விதமாக, அந்தக் கண்ணொளியை வழங்கும் 'விழிகளுக்கிடையே பொருத்தும் ஆழிக்கு' வரிவிலக்கு அளித்து, பல திட்டங்களை அந்த பட்ஜெட்டிலே அறிவித்திருக்கின்றார்கள். குறிப்பாக, சிமெண்ட்டினால் ஆன உள்ளீடற்ற கற்களுக்கு வரிக் குறைப்பு, கணினிப் பொருட்களுக்கு வரி இல்லை என்ற அறிவிப்பு, தேங்காய்க் கொப்பரை, மசாலாப் பொடிகள் ஆகியவற்றிற்கு வரிக் குறைப்பு என்ற முத்தான திட்டங்களை இந்த பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் முதன்முதலில் தகவல் பெறும் உரிமை சட்டத்தையும், இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்தும், நமக்கு நாமே திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியும் இருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடந்த ஆண்டு தொகுதி மேம்பாட்டிற்காகக் கொடுத்த ரூ.25 இலட்சம் என்பதை, இந்த ஆண்டு 30 லட்சம் ரூபாயாக உயர்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில்—உள்ளாட்சித் தலைவர்களுக்குப் பின்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் பல அதிகாரிகளிடம் கையேந்த வேண்டிய அவல நிலையில் இருக்கின்றோம்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து அந்த நிதியை 50 லட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த நிதியாண்டில் வழங்க

[திரு. கு. மனோகரன்] [1998 ஏப்ரல் 1

வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில் மாணவர்கள் இன்றைக்குத் திடமாகவும், நல்ல உடல் நலத்துடனும் படிப்பதற்கு, 15 நாட்களுக்கு ஒரு முட்டை என்று இருந்ததை, வாரத்திற்கு ஒரு முட்டை எனக் கொடுத்திருக்கிறார்கள். நான் கிராமப் பகுதியைச் சேர்ந்தவன். நிச்சயமாகவே நானெல்லாம்கூட வாரம் ஒரு முட்டை என் வீட்டிலே சாப்பிட்டது கிடையாது. தலைவர் கலைஞர் அவர்கள், இன்றைக்கு முட்டையையே பார்க்காத எத்தனையோ குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளுக்கு வாரம் ஒரு முறை முட்டை கொடுத்ததனாலே, அந்தப் பிள்ளைகள் இதற்காகவே நிச்சயம் பள்ளிக்கு வருவார்கள். அந்த வகையிலே, அவர்களுக்கான கல்வித் திட்டம் வளரவும், அவர்கள் உடல்நலம் பேணப்படவும் இது ஒரு சிறப்பான திட்டம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, நலிந்த பிரிவினருக்கான ஓய்வூதியத் திட்டம், கிராமப் பகுதியிலே இருக்கும் 60 வயதைக் கடந்த முதியவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாகத் தங்கள் வாழ்நாளிலே, இந்த 100 ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி 150 ரூபாய் என்று கொடுத்திருப்பதை மறக்க மாட்டார்கள் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவர்களுக்கு அவர்களுடைய விடுதி உணவுக் கட்டணம் 300 ரூபாய் என்று இருந்ததை 400 ரூபாயாக உயர்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்த மாணவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிற்பகல் 12-25

இதுபோலப் பல திட்டங்கள் எல்லாம் இருக்கும் இந்த நல்ல பட்ஜெட்டிலே என்னுடைய தர்மபுரி தொகுதிக்காக நான் குறிப்பாக வேண்டுவது எல்லாம், தர்மபுரி மாவட்டத்து மக்களின் நீண்ட நாளைய பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஜப்பான் நாட்டு உதவியுடன் நிபுணர்கள் எல்லாம் தர்மபுரிக்கு வந்து, இன்று மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகச் சென்றுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலே நிறைவேற்ற, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று விரைந்து செயல்படுத்த ஆவன செய்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. கு. மனோகரன்]

தர்மபுரியை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு 'அதியமான் கோட்டம்' அமைக்க கடந்த இரண்டு நிதியாண்டுகளாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த நிதியாண்டிலாவது, தமிழ் வளர்த்த அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த அந்த மன்னனுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதியமான் கோட்டம் வழங்கிட வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரிக் கல்லூரியிலே பி.பி.ஏ., எம்.காம் என்று இரண்டு வகுப்புகள் கடந்த ஆண்டு வழங்கப்பட்டு, அவை மாலை நேர வகுப்புகளாகச் செயல்பட்டு வந்தன. இந்த ஆண்டு மாணவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளதாம். தர்மபுரியில் சிறப்பாக அந்த இரண்டு வகுப்புகளும் செயல்பட்டு வருகின்றன. வருங்காலத்திலே தயவுசெய்து அந்தக் கல்லூரிக்கு அந்த 2 வகுப்புகளையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி தொகுதிக்காக பல தடவை நான் கேட்டிருக்கிறேன். அது மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் வாழும் தொகுதி. எந்தத் தொழிலும் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து அங்கு பெரிய தொழிற்சாலை ஒன்றை நிச்சயமாக வழங்கினால்தான் அந்தத் தொகுதி மக்களிடம் நல்ல வரவேற்பை நாங்கள் எல்லாம் பெற முடியும். அதில் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியிலே செம்மாண்டக்குப்பம் ஆற்றின் குறுக்கே ஒரு சிற்றணை ஒன்று கட்ட முன்மொழிவுகள் எல்லாம் வந்துள்ளன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கட்டித்தர ஆவன செய்யவேண்டுகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில், எங்கும் இல்லாத ஒருவிதமான மரவள்ளிக் கிழங்கிற்கு செஸ் வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே தர்மபுரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த செஸ் வரி விதிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள மரவள்ளிக்கிழங்கு வியாபாரிகள், பொதுமக்கள் எல்லாம் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரைக்கூட அணுகி அதை நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், 3,4 இலட்சம்தான் ஒரு வருடத்திற்கு வருமானம் வரக்கூடிய அந்த செஸ் வரியை, மரவள்ளிக்கிழங்கிற்குப் போட்ட அந்த வரியை நீக்கிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதியமான்கோட்டை, மதிகோன்பாளையம் ஆகிய இரண்டு காவல் நிலையங்கள் என்னுடைய தொகுதியில் உள்ளன. சொந்தக் கட்டடம் இல்லாமல் அவல நிலையில் உள்ளன. ஒரு காவல்நிலையத்திற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

நல்லம்பள்ளியிலே ஒரு பத்திரப் பதிவு அலுவலகமும், தெப்பூரிலே ஒரு தீயணைப்பு நிலையமும், கிருஷ்ணாபுரத்திலே ஒரு காவல் நிலையமும், அதேபோல ஜருகு, நூலஅள்ளி ஆகிய பகுதிகளுக்கு ஆரம்பச் சுகாதார நிலையமும் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி, மாவட்டத்தின் தலைநகரமாக இருந்தும் கிருஷ்ணகிரிக்குத் தான் நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. கிருஷ்ணகிரியிலே 3 நீதிமன்றங்கள்—அமர்வு நீதிமன்றம், நடுவர் நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் என்று மூன்று நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. எங்களுடைய தர்மபுரி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கிருஷ்ணகிரியில் இயங்கி வரும் இரண்டாவது அமர்வு நீதிமன்றத்தைத் தர்மபுரியில் அமைக்க முன்மொழிவுகள் எல்லாம் வந்து ஆணைக்காக அரசினுடைய பார்வையிலே இருக்கிறது. தயவுசெய்து இந்த ஆண்டு அந்த இரண்டாவது அமர்வு நீதிமன்றத்தையாவது தர்மபுரிக்கு வழங்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுகின்றேன்.

அதேபோல தர்மபுரி மாவட்டத்தின் தலைநகராக இருந்தும் கிருஷ்ணகிரிக்குத்தான் நாங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்காக இன்னின்னது வேண்டும் என்று கேட்டுப் பெறுகிறார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான சங்கடமும் கிடையாது. நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் ஒரு முறைக்கு இரண்டு முறை குறிப்பிட்டிருக்கிறேன். தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டபோதே, தர்மபுரி மாவட்டத்தினுடைய தலைநகராக தருமபுரி இயங்கும் என்றும், ஜுடிஷியல் - நீதித் துறையைப்



பொறுத்தவரை அந்தப் பகுதி கிருஷ்ணகிரியிலே இருக்கும் என்றும், இதற்கு முன்னாலே முதலமைச்சராக இருந்தவர்கள், ஆண்டவர்கள், இப்போது ஆண்டுகொண்டு இருப்பவர்கள்கூட ஒப்புதல் கொடுத்து பெருந்தன்மையோடு அதனை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-30*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் நீதிமன்றம் வேண்டும் என்று கேட்டார்கள். அடுத்து வேலைவாய்ப்பு அலுவலகம் கிருஷ்ணகிரியில் இருக்கிறது, அதைக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இது நியாயம் அல்ல என்பதைத் தங்களுடைய கனிவான பார்வைக்கும், இந்த மாமன்றத்தினுடைய கனிவான பார்வைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கும் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தன்மை என்பது தருமபுரிக்கு மாத்திரம் இருக்கட்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களுக்கு உரித்தான உரிமையில் பேசினார். என்னைப் பொறுத்தவரையில் தருமபுரியில் இதையெல்லாம் அங்கிருக்கும் மாணவர்களும், தொழிலாளர்களும், பொதுமக்களும் ஒவ்வொரு நாளும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமது ஆட்சி வந்தால் இதெல்லாம் நிச்சயமாக நடக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். குறிப்பாக கிருஷ்ணகிரியில்தான் வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. தர்மபுரி தொகுதி, அரூர் தொகுதி, மொரப்பூர் தொகுதி, பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு தொகுதி என்று 5 தொகுதிகள் இருக்கின்றன. அந்த 5 தொகுதி மக்களும் 30 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள கிருஷ்ணகிரியில் இருக்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். நான் வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்ற வேண்டுமென்று கேட்கவில்லை. ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தைத் தருமபுரியில் நிறுவுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. அ. வெங்கடாசலம்.*

**திரு. கு. மனோகரன்:** *நன்றி சொல்லிவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி, சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.*

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப் பல நல்ல திட்டங்களை இந்த பட்ஜெட்டில் அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்,

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே ஒரே சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்கு இந்த மாமன்றத்தில் இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அம்சங்களை இந்த நாட்டு மக்களின் நன்மைக்காக அவர்கள் தந்திருந்தாலும் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாத யோசனைகளை எங்களைப் போன்றவர்கள் சொல்லுவது இல்லை. இருந்தாலும் இன்றைக்குத் தமிழக மக்களிடத்தில் இந்த ஆட்சியாளர்கள் மீது மிகுந்த கோபம் ஏன் வந்தது என்பதை வெளிப்படையாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம அதிகாரிகளும், வட்டாட்சியர்களும் இந்த ஆட்சியின்மீது ஏதோ ஒரு கோபத்தில், உண்மைக்குப் புறம்பான கணக்கு எடுத்து கிடைக்கவேண்டிய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த வேட்டி, சேலைகளை இன்றைக்கு இந்த ஆட்சியில் கிடைக்காமல் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ நிதியைத் திட்டங்களுக்கு ஒதுக்குகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் என்ன நினைக்கிறார்கள்





என்று சொன்னால், மாடி வீடு கட்டியிருப்பவர்கள் கூட இலவச வேட்டி, சேலை தந்தால் பரவாயில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேறுபாடு பார்க்காமல் அனைத்துப் பிரிவினருக்கும் இலவச வேட்டி, சேலை வழங்க 100 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவு வந்தாலும் அனைத்துப் பிரிவினருக்கும் அருள்கூர்ந்து, தயவுசெய்து, இலவச வேட்டி, சேலைகளை நீங்கள் தரவேண்டுமென்று ஒட்டுமொத்தத் தமிழக மக்களுடைய மன நிலையைத் தெளிவாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நகராட்சியில் கடன் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களில் நலிந்தோர்க்கு கடன் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பேரூராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கு நலிந்தோர் கடன் வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. மாவட்ட அளவில் உள்ள நகராட்சிகளில் ரோஜ்கார் திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் பேரூராட்சிகளில் கடன் வழங்குவதற்குரிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆகவே, பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு நலிந்தோர் கடன் கிடைக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும்.

அதோடு புதுக்கோட்டையில் தொடர்ந்து 117 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள பழமையான மாமன்னர் கல்லூரியில் அனைத்துப் பேராசிரியர்களும் இருக்கிறார்கள். அந்தக் கல்லூரியில் எம்.எஸ்சி., அறிவியல்—ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரி பாடப் பிரிவுகள் கேட்டு இருபது ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக் கொண்டேயிருக்கிறோம். போதிய பேராசிரியர்கள் இருக்கக்கூடிய இந்த நிலையில், அந்த மாமன்னர் கல்லூரியில் எம்.எஸ்ஸி., பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி பாடப் பிரிவுகளை வழங்குவதற்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-35*

இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்: இன்றைக்கு ஒன்றியங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கிறோம். ஆனால் இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய மிகப் பிற்படுத்தப்பட்ட—மோஸ்ட் பேக்வேர்ட் என்று சொல்லுகிற மக்களுக்கு இலவச வீடு என்று, 10 தான் ஒரு ஒன்றியத்திற்குக் கிடைக்கிறது. குறைந்தது 20 வீடுகளாவது—வீடே கட்டிக்கொள்ள முடியாமல்

[திரு. அ. வெங்கடாசலம்] [1998 ஏப்ரல் 1

இருக்கிறவர்கள், கூட்டுறவு வீட்டுவசதி வாரியத்தில் கடனே பெற முடியாமல் இருக்கிற, மிகுந்த வறுமையில் வாடுகிற அந்த மக்களுக்குக் குறைந்தது ஒரு ஒன்றியத்திற்கு 20 வீடுகளாவது—ஒரு ஆண்டுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு நீங்கள் அந்த வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் மின்சாரம் இன்றைக்கு தூத்துக்குடியிலிருந்து காரைக்குடி வழியாக எங்களுக்கு வருகிறது. புதுக்கோட்டை, மின்சார விநியோகத்தில் மிக, மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய அளவுக்கு, செய்யப்பட்ட விவசாயம் அனைத்துக்கும் இன்றைக்கு மின்சாரம் இல்லாமல் மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடம் சென்று கேட்டால் 500-க்கும் மேற்பட்ட, 200 கே.வி. டிரான்ஸ்ஃபார்மர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறோம் என்கிறார்கள். அதையும் நீங்கள் அருள்கூர்ந்து அளித்திட வேண்டும்.

இன்னொன்றையும் நம்முடைய முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 10,000 பேர் என்று—5,000-ஐ 10,000 ஆக்கி, 10,000 பேர் என்று இருந்ததை 20,000 ஆக்கி, 20,000-ஐ 30,000 ஆக்கி, இன்றைக்கு 60,000 பெண்களுக்குத் திருமண உதவித் தொகை என்று சொல்வதை—நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழையின்பால் இரக்கம் கொண்டவர்கள்—1 இலட்சம் பேருக்காவது அடுத்த நிதிநிலை அறிக்கையில் திருமண உதவித் தொகையை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஆலை இங்கு போகுமா, அங்கு போகுமா என்ற நிலையிருந்து, நம்முடைய முதலமைச்சர் கருணையோடு, பாரி கம்பெனி துவங்குகிற ஆலையை ஆலங்குடி தொகுதி துரும்பூர்மேட்டிற்கு வழங்கியமைக்கு அந்தத் தொகுதி மக்கள் சார்பாக, அந்த மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியை நான் உரித்தாக்கிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைவிட என்னுடைய தொகுதியில் மிக முக்கியமாக நீண்ட நாளாக இருக்கக் கூடிய கோரிக்கை. நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு நான் பணிவோடு தெரிவிப்பது அரசியல் கட்சியெல்லாம் இல்லாமல், தன்னந்தனியாக சுயேச்சையாக வெற்றி பெற்ற தொகுதியில் காரியம் நடக்குமா என்று இருந்த நிலை இன்றைக்கு மாறி, அந்தத் தொகுதியிலும்



1998 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

காரியம் நடக்கிறது என்ற நிலைக்கு எடுத்துக்காட்டாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தில் திருமணஞ்சேரி அணை கட்டக்கூடிய அந்த ஆணையைத் தந்த இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

கொளத்தூருக்குத் தனித் தாலுக்கா தகுதி தந்தீர்கள், பாராட்டுகிறேன். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திருநாவுக்கரசு அவர்களுக்கு மணமேல்குடியைப் பிரித்து 3 ஒன்றியங்கள், 3 தாலுக்காக்கள் கொடுத்து விட்டீர்கள். ஆனால் கரம்பக்குடியையும், பொன்னமராவதியையும்—உளியமங்கலம் என்பது நம்முடைய மணப்பாறை அருகே இருக்கிறது, உளியமங்கலத்திலேயிருந்து திருமயம் போக வேண்டுமென்று சொன்னால், 80 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆக, பொன்னமராவதியையும், அதேபோல கரம்பக்குடி—தஞ்சாவூருக்குப் பக்கத்திலே நாஞ்சிக்கோட்டையிலே இருக்கிறது; தொகுதியினுடைய பார்டர்; ஆலங்குடிக்கு வர வேண்டுமென்று சொன்னால், அதேபோல 70 கிலோ மீட்டர் வர வேண்டும். ஆக, இவ்வளவு பெரிய தொகுதியில் அருள்கூர்ந்து நீங்கள் இந்த ஆலங்குடியையும், பொன்னமராவதியையும் தனி வட்டங்களாகப் பிரித்துத் தர வேண்டும். இதை அந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் உங்களைப் பணிவோடு கேட்பது, 9 வட்டங்களைத் தந்து இருக்கின்றீர்கள்; புதுக்கோட்டை மாவட்டத்திலே 2 வட்டங்களைத் தந்திருக்கின்றீர்கள்; பாராட்டுகிறேன். அதோடு சேர்த்து, பொன்னமராவதியையும், ஆலங்குடியையும் தனி வட்டமாக ஆக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கீரமங்கலத்திலும், கரம்பக்குடியிலும் தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த அளவுகள் அனைத்தும் இன்றைக்குச் சரியாக இருக்கின்றன.

சென்ற ஆண்டு கால்நடை மருந்தகம் அறிவிக்கப்படுகிறபொழுது அறிக்கையிலே நிரம்பத் தந்தீர்கள். என்னுடைய தொகுதியில் எதையும் காணவில்லை. இந்த ஆண்டாவது, வெண்ணாவல்குடி ஊராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர உதவி செய்ய வேண்டுகிறேன்.

கீரமங்கலத்திலே இன்றைக்கு 5,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யக்கூடிய பால் பண்ணை இருக்கிறது. அத்துடன் கால்நடை மருத்துவமனையும் நீங்கள் அமைத்துத் தர வேண்டும்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1998 ஏப்ரல் 1

கரம்பக்குடியிலும், வடவாற்றிலும் இருக்கக்கூடிய பி.எச்.சி., மருத்துவமனையை 24 மணி நேர மருத்துவமனையாக நீங்கள் மாற்றித் தர வேண்டும்.

என்னுடைய தொகுதியில் சென்ற ஆண்டு கீரமங்கலத்தில் 33 கிலோவாட் துணை மின் நிலையம் வைக்கப்பட்டது. இன்னும் டிரான்ஸ்ஃபார்மர் வரவில்லை. அதுபோல், கரம்பக்குடியில் 110 கிலோவாட் மின்சாரத் துணை மின் நிலையம் இன்னும் வரவில்லை. அதுபோல் மரமடைக்கு 33 கிலோவாட் துணை மின் நிலையமும், அதுபோல வடவாற்றுக்கு 110 கிலோவாட் துணை மின் நிலையமும் இந்த ஆண்டு கேட்டு அரசுக்கு வந்திருக்கிறது. அதற்கும் நீங்கள் அருள்கூர்ந்து அனுமதி வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்னொன்றையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்திற்காக 10 கோடி ரூபாய் வழங்கி, தூர் வாரக்கூடிய வாரிகள், குளங்கள் பூராவும் வெட்டினீர்கள். என்னுடைய ஆலங்குடியில் கரம்பக்குடி பகுதி, செங்கமேடு பத்துதாக்கு, உடப்பங்குடி போன்ற பகுதியில் உலவயல் சேனல் புதாறு என்று வருகிறது. ஆகவே, 10 கோடி ரூபாயில் ஒரு 5 இலட்சமாவது அந்தப் பகுதிக்குத் தாருங்கள் என்று எவ்வளவோ போராடிக் கேட்டும்கூட அவர்கள் தரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட அந்தக் கோரிக்கையை வைத்தோம். ஆனால், அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இன்றைக்கு செங்கமேடு பத்துதாக்கு பகுதியில் முழுக்க, முழுக்க ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகாலமாக தண்ணீர் வராமல் வாய்க்கால்கள் தூர்ந்திருக்கின்றன. இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்தப் பகுதியில், செங்கமேடு பத்துதாக்கு, புதாற்றுப் பகுதிகளுக்கு நீங்கள் அருள்கூர்ந்து இந்த ஆண்டாவது அந்த வாய்க்கால்களைச் சரி செய்யக்கூடிய அளவுக்கு உருவாக்கித் தர வேண்டும். இன்னொன்றையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புளிஞ்சங்காடு கைகாட்டியில் இருக்கின்ற பிரிவினருக்கு இடையில் ஜாதிச் சண்டை மோதலில் மூன்று பேர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி மிகப் பெரிய கலவரத்தைச் சந்தித்த



1998 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

அந்தப் பகுதிக்குக் காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டிருந்தோம். வடகாட்டில் இருந்த காவல் நிலையம் தற்காலிகமாக அங்கு இயங்கி வந்தது. இப்போது வடகாட்டிற்கே மாற்றப்பட்டுவிட்டது. அங்கே புளிஞ்சங்காட்டுப் பகுதிக்கு இந்த ஆண்டிலேயே, இந்த நிதிநிலை அறிக்கையிலே காவல் நிலையம் அருள்கூர்ந்து தர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

நம்முடைய பேரவைத் துணைத் தலைவரிடம் பணிவோடு கேட்டுக்கொள்வது, சில பிரச்சினைகளை இங்கே நான் பேசியாக வேண்டிய நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினால், கொஞ்சம் நேரம் அதிகமாக ஒதுக்கித் தர வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் சிப்காட் வளாகத்திற்குப் பக்கத்திலே திருவேங்கைவாசல் என்ற அருமையான கோவில் இருக்கிறது. அந்தக் கோவில்—இலங்கையை வென்றுவிட்டு, கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் இராஜ ராஜ சோழனால் புதுப்பிக்கப்பட்டு, பின்னால் வந்த பாண்டியர்கள், பல்லவர்கள், விஜயநகரப் பேரரசர்கள், கிருஷ்ணதேவராயர், நாயக்கர், தொண்டமான் இப்படிப்பட்ட அரசர்களாலும், கம்பராலும் அந்தக் கோவிலில் வழிபாடு நடத்தப்பட்டு, இன்றைக்கு சிதிலமடைந்து மோசமான நிலையில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செங்குட்டுவன் அவர்கள் அந்தக் கோவிலைப் பார்த்து, 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அது போதாது. ஒரு கோடி ரூபாயாவது அந்தக் கோவிலுக்கு வழங்க வேண்டும். அந்தக் கோவில் சிறப்பு வாய்ந்தது. 20 ஆயிரம் ஏக்கர் அந்தக் கோவிலுக்கு இருக்கிறது. அதையெல்லாம் தனியார்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு திருவேங்கைவாசலில் இருக்கக்கூடிய ஞான தட்சிணாமூர்த்தி சிற்பம் உலகத்திலேயே அற்புதமான, சிறந்த சிலையாகக் காட்சியளிக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் இரண்டு நிமிடம் கொடுங்கள். நம்முடைய முதலமைச்சரிடம் பணிவோடு சொல்வது, பிற்படுத்தப்பட்டவர்களுக்காக தனித் துறையை உருவாக்கியது நீங்களே. மிகப் பிற்படுத்தப்பட்டவருக்கு 20 விழுக்காடு ஒதுக்கியதும் நீங்களே. மிகப் பிற்படுத்தப்பட்டவருக்கு 20 விழுக்காடு ஒதுக்கியும், இன்றைக்கு ஆய்வு செய்து பார்க்கின்றபோது, இந்த முத்தரையர் சமுதாய மக்களுக்கு அந்த 20 விழுக்காடு ஒதுக்கீட்டில் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை உங்களுக்குப் பணிவோடு

[திரு. அ. வெங்கடாசலம்] [1998 ஏப்ரல் 1

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற முறை, தேர்வாணைக் குழுவிலே ஒரு மெம்பர் வேண்டுமென்று கேட்டோம். அருள்கூர்ந்து தந்தீர்கள். மனமாரப் பாராட்டுகிறோம். அதுபோல, 20 பிரிவுக்கும் மேலாக இருக்கக்கூடிய அந்த முத்தரையர் சமுதாய மக்களை ஒரே பிரிவாக முத்தரையர் என்று வகைப்படுத்தி, அரசாணை தாருங்கள் தாருங்கள், என்று பல அரசுகளிடத்திலே சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. பெ. சாமிநாதன்.

**திரு. அ. வெங்கடாசலம்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** 20 பிரிவினருக்கு மேல் இருக்கக்கூடிய அந்த முத்தரையர்களுக்கு என்று ஒன்று சேர்த்து ஒரு அரசாணையைத் தர வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனிக் கவனத்திற்கு. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியத்திலே முத்தரையர் என்ற இந்தச் சமுதாயம் பிழைக்க வழியில்லாமல் சில முதலாளிகளால் ஆந்திர மாநிலத்திற்கு நல்ல பாம்பு பிடிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அங்கே நல்ல பாம்பு பிடிப்பது சட்டவிரோதமான காரியம் என்று, 100-க்கும் மேற்பட்ட முத்தரையர்களை ஆந்திரச் சிறையிலே வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு, இன்றைக்கு அந்தச் சிறையிலே வாடுகின்ற முத்தரையர் சமுதாய மக்களை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 27-3-1998 அன்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்ட 1998-99 ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கைமீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தமிழக முதல்வர்



1998 ஏப்ரல் 1] [திரு. மு.பெ. சாமிநாதன்]

கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல. தமிழகத்திலே வாழக்கூடிய ஒவ்வொருவருடைய நிதிநிலை அறிக்கையும் இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி புது திருமணத் தம்பதிகள் பாணியில் சொன்னால், இது ஒரு தலை தீபாவளி. லாட்டரி வியாபாரிகள் பாணியில் சொன்னால் இது ஒரு பம்பர் குலுக்கல். கிரிக்கெட் ரசிகர்கள் பாணியில் சொன்னால், இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிச் சொன்னால், தமிழக அணிக்கு ரன்களைக் குவித்து Not-out Batsman ஆகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு ஏழை எளியவர்களுடைய நிலையினைக் கருதி இந்த மாமன்றத்திலே இந்தச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாராட்டையும் நெஞ்சார்ந்த நன்றியையும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக உரித்தாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு 180 பத்திகளைத் தாக்கல் செய்து, இந்த மாமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொன்றாகப் படிக்கின்றபோது அந்த ஒவ்வொரு பத்தியும் இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு ஒரு படிக்கட்டாக அமைந்திருப்பதை நாடு நன்கு அறிந்திருக்கின்றது.

அதேபோல் நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு கலைஞர் அவர்கள் தன்னுடைய அறுபது ஆண்டுகாலப் பொது வாழ்வினுடைய அனுபவத்தின் மூலமாகத்தான் இன்றைக்குத் தெளிவாகவும், உறுதியாகவும், மிகுந்த நம்பிக்கையோடும் இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். அதற்காகவும் மீண்டும் ஒருமுறை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழை நீர் வடிகால்களுக்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்திருப்பதைப் பாராட்டுகின்றேன். வரவேற்கின்றேன்.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [1998 ஏப்ரல் 1

அதோடு தெரு விளக்கையும் இந்தப் பட்டியலிலே இணைத்துக் கொள்ள வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்குக் கால்நடைகளை வைத்துப் பால் உற்பத்தி செய்கின்ற பால் உற்பத்தியாளர்களுக்கு அரசு தரக்கூடிய கொள்முதல் விலை கட்டுப்படியாகவில்லை. அந்த விலையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று இங்கே அருள்கூர்ந்து கேட்டுக்கொண்டு, கால்நடைத் தீவனங்களுக்கு முழுமையான வரி விலக்கையும் அளிக்க வேண்டும் என்று இருகரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விவசாயிகளுக்கு 35 குதிரைத்திறன் கொண்ட டிராக்டரை வாங்கினால் மட்டும் அரசின் மூலம் மானியம் வழங்கப்படுகின்றது. அதைத் தளர்த்தி எத்தனை குதிரைத்திறன் கொண்ட டிராக்டர் வாங்கினாலும் அதற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று தொழில் துவங்குவதற்கு மின் இணைப்பு வழங்குகின்ற துரிதமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதேபோல விவசாயப் பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்க அருள்கூர்ந்து இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துறையிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே அனைத்துத் துறைகளுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை அமைத்தால், அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய இந்தச் சிறிய கருத்தினை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே காங்கேயம்—முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலை நடைபெற்று, முதல்நிலை வேலைகள் முடிவடையும் சூழ்நிலை இருக்கின்றது. அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த அரசுக்குத் தெரிவிப்பதோடு, நிதிநிலை அறிக்கையில், இரண்டாம் நிலைக்குரிய திட்டங்களான வெள்ளக்கோவில், மூலனூர், கன்னிவாடி போன்ற மூன்று பேரூராட்சிகளுக்கும் சுமார் 25 கோடி ரூபாய்க்கு அனுமதி



1998 ஏப்ரல் 1] [திரு. மு.பெ. சாமிநாதன்]

வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காகவும் நன்றி கூறி, அந்தத் திட்டத்தில் இன்னும் வேலை நடைபெறாத சூழ்நிலை இருப்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த வேலையை விரைவில் துவக்கி வைப்பதற்கு அருள்கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இன்றைக்குக் கீழ்பவானி அணைத் திட்டத்தின் மூலம் என்னுடைய தொகுதியில் சுமார் 20,000 ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகிறது. அணையிலேயிருந்து என்னுடைய தொகுதி சுமார் 125 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும்போது அது உரியகாலத்தில் பாசனத்திற்கு வந்து சேருவதில்லை. காரணம், வாய்க்கால் அங்கே பழுதுபட்டிருக்கிற சூழ்நிலை உள்ளதாலும், உடைப்பு போன்ற பிரச்சினைகளாலும் உரிய காலத்திலே கீழ்பவானித் தண்ணீர் விவசாயத்திற்கு வந்து சேருவதில்லை. அதனாலே நிதிநிலை அறிக்கையிலே, கீழ்பவானி அணைத் திட்டத்திலே இருக்கின்ற வாய்க்கால்களை சிமெண்ட் பலகையால் சீரமைக்கின்ற பணியை எடுத்துக்கொள்ளும் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் என்னுடைய தொகுதி கடைக்கோடிப் பகுதியாக இருக்கின்றது. இதன் மூலம் மட்டும் ஏறத்தாழ 30,000 ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகின்றது. அந்த வாய்க்கால்களையும் சீரமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆற்றிலிருந்து தடுப்பணை மூலம் சுமார் 5,000 ஏக்கர் நிலம் இந்தத் தொகுதியிலே பாசனம் பெற்று வருகிறது. அந்த வாய்க்கால்களையும் சிமெண்ட் பலகையால் சீர் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உப்பாறு மூலம் சுமார் 6,000 ஏக்கர் நிலம் என்னுடைய தொகுதியில் பாசனம் பெற்று வருகிறது. அந்த அணையும் இந்த ஆட்சியிலேதான் சீர்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோல் அந்த அணைத் திட்டத்திலே இருக்கின்ற வாய்க்கால்களையும் சிமெண்ட் பலகையால் சீர் செய்து விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லதங்காள் ஓடை திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து எங்களுடைய ஈரோடு மாவட்டத்திற்கு வெள்ளக்கோவில் தொகுதி வழியாகத்தான் வந்து அமராவதி ஆற்றிலே கலக்கின்றது. அதிலே மூலனூர் ஒன்றியத்தில் எலுகாம்வலசு என்ற பகுதியில் அணை கட்டுகின்ற திட்டம் செயல்வடிவில் இருக்கின்றது. அந்தத் திட்டத்திற்கு இந்த நிதியாண்டிலேயே ஒப்புதல் வழங்கி நீண்டகாலக் கோரிக்கையான நல்லதங்காள் ஓடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

கடந்த 1972 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதுதான் என்னுடைய தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அப்பன் மு. பழனிசாமி அவர்களின் முயற்சியால், 1976 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் வட்டமலை ஓடை அணைத் திட்டத்தைத் தந்தார்கள். ஆனால், 20 ஆண்டுகாலம் ஆகியும் இதுவரை 3 முறைதான் அந்த அணை பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. வறண்ட பகுதியான அந்த வட்டமலை அணைத் திட்டத்திற்கு அமராவதி ஆற்றிலிருந்து ஒரு தடுப்பு அணை மூலம் மறுவாழ்வு தந்து, அந்த அணையை நம்பியிருக்கின்ற 6 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தரவேண்டுமென்று உங்களை இருகரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா இதுவரை கிடைத்தபாடில்லை. இந்த நிலைமையைப் போக்க துரிதமாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று இருகரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, உடுமலை—தாராபுரம் சாலை என்னுடைய தொகுதி வழியாக அமைந்திருக்கிறது. அந்தச் சாலையில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே, கொளத்துப்பாளையம் அருகில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும். நீண்டநாளைய கோரிக்கையான இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அமராவதி ஆற்றின் குறுக்கே வெள்ளக்கோவில் ஒன்றியம், மயில்ரங்கத்தையும், மூலனூர் ஒன்றியம் மேட்டூரையும் இணைக்கின்ற அளவிலே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டும்.





அதைப்போல, தாராபுரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சியில், சின்னக்கவுண்டம்பாளையத்தையும், கோணாபுரத்தையும் இணைக்கின்ற அளவிலே உப்பாற்றுக்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு சம்பவத்தைப் பற்றி மட்டும் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். கடந்த 1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையைக் காரணம் காட்டி அன்றைக்கு ஆட்சி ஏறிய ஜெயலலிதா அவர்கள் கடந்த ஐந்தாண்டு காலம், தொட்டில் குழந்தை திட்டம் முதல் சுடுகாட்டுத் திட்டம் வரை கொள்ளையடித்தார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டு காலம் இந்த நாட்டு வருவாயை அவர்களுடைய வருவாயாகப் பெருக்கிக் கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களால் பாராட்ட மனம் வரவில்லை. அவர்களோடு இன்றைக்கு அரசியல் சூழ்நிலைக்காகவும், ஆதாயத்திற்காகவும் கூட்டு சேர்ந்து கொண்ட மரியாதைக்குரிய டாக்டர் இராமதாஸ் அவர்கள், அவர்களோடு உறவு வைத்துக்கொண்டதால் சகோதரியோடு, தாயோடு உறவு என்று சொல்லி, அவர்களோடு சேர்ந்துகொண்டு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட அவர்களுக்கு மனம் வரவில்லை. ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியை ஒழிக்கும்வரை ஓயமாட்டேன் என்று நடையாய் நடந்த கோபால்சாமி அவர்கள், அன்றைக்கு ஆளுநராக இருந்த மேதகு சென்னாரெட்டி அவர்களிடம் முறையிட்டுவிட்டு, இப்போது தேர்தல் உறவு வைத்துக்கொண்டதால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட அவருக்கும் மனம் வரவில்லை. அதைப்போல, அப்போது ஊழல் குற்றச்சாட்டுச் சொன்ன வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களுக்கும் பாராட்ட மனம் வரவில்லை. அதுபோல, ஜெயலலிதாமீது வழக்குத் தொடர்ந்த சுப்பிரமணியன் சுவாமி அவர்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட மனம் வரவில்லை. ஆனால், குப்பனும், சுப்பனும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், அவர்களோடு சேர்ந்து நானும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆன் டி' மான்டி.

**Tmt. ANNE D' MONTE:** Hon. Speaker, Sir, Let me, at the outset, congratulate our Hon. Chief Minister and the Government of

Tamil Nadu, on what I see as a well balanced and welfare oriented Budget. The Budget has certainly laid emphasis on Rural, Agricultural and Social Development. Positively, it is a growth oriented Budget.

The proposal to establish a Business-cum-Financial centre is not only novel but also timely. The move to remove edible oil and computer software from the tax net. is a boon to the middle class people. Altogether, it is a people's Budget and it will positively please the man in the street.

I particularly welcome the educational measures. In the 50th year of India's Independence, the Budget has certainly done justice to the goal of 'Primary Education for all'. It aims at reaching villages through the Primary Eduction system. I think it is an opportune time to have a fresh outlook at the Primary Education as it now functions and to consider ways and means to correct the shortfalls and tone up the system, making it more responsive to the needs of the day.

Regarding Kindergarten, as we all know, the education offered to a child before he/she reaches the age of five is called Pre-School Education. At this stage, the children are expected to be given 'Sensory Training' through observation and real experience of life. They are more adapted to see, smell, touch and taste and thereby formulate perception and concept. They enjoy singing, dancing, playing and acting, according to their natural aptitudes. In our Constitution, we have to make Pre-School Education as a Fundamental Right. There should be Rules and Regulations for establishing and running Pre-Schools.

*பிற்பகல் 12-55*

My biggest problem, Sir, is Housing. I would like to touch the matter over and over again. Once I made a special plea to the Hon.Chief Minister for allotment of tenements through Slum Clearance Board for the poor Anglo-Indian Community. There are atleast over 500 families who are in dire need of accommodation. The Budget proposes for the contruction of 2000 multi-storeyed tenements during the current year and 3000 multi-storeyed tenements in the next year I appeal to the Government to allot atleast 100 tenements for this year and 100 for the next year for this poor community where most of the people are at the hands of ruthless landlords. All I am asking is 5% quota of your tenements' proposal of this year and the next.



I am not exaggerating when I say this because this is a pressing need for the community. I request the Government to please come to the aid of this small and suffering community.

I would like to touch on the aid for widows, physically handicapped and the aged. I welcome the proposal to increase the monthly aid. But in the first year, inspite of your help, there is unduly long delay for the sanction. There should be a time-frame for sanctioning this aid.

One more matter which I would like to draw the attention of our Government is the matter of sports and games. The Budget does not say anything about development of sports and games. Even if the expenditure of this account is carried by education, there should be some reference on the development of sports. Children need this outlet for their energy and I think that involving themselves in some sports or the other will keep them away from bad nasty habits. Sports is a very healthy diversion for children and this should be encouraged.

Winning of an Olympic Medal is another thing altogether, which is a distant dream. Development of sports has to start with play field in every village and town. Let Tamil Nadu take the lead by making available this play field and let Tamil Nadu produce the best sportsmen. This would encourage the next generation for testing their energy and enthusiasm.

I would like to suggest setting up of a corporate body as in United Kingdom where National Playing Field Association is in existence. I appeal to the Hon.Chief Minister to please look into this matter.

With this, I thank you for giving me this opportunity to speak. Thank you, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்தியிலே ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆசியாவிலேயே மிகச் சிறந்த நிதியமைச்சராக இருந்த நம்முடைய மரியாதைக்குரிய பொருளாதார மேதை திரு. ப. சிதம்பரம் அவர்கள் வி.டி.ஐ.எஸ். திட்டத்தின் மூலமாக*

10,600 கோடி ரூபாயைப் பெற்று எல்லா மாநிலங்களுக்கும் கொடுத்து, தலைசிறந்த நிதியமைச்சராக விளங்கினார்கள். அதேபோன்று தொழிலமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்கள் என்றும் இல்லாத அளவிற்கு தமிழகத்திற்கு 36,000 கோடி ரூபாய் அளவில் தொழில் முதலீடு பெற்றுத் தந்து, எங்கள் நெல்லை மாவட்டத்திலே, நாங்குநேரியிலே 7,000 கோடி ரூபாய்க்கான ஒரு தொழிற் பூங்காவைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெற்றுத் தரப்பட்டது.

என்றும் இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட 10 சதவீதத்திற்கு மேல், இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாக சாலை அபிவிருத்திக்கு மிகச் சிறந்த முறையிலே இருந்த மத்திய அரசினுடைய செயல்பாட்டினால், நல்ல முறையிலே கிழக்குக் கடற்கரைச் சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றோம்.

மேலும் தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசானது மிகச் சீரிய முறையிலே நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். 12,000 இடைநிலை ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். யாரிடமாவது 1 ரூபாய் லஞ்ச, லாவண்யம் பெற்றார்களா? விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்கூட லஞ்சம் பெறாமல் இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு எதிராகப் போடப்பட்ட அரசு ஆணை எண் 340 ரத்துச் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக அரசு ஆணை எண் 525 போடப்பட்டது. அதன்படி 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அளவில் கல்வியின் தரத்தை உயர்த்தி நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் மாற்றித் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த கால ஆட்சியிலே கிடப்பிலே போடப்பட்ட திட்டங்களையெல்லாம் ஓடோடிச் சென்று பார்வையிட்டு, அவற்றிற்கு நிதி ஒதுக்கி, வேலைகள் விரைவாகச் செயல்படுவதோடு மட்டுமின்றி, ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள குளங்கள் நீண்ட நெடுங்காலமாக மராமத்துச் செய்யப்படாமல் இருந்தால், அதற்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ரூ.10 இலட்சம் கொடுத்ததோடு, நின்றுவிடாமல், இதுவரை மராமத்துச் செய்யப்படாத கால்வாய்களுக்கும், குளங்களுக்கும் மிக அதிக அளவில் நிதியொதுக்கீடு





செய்து, மிகச் சிறந்த முறையிலே, ஊழலற்ற முறையிலே அந்தப் பணிகளெல்லாம் மிகச் சிறப்பாக நடைபெற்று, வருகின்றன.

எல்லாச் சட்டமன்றத் தொகுதிகளுக்கும். தொகுதிக்கு இரண்டு பேருந்து வழித்தடங்கள் என்ற முறையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பட்டிதொட்டிகளுக்கெல்லாம், பேருந்தைப் பார்க்காத மக்களும் பார்க்கின்ற, பயனடைகின்ற வகையில் ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இந்த அளவில் நாம் இந்த ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியத்தைக் கொடுத்து 'சொன்னதைச் செய்பவன் நான்' என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிரூபித்து இருக்கிறார்கள். கிராமத்திலே சாதாரணமாகச் சொல்வார்கள், 'கட்டிய வீட்டிற்கு வக்கணை வைப்பதற்கு 100 பேர் வருவார்கள்' என்று. ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு, உழைத்து, சம்பாதித்து, இரவு பகலாகப் பாடுபட்டு ஒரு வீட்டைக் கட்டினால் அதைக் குறை சொல்வதற்கென்று அந்த வீட்டின் விசேடத்திற்கு வரும்போது, 'இந்த வீட்டை அப்படிக் கட்டியிருக்கலாமே, இப்படிக் கட்டியிருக்கலாமே' என்று தங்களுடைய ஆதங்கத்தைப் பொறாமையின் வெளிப்பாடாகச் சொல்வார்கள். சிலர், 'ஆஹா, அருமையாக இந்த வீட்டைக் கட்டியிருக்கிறார்கள்' என்று உண்மையிலேயே மனமார வாழ்த்துவார்கள். அவ்வாறு மனமார வாழ்த்திக் கொண்டிருப்பவர்கள்தான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள் என்பதை உங்கள் மத்தியிலே இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொறாமை உணர்வோடு அல்ல; நீங்கள் செய்ததை ஆக்கப்பூர்வமாக நாங்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

இருந்தாலும், சில குறைபாடுகள் இருந்தால், அவற்றை ஆலோசனையாகத்தான் உங்கள் முன் வைக்கின்றோமே தவிர, குற்றங்குறையாக நாங்கள் சொல்லவில்லை என்று நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு சிறந்த முறையிலே நடந்து வருகின்ற நல்லாட்சியின்மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, அங்கிங்கும் வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இங்கே இருக்கின்ற அனைவருக்கும் தெரியும். இது திட்டமிட்டுச் செய்யப்படுகின்றது என்றே நாங்கள் எண்ணுகிறோம்.

[திரு. மு. அப்பாவு] [1998 ஏப்ரல் 1

காரணம், அமைதியாக இருக்கின்ற இந்தத் தமிழகத்தில் இப்படிப்பட்ட சில காரியங்களைச் செய்தால் தங்களுடைய எண்ணங்கள் ஈடேறுமோ என்ற நப்பாசையுடன் இருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள். இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகக் காவல் துறையைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள், 75 சதவிகிதம் ஈரல் கெட்டுவிட்டது என்று. ஆனால், நான் ஒன்றை நினைக்கின்றேன், நிச்சயமாக அவர்கள் ஈரல் கெட்டுவிடவில்லை. எப்படிப்பட்ட ஆட்சி வந்தால் எப்படி நடக்க வேண்டுமோ, எப்படி வேலை பார்க்க வேண்டுமோ. அந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு மிகச் சிறந்ததொரு பயிற்சி பெற்றவர்கள்தான் நம்முடைய தமிழகக் காவல் துறையினர். கடந்த கால ஊழல் ஆட்சியிலே அந்த அரசுக்கு எதிராக ஒருவர் வழக்குத் தொடர்ந்தால், ஆள் வைத்து அடிப்பார்கள். அடித்தவர்களை விட்டுவிட்டு, யாரோ இருவர்மீது வழக்குகளைப் பதியச் சொல்வார்கள். அதை அவ்வாறே பதிந்தார்கள் காவல் துறையினர், அந்தக் காலத்தில். ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், யாராக இருந்தாலும், முறைகேடாக, தவறாக நடந்து கொண்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது இந்த அரசு. இன்னார் என்றோ, அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்றோ, ஆளும் கட்சிக்குச் சார்புள்ளவர் என்றோ விட்டுவிடவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் presence of mind - சமயோசித புத்திக்கு நிகர் அவர்கள்தான் என்றே கூறவேண்டும். ஆகவே, இந்த காவல்துறையில் உள்ள பிரச்சினைக்கும் ஒரு முடிவினைக் கொண்டு வரவேண்டும்.

இன்று காவல் துறையினர் விரக்தியோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக இந்த அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதாக நான் கருதவில்லை. அவர்களால் முடியாதது எதுவுமே கிடையாது. ஆனால், அவர்கள் உள்ளத்தில் ஏதோ ஒன்று இருக்கிறது. கேரளாவிலே சங்கம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு சங்கம் அமைத்திருக்கின்றார்கள். அங்கே 8 மணி நேரம்தான் அவர்களுக்கு டியூட்டி வழங்கப்படுகிறது. லா அண்டு ஆர்டர் வருகின்றபோது 8 மணி நேரம் என்று இல்லாமல், 24 மணி நேரமும் உழைக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆகவே, அதேபோன்று, அவர்கள் கேட்டால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்தில், அந்தச் சங்கத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அந்தச் சங்கத்தைச் செயல்படுத்துவதற்கு, அவர்களின் உள்ளத்தின் ஆழத்தில் இருப்பதை



1998 ஏப்ரல் 1] [திரு. மு. அப்பாவு]

நீங்கள் அறிந்து, தெரிந்து, உங்களால்தான் அதைச் செய்திட முடியும், அந்தச் சங்கத்தை அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

1971ஆம் ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், இடைநிலை ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தை அவர்களுக்கு வழங்கினார்கள். அந்த ஊதியம் தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இன்றுகூட விருதுநகரில், 'சாலை மறியல்' என்று பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அதேபோன்று, எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே பாதி விலையில் ரேஷன் வழங்கப்பட்டது. அது தற்போது 87 சதவிகிதமாக, அவர்கள் சம்பளத்திலே பிடித்தம் செய்து, ரேஷன் கொடுக்கிறார்கள் என்று அவர்கள் உள்ளத்திடையே மிகப்பெரிய ஒரு சங்கடத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைச் சரிசெய்து, தமிழகக் காவல் துறையை, இந்தியாவிலேயே மிகச்சிறந்த ஒரு காவல் துறையாக மாற்றுவதற்கு உத்தரவிடவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, ரேஷன் கார்டுகள், இரண்டு மூன்று வண்ணங்களில் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. தேர்தல் அறிவித்த ஒருமாத காலத்தில், தேர்தல் சீட்டுகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு, உடனடியாகத் தேர்தல் நடைபெற்று, மிகச்சிறந்த முறையிலே நடைபெறுகின்ற இந்தக் காலகட்டத்திலே, 2 வண்ணம், 3 வண்ணம் என்று இல்லாமல், 'ஏ', 'பி' என்று ஒரே வண்ணமாக, விரைவாக அந்தக் குடும்ப அட்டைகளை அச்சடித்து, தமிழகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் வழங்குகிற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மிகச் சிறந்த முறையிலே பணியாற்றுகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் வந்தாலும்கூட, அத்தனை பேர்களும் கொடுக்கிற குறைகளையும் பார்வையிட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து வருகிறார்கள். 6,7,8 வகுப்புகளுக்கு, கல்வியினுடைய தரத்தை மனதிலே வைத்து, பி.எட். படித்தவர்களை ஆசிரியர்களாகப் போடலாம் என்ற நிலை முன்பிருந்தது. அதைக் கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் மாற்றி, ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளுக்கு, பி.எட். படித்தவர்களைப் போடக் கூடாது என்ற ஒரு

[திரு. மு. அப்பாவு] [1998 ஏப்ரல் 1

நிலையைக் கொண்டு வந்தார்கள். அதைத் தயவுசெய்து, கருணையோடு பரிசீலித்து, பி.எட். பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாக இருப்பதால், அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்றும், அதற்கான உத்தரவாதத்தை நீங்கள் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

லாரி ஒன்றுக்கு, கடந்த காலங்களிலே அனுமதியில்லாமல் மண்ணை கொண்டு சென்றால், 2,500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அது கடந்தகால ஆட்சியிலே, 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. அது தற்போது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். மண்ணை லாரி மூலமாகக் கொண்டு போவதற்குப், பெர்மிட் வாங்க வேண்டுமென்று சென்றால், 6 மாதம், ஒரு வருடம் ஆனாலுங்கூட, அவர்களுக்குப் 'பெர்மிட்' வழங்கப்படுவதில்லை. ஒரு அவசரத்திற்கு, தோட்டத்திற்குக்கூட மண் வேண்டுமென்றால், அதனை லாரியிலோ, டிராக்டரிலோ கொண்டு சென்றால், அவ்வாறு கொண்டு செல்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** வெளிநாட்டுக்கு மிகப்பெரிய இரகசியத்தைக் கடத்தியதுபோன்று, மிகப் பெரிய கொலைக் குற்றம் செய்தது போன்று, அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று, அந்த லாரியைப் பிடித்து ஒரு மாதம், 2 மாதங்கள் வைத்திருந்தால், அந்த லாரியினுடைய நிலை என்ன ஆகும்? அதன் டையர் என்ன நிலையில் இருக்கும்? ஆகவே, கடந்த காலத்தில் இருந்ததைப் போன்று, ரூ.2,500 வீதமே பெர்மிட் இல்லாதவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அண்ணா அவர்களுக்கும், பெரியார் அவர்களுக்கும் இன்னும் எத்தனையோ பேர்களுக்கும் மணி மண்டபங்கள் கட்டிச், சிறப்பிக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இறந்து, அவருடைய அஸ்தி கன்னியாகுமரியிலே வைக்கப்பட்ட இடம் அலங்கோல நிலையிலே இருக்கிறது; கடந்த வரவு-செலவுக் கூட்டத்திலேகூட, காமராஜருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்று கூறினார்கள். தயவுசெய்து, உங்களுக்கு அதுகுறித்து ஞாபகப்படுத்துகிறேன். இந்த



1998 ஏப்ரல் 1] [திரு. மு. அப்பாவு]

ஆண்டு, கன்னியாகுமரியில், பெருந்தலைவர் காமராஜருடைய அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில், தயவுசெய்து மணிமண்டபம் கட்டவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1989-90 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், ஒரு தெரு விளக்கு அமைக்க வேண்டுமென்றால், வைப்பு நிதியாக 75 ரூபாய்தான் கட்டவேண்டும். தற்போது ரூ.3,200 கட்டவேண்டுமென்ற நிலை இருக்கிறது. நம்முடைய கடந்தகால ஆட்சியிலே இருந்ததைப் போன்றே, 75 ரூபாய் வைப்பு நிதியாகக் கட்டினால் ஒரு தெரு விளக்கு அமைப்பதற்கான அனுமதியளிக்கக்கூடிய திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இலவச பஸ் பாஸ் 12ஆம் வகுப்பு வரை நம்முடைய ஆட்சியிலே கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் ஜூன் மாதம் முதல் மார்ச் மாதம் வரைதான் அது வழங்கப்படுகிறது. 1 முதல் 8ஆம் வகுப்புவரை உள்ள மாணவ, மாணவியர்கள் ஏப்ரல் மாதம்வரை பள்ளிக்குச் செல்கிறார்கள். ஆகவே ஏப்ரல் மாதம்வரை அதை நீட்டித்துத் தர வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், தமிழகத்தில் மின்வெட்டு அதிகமாக இருக்கிறது. என்னுடைய தொகுதி (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஊர்க் கதையை எல்லாம் பேசிவிட்டு, பிறகு ஒரு நிமிடம் என்றால் எப்படி? திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணுமின் நிலையத்திற்காக 1974ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினர்கள் பேசிக் கொண்டு வருகிறார்கள். அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வீட்டுக்கு தீர்வை ரசீது போடமுடியவில்லை. ஆகவே அதை மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டம் என்று வருகின்றதோ அன்றுவரை அந்தப் பகுதி மக்களுக்கு ரேஷன் கார்டுகளும், வீட்டு

[திரு. மு. அப்பாவு] [1998 ஏப்ரல் 1

வரி ரசீதும் போடப்பட்டு வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் 1992 முதல் .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவான ஆளுநர் உரையைத் தொடர்ந்து நிம்மதி தருகிற நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறளோவியம், ரோமாபுரி பாண்டியன் போன்ற கருத்தோவியங்களைத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தங்கத் தமிழால் தமிழகத்தின் முன்னேற்றத்திற்குத் தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையான. இது நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல, நீதிநிலை அறிக்கையாகவும். சமூக நீதி காக்கின்ற அறிக்கையாகவும் அமைந்திருப்பது குறித்து அனைவரும் பாராட்டியதைப் போல எளியவன் நானும் பாராட்டுகிறேன்.

திருக்குறளில் எந்தக் குறளையும் எந்தச் சூழ்நிலையிலும் யாரும் புறக்கணித்துவிட முடியாது. அதுபோல, எக்காலத்திற்கும் எம்மதத்திற்கும் சொந்தமான திருக்குறளைப்போல இந்தச் சமூக நீதிக் காவலர் தந்திருக்கின்ற அறிக்கையும் அமைந்து இருக்கிறது. கழிந்த ஆண்டு 1997-98ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் அறிக்கையை வைத்தபோது இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற அறிஞர் பெருமக்களும், அரசியல் வித்தகர்களும் நடுநிலைப் பத்திரிகைகளும், நல்லவர்களும் பாராட்டினார்கள். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய நிதியமைச்சர் மனம் திறந்து பாராட்டினார். அந்தப் பாராட்டுக்களைக் கேட்கிறபோது, இந்த முதல்வரை தமிழகத்திற்கும், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் வழிகாட்ட தந்த. அவரைப் பெற்ற அஞ்சுகத் தாயும், முத்துவேலரும் இருந்திருந்தால் எப்படிப் பாச மழையைப் பொழிந்து மகிழ்ந்து இருப்பார்களோ. அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்ற ஏக்க உணர்வோடு இருக்கிற இப்போது, இந்த மாமன்றத்தில் ஆயிரம் விளக்குத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும், இந்த மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், அருமைப் பெரியவர் ஐயா முத்துவேலர், அஞ்சுகத் தாயினுடைய பேரன் வீற்றிருந்து இதை



1998 ஏப்ரல் 1] [திரு. இரா. பொன்னார்டு]

நிறைவு செய்வது மகிழ்ச்சி தருகிறது. நான் மகிழ்ச்சியோடு அதைப் பாராட்டுகிறேன். "தன்னைத் தானே தாழ்த்திக்கொள்பவன் என்னால் உயர்த்தப்படுவான்." "ஏழைகளின்மீது இரக்கப்படுகிறவன் பாக்கியவான்." யார் அந்தப் பாக்கியவான்.?" யார் தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டவர் என்ற நிலையிலே பார்க்கிறபோது, இந்த மாமன்றத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்து அன்றையதினம் திரு. ஹண்டே அவர்கள் சொன்னார்கள், "இது மூன்றாந்தர ஆட்சி" என்று. அடக்கமும், அமைதியும் கொண்ட, ஏழையெளிவர்களைத் தூக்கிவிடவும், பிற்படுத்தப்பட்ட, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்களைத் தூக்கிவிடவும் சிந்திக்கின்ற இந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக எழுந்து "திரு. ஹண்டே அவர்களே திருத்திக்கொள்ள வேண்டும், இது மூன்றாந்தர ஆட்சி அல்ல நான்காம்தர ஆட்சி". இன்னும் சொல்லப்போனால் சூத்திரர்களுடைய ஆட்சி" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த வகையில் தான், தங்களுடைய அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணாவினுடைய ஏழையின் சிரிப்பில்தான் இறைவனைக் காண வேண்டுமென்ற சிந்தனையில் எழுந்த உணர்வின் அடிப்படையில் தந்திருக்கிற அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை என்று சொல்லுவதை இன்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். பகைவர்கள்கூட நிதிநிலை அறிக்கையை உள்ளத்தால் பாராட்டி மகிழ்கிறார்கள். நானும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டி மகிழ்கிறேன். உணவு, உடை, இருப்பிடம் போன்ற எல்லாப் பிரச்சினைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். நான் அவற்றை வழிமொழிகிறேன்.

பிற்பகல் 1-15

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'. 'ஆலையம் தொழுவது சாலவும் நன்று' என்பது முன்பு பேசப்பட்டதாகும். ஆனால் இன்று அறிவாலயம் கண்ட நம்முடைய கலைஞர் அவர்கள், கிராமத்தில் இந்து மத கோயில்கள் இல்லாமல் இருக்கலாம், இஸ்லாமியத் தொழுகைப் பள்ளிகள் இல்லாமல் இருக்கலாம், கிருஸ்தவத் தேவாலயங்கள் இல்லாமல் இருக்கலாம், ஆனால் அறிவைத் தருகின்ற கல்வி நிலையங்கள், ஆரம்பக் கல்வி நிலையங்கள் கிராமங்களே இல்லாமல் இருக்கக்கூடாது என்ற வரியைச் சேர்த்தது நிதிநிலை அறிக்கைக்கு மிகப் பெரியச் சிறப்பாக அமைகிறது. நீண்ட சிந்தனைக்குப்

[திரு. இரா. பெர்னார்டு] [1998 ஏப்ரல் 1

பிறகு, ஏன் நீண்ட வேதனைக்குப் பிறகு, தலைவருடைய எண்ணத்திலே தோன்றியது 'நாடு இன்னும் விழிப்படையவில்லை, நாட்டு மக்கள் இன்னும் தெளிவாக சிந்திக்கவில்லை, தெளிவாகச் சிந்தித்து தெளிவாகச் சொல்லவில்லை. சொல்லியபடி செயல்படவில்லை, செயலை மக்களுக்கு விளக்கிடவில்லை என்பதாகும். ஆகவேதான், இந்த நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும் குண்டு வெடிக்கிறது. சாதிச் சண்டைகள், மதச் சண்டைகள் உருவாகின்றன என்ற வேதனையோடு, அதை மாற்ற வேண்டுமானால் நகரங்கள் முன்னேறி இருப்பதைப்போல் கிராமங்கள் முன்னேறியாகவேண்டும். அப்படி முன்னேற வேண்டுமானால் அங்கே பள்ளிக்கூடங்கள் அமைந்து பள்ளிக் கல்வி வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு நம்முடைய தலைவர் அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிகளை உருவாக்கினால், யாரால் அவற்றைச் செம்மையாக செயல்படுத்திட முடியும் என்று எண்ணிய நம்முடைய முதல்வர் அவர்கள்

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருக்குறளுக்கு ஏற்ப, துரோகத்திற்கு என்றுமே துணை போகாத, தனக்குத் துணையாக இருக்கின்ற பேராசிரியரை அந்த இலாக்காவின் பொறுப்பிலே வைத்துச் சிறப்பித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

மாநில அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்திற்கு ஈடாகச் சம்பளம் கொடுப்பதற்கு ஆணையிட்ட கருணை உள்ளத்தை நான் பாராட்டுகிறேன்.

நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற பொருட்களுக்கான வரியை ரத்துச் செய்ததற்காக, குறைத்ததற்காக என்னுடைய இதய பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடி குடியைக் கெடுக்கும், வீட்டையும், நாட்டையும் கெடுக்கும் என்ற நிலையில், மதுவைக் குடிக்கின்ற உணர்வு குறைகின்ற வகையில், அதற்கான வரியைக் கூட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் பான் மசாலா மீதான வரியைக் கூட்டியிருப்பதையும் நான் வரவேற்கிறேன்.



1998 ஏப்ரல் 1] [திரு. இரா. பெர்னார்டு]

5ஆம் வகுப்பு வரை இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்கவிருப்பதையும், பள்ளிப் புத்தகங்களை இலவசமாகக் கொடுக்கவிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். வாய்ப்பு ஏற்படுமானால் இச்சலுகையை 8 ஆம் வகுப்புவரை நீட்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு பெண் 8ஆம் வகுப்பு வரை படித்தால், அவள் ஏழையாக இருந்தால் திருமண உதவித் தொகை கொடுப்பதுபோல், இலவசக் கல்வித் திட்டத்தையும் 8 ஆம் வகுப்பு வரை நீட்டித்தால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் முந்தைய கூட்டத் தொடரில் நான் பேசினேன். தற்போது மகாராஷ்டிராவிலிருந்தும், மத்தியத் தொகுப்பிலிருந்தும் மின்சாரம் பெற முயற்சி எடுத்ததற்காக நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

ஆறு, குளங்களைத் தூர் வாரி, பழுது பார்க்க முன் வந்திருப்பதற்காகப் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆசாரிப்பள்ளம் காசநோய் மருத்துவமனை ஏறத்தாழ 110 ஏக்கர் நிலத்தில் உள்ளது. அதை ஒரு மருத்துவக் கல்லூரியாக ஆக்குவதற்கு நீர் வளம், நில வளம், மாவட்டத் தலைமை மருத்துவமனை அருகில் உள்ளது. இது போன்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே அங்கே மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குளச்சல் துறைமுகத்தை மேம்பாட்டு திட்டத்தில் எடுத்துக்கொண்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு, பல்வேறு வகைகளில் உதவி செய்வதை நான் பாராட்டுகிறேன். . கச்சத் தீவை மீட்பதுதான் நியாயம் என்றாலும், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தத் தீவை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பொதுவானது என்று ஆக்குகின்ற முயற்சியில் நம்முடைய முதல்வர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றி எடுத்துள்ள முயற்சிகளுக்கு மீனவப் பெருங்குடி மக்கள் சார்பாக பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கடலோர இணைப்புச் சாலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களின் நலன் கருதி பல்வேறு பிரிவினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, குறிப்பாக மதம் மாறிய கிருஸ்தவர், மீனவர், பரவர் சமுதாயத்தை மாநிலம் முழுவதும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தீர்கள். ஏதோ சூழ்நிலை காரணமாக குமரி மாவட்டத்திலே வாழுகின்ற மீனவ கிறிஸ்துவர் பரவர் மட்டும் அதிலே விடுபட்டுவிட்டது. அதைக் கருணையோடு பரிசீலித்து அந்தக் குறையை நீக்கித் தந்துவிட வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1-20*

வாதம் கூடாது, பிடிவாதம் கூடாது என்பார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்தமட்டில் வாதங்கள் செய்வதில் அவர்கள் சிறந்தவர். பிடிவாதம் காட்டமாட்டார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, நட்டத்தில் போகக்கூடிய சூழ்நிலையில் போக்குவரத்துத் துறையில் இழப்பு ஏற்பட்டபோதும் எல்லோருடைய கருத்தையும் ஏற்றுக்கொண்டு பிடிவாதம் காட்டாமல் கட்டணச் சலுகையைக் கொடுத்தமைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் வல்ல என்னுடைய இதயநாயகன் முருகனையும் என்னுடைய தலைவர் மூப்பனார் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். பேரவைத் தலைவரை, என்றைக்குமே நான் வணங்கிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரை என்றைக்குமே வணங்கிக் கொண்டிருக்கிறேன் என்கிறார். அப்படியானால் முருகனையும் மூப்பனாரையும் இன்றைக்கு மாத்திரம்தான் வணங்குகிறாரா? (சிரிப்பு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** முருகனையும் மூப்பனாரையும் வணங்குவது மட்டுமல்ல, மீனாட்சியினுடைய அருள் கடாட்சத்தோடு





அமர்ந்திருக்கின்ற பேரவைத் தலைவரை எப்போதுமே நெஞ்சில் இருத்திக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குத் தந்தைதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆகவே, அவர்களையும் நினைத்துத்தான் பேச வேண்டும்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அவர்களையும் சேர்த்துத்தான் உண்மையிலே நான் மனதார வணங்கி, இந்த நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த அவர்களை என்னுடைய தலைவர் பாராட்டியதைப் போல, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்து இன்றைக்குக் கிராம மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களைக் கொடுத்தும்கூட நமக்கு ஒரு தோல்வி ஏற்பட்டிருக்கின்றது என்பதை நினைத்து என்னைப் போன்றவர்களெல்லாம் அது ஏன் என்று சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கடந்த ஆட்சியிலே இல்லாத அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 25 இலட்சம் பணம் ஒதுக்கித் தந்திருக்கின்றோம். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவரவர்களுடைய தொகுதியிலே மனநிறைவோடு சென்று பல்வேறு திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். ஏராளமாகக் குட்டைகளை வெட்டித் தந்திருக்கின்றோம். ரோடுகளைப் போட்டுத் தந்திருக்கிறோம். குடிநீர் கொடுத்திருக்கின்றோம். இப்படி நேரடித் தொடர்பு வைத்திருக்கின்ற சூழ்நிலையை நமது அரசுதான் உருவாக்கியிருக்கின்றது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.25 இலட்சத்தைக் கொடுத்து காரியங்களை முடுக்கி விட்டிருக்கின்றது அரசு. மக்கள் மத்தியிலே சென்று நாம் பணியாற்றியும் கூட இன்றைக்கு ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னால் அதைச் சிந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம். என்னைப் பொறுத்தவரையிலும் அதிகாரவர்க்கத்தினர் நமக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருக்கின்றார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுந்திருக்கின்றது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும் கிட்டத்தட்ட 32 குட்டைகள் வேண்டுமென்று சொல்லி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். 25 ஆண்டுகளாக ஒரு குட்டை கூட இல்லாத ஒரு சில கிராமங்களுக்குக் குட்டைகளைக் கொடுக்க நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரம் கொடுத்தார்கள்.

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1998 ஏப்ரல் 1

ஒவ்வொரு இடத்திலேயும் சென்று பார்த்தபோதெல்லாம் சொன்னார்கள். இதுவரை எந்த எம்.எல்.ஏ.வும் செய்யவில்லை, நீங்கள் செய்தீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஓட்டைப் பார்க்கும்போது கீழே போய்க் கொண்டிருக்கின்றது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்கு என்ன காரணம் என்று சிந்தித்து பார்க்கின்றபோதுதான், குறிப்பாக ரேஷன் கடையிலே சென்று பார்த்தால், கடந்த ஆட்சியிலே இருந்ததைப் போலத்தான் இன்னும் இருக்கின்றது என்று நினைக்கத் தோன்றுகிறது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு சின்ன விஷயத்திற்குக் கூட மக்கள் சென்று அதிகாரிகளை அணுகும்போது இன்னும் அந்தப் பழைய பாணியிலேதான் இருக்கின்றார்கள்.

இன்றைக்குப் பெரிய மனதோடு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநில அரசும் செய்யாத அளவுக்கு நம்முடைய அரசு, மத்தியப் பேரரசு கொடுக்கின்ற ஊதியத்தை தமிழக அரசு ஊழியர்களுக்கும் கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறது என்று சொன்னால், அவர்களுடைய குறைகள் களையப்பட்டிருக்கின்றன என்ற உணர்வோடு, இனிமேலாவது இந்த அரசுக்கு அவர்கள் நன்றியோடு பணியாற்ற வேண்டும்...

*பிற்பகல் 1-25*

**திரு. அ. வெங்கடாசலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order? ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது என்ன Point of Order? அவருக்குக் கொடுத்திருக்கிற நேரமே குறைச்சல்தான். இதிலே என்ன Point of Order கேட்கப் போகிறீர்கள்?

**திரு. அ. வெங்கடாசலம்:** அதாவது, தமிழ்நாட்டில் ஓட்டுக் குறைந்து போனதற்கு ரேஷன் கடைகளில் நடந்த ஊழல் என்று சொல்வது தவறு. ரேஷன் கடைகளில் ஊழலே நடக்கவில்லை. வேட்டி, சேலைகள் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் நூற்றுக்கு நூறு உண்மையான காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் Point of Order கிடையாது. இனிமேல், இப்படியெல்லாம் நீங்கள் எழுந்து நின்று பேசக்கூடாது. அது அவருடைய கருத்து. நீங்கள் யார் அதை மறுத்துச் சொல்வதற்கு?



1998 ஏப்ரல் 1]

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் ஒரு காரணம்தான். ஆனால், அதுவே முழுக்காரணமாக ஆகாது. ஆகவே, மக்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களை அதிகாரிகள் சிறப்பாகச் செயல்படுத்த முடியாததன் காரணமாகத்தான் தேர்தலில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இனிவரும் காலங்களில், அதிகாரிகள் அரசு கொடுத்திருக்கின்ற சலுகைகளை மனதிலே கொண்டு பணியாற்ற வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மக்களை அதிகமாகப் பாதிக்கக்கூடிய, குறிப்பாக, விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய விஷயம் மின்சாரம். நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கும்போது எல்லாம் எனக்குப் பெரிய மகிழ்ச்சி ஏற்படும். எந்தப் பிரச்சினையை அவர்கள்முன் எடுத்தச் சொன்னாலும், அவர்கள் மகிழ்ச்சியோடு, முக மலர்ச்சியோடு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மின்சாரம் என்று வரும்போது அவர்களுடைய முகம் சுருங்குவதை நான் பார்க்கிறேன். காரணம், எங்கேயோ ஒரு சிடுக்கு இருக்கிறது. அவர்களுக்கும் புரியாமல், அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் செய்கிற கோளாறினால், குளறுபடியினால், இன்றைக்கு எங்கே பார்த்தாலும் மின்சாரப் பற்றாக்குறை தமிழகத்திலே இருக்கிறது என்று அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே எடுத்துச்சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது.

இன்றைக்குக் காலையிலே எனக்குத் தொலைபேசியிலே செய்தி வந்தது. நாளை மறுநாள் என்னுடைய தொகுதியிலே உள்ள விவசாயிகள் எல்லாம் போராட்டம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். அவர்களிடம் நான், தயவுசெய்து அந்தமாதிரி செய்ய வேண்டாம், இப்போது அரசு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்று சொன்னேன். அவர்கள் சொல்வது என்னவென்றால், குறைவாக மின்சாரம் கிடைத்தாலும் பரவாயில்லை, குறைந்த நேரம் கொடுக்கட்டும், அது முழுமையாக எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதுதான் அந்த விவசாயிகளுடைய கோரிக்கை. மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்காவிட்டால், மோட்டார் காயில்கள் கருகிப் போய்விடும். பின்னர் விவசாயம் செய்வது முடியாத காரியம். மோட்டாரைப் பழுது பார்ப்பதற்குக்கூட வசதி இல்லாமல் இருக்கிற சூழ்நிலை உள்ளது. இந்த விஷயத்தை அவர்கள் என்னிடம் தொலைபேசியில் சொன்னார்கள். அதை, இன்றைக்கு அமைச்சர்

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1998 ஏப்ரல் 1

அவர்களிடம் காலையில் நான் தெரிவித்தேன். அவரும், இந்த விஷயத்தைக் கவனிப்பதாகச் சொன்னார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் அமைச்சர் நேரில் சென்று காரியங்களைச் செய்ய முடியாது. ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகள் உரிய நேரத்திலே, சரியான முறையிலே செயல்படுத்துவார்களேயானால், நிச்சயமாக இதுபோன்ற தவறுகள் எல்லாம் வராது என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள பிரச்சினை, மிக முக்கியமானது நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயும் சொல்லியிருக்கிறேன். அதை இன்றும் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். வெங்காயம் அதிகமாக விளையக்கூடியது எங்களுடைய பகுதி. எனவே, அங்கே ஒரு குளிர்பதன கோடவுன் வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள், ஏழு இடங்களிலே அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. அப்படி அமைக்கப்படும்பட்சத்தில் முன்னுரிமை கொடுத்து, என்னுடைய தொகுதிக்கு முதன்முதலில் குளிர்பதன கோடவுன் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொங்கலூர் தொகுதியில்-நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கும் தெரியும்-கால்நடை மருந்தகம் கட்டுவதற்காக, ரூபாய் 75 ஆயிரம் மதிப்புள்ள இடத்தை ஒருவர் நன்கொடையாகக் கொடுத்துள்ளார் அந்த இடத்தில் சிறந்த கால்நடை மருந்தகத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கல்லூரிக்குச் செல்ல, சுற்றியிருக்கின்ற கிராமங்களிலிருந்து எல்லாம் மக்கள் நகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே. எங்களுக்கு ஒரு கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் உங்களைப் பார்த்துக்கொண்டுதான் பேசுகிறேன். நீங்களும் கருணையோடு பார்க்கிறீர்கள். இன்னும் இரண்டு மூன்று நிமிடங்களில் என் உரையை முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத். தலைவர்:** நேரம், இல்லை நேரம் 1-30 மணியாகிவிட்டது. பேரவையின் அனுமதியுடன், பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



*1998 ஏப்ரல் 1]*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் வைத்திய வசதியில்லாமல் இருப்பது குறித்து நான் சென்றமுறை கேள்வி நேரத்தில் கேட்டேன். என்னுடைய பொங்கலூர் தொகுதிக்கு படுக்கை வசதி கொண்ட ஓர் ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் அவர்களும் கனிவோடு தருவதாகச் சொன்னார்கள். அதை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் அரையில் பேசுவதற்கு நேரம் அளித்தல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. எண்ணிக்கை அடிப்படையிலேதான் இனிமேல் பேச அனுமதிப்பேன் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். எனக்கு அரசியலில் வழிகாட்டியான மாண்புமிகு முதல்வர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவில் அதுபற்றி பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 7ஆம் தேதி நடக்கின்ற அலுவல் ஆய்வுக் குழுவில் அது குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்யப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

90. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகள் மற்றும் 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 07-04-1997 ஆம் நாளிட்ட 89ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை[illegible] 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நா[illegible] 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்ற[illegible]

2/8457

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

91. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

92. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

93. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் 1996-97ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

94. 1995-96ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செய்முறை குறித்த ஆண்டறிக்கை. (1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

95. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

96. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக், கிடங்கு நிறுவனத்தின் முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. 1962ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.